
தில்லை திருக்கோயில்



மணிவாசகர் பதிப்பகம்

டாக்டர் ச. மெய்யப்பன்

தில்லைத் திருக்கோயில்

பதிப்புச் செம்மல், தமிழவேள்
டாக்டர் ச. மெய்யப்பன்

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

மறுபதிப்பு : பிப்ரவரி, 1996.
திருவள்ளுவர் ஆண்டு : 2027
உரிமை : ஆசிரியர்க்கு

விலை ரூ. 7.50

காணிக்கை

தில்லைத் திருக்கோயில் நான்கு வீதிகளிலும் அங்கப் பிரதட்சணம் செய்தவரும் நாளும் குங்கிலிய தூப வழிபாடு செய்தவருமான

என் தந்தையார்

தவத்திரு பழ. சண்முகனார் அவர்களுக்கு

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம்	: 23069	சென்னை	: 561039
மதுரை	: 622853	கோவை	: 397155

அச்சிட்டோர் : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 013.
போன் : 5950958

கோயில் வாயில்

தில்லை! இந்தத் திருத்தலப் பெயரைச் சொல்லும் போது காதில் இன்பத் தேன் வந்து பாய்கிறது. இங்கே நடைபோடும் போது கால்களின் சாபங்கள் நீங்கிப் போகின்றன; இங்குதான் விழிகளுக்கு ஞானவிருந்து! பொற்சபையில் ஆடும் பூவடியின் நடம் கண்டு பிறவியே பெருமை பெறுவது இங்கல்லவா!

கால் நூற்றாண்டாக வழிபட்டு நெஞ்சம் 'பக்திவீணை' யானதில் பெருமை கொள்கிறேன். 'தில்லைத் திருக் கோயில்' நூல் ஆக்கத்திற்கு இங்கே வாழ்ந்த வாழ்க்கை தான் புள்ளி வைத்தது; நினைவுகள் கோலம் போட்டன; விண்ணை ஞான வெளியாக்கித் தொட்டுத்தொழும் நான்கு கோபுரங்கள், மண்ணில் மனித சாதனைக்கான 'ஆத்ம ஜயத்தின்' அடையாளங்கள்; இங்கே முழங்கும் கோயில் மணியோசை சிந்தனையை வருடி இதயத்தைச் சிவலோகம் ஆக்கும். நான்கு வீதிகளில் நடைபோடுகையில் புண்ணியத் தலத்தில் நடக்கும் புளகாங்கிதம் பெறுகிறோம்; திருமுறை ஓசை கேட்கும்போது, 'நால்வர்' நினைவுகளில் அகம்மகிழ்வோம்; ஆண்டுக்கான ஆறு மகா அபிடேகங்கள் ஆறுசூடியவனின் 'ஞானக் குளியல்' காட்டி அவனது 'பொன்னார் திருமேனி' தரிசனத்தைக் காட்டும்; அப் பொழுது அல்லவோ, 'மனித்தப் பிறவி' யின் பயனை அனுபவிக்கின்றோம்; ஆண்டில் நடைபெறும் 'இருதரிசனக் காலங்களில் தில்லைதான் சொர்க்கம்; தேவலோகம்! பக்தகோடிகளின் 'பாரமார்த்திக' வெள்ளத்தில் ஒரு திவலையாக இருந்து 'ஆனந்தம்' கண்டு வருகிற எனக்கு இந்த நூலைத் தருவதில் எல்லையில்லா மகிழ்ச்சி! சிற்றம் பலம் தந்த சிந்தனைகள் இதனுள் களிநடம் புரிகின்றன. மணிவாசகப் பேறுபெற்ற 'மணிவாசகர் பதிப்பகம்' தானே இதனை வெளியிட முடியும்! எதிர்காலத்தில் பெரிய நூல் தோன்றுதற்கு இஃது ஒரு தோற்றுவாய்; இவ்வரிசையில் 'கலைநிறைந்த காஞ்சி', 'தமிழ்சிறந்த மதுரை', 'தேரோடும் திருவாரூர்', 'ஒளிக்குன்று திருவண்ணாமலை' ஆகிய நூல்கள் மலர' சிற்றம்பலவனின் மலர்சிலம்படி களை வாழ்த்தி வணங்குவோம்! நன்றி.

ச. மெய்யப்பன்

பொருளடக்கம்

திருச்சிற்றம்பலம்

1. தலமும் இருப்பிடமும்

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே.

—திருஞானசம்பந்தர்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் பூவுலகின் புனிதபூமி - பூலோக சொர்க்கம். இவ்வாறு போற்றிக் கூறுவதற்கேற்பத் தெய்வமணங் கமழ்வது தமிழ்நாடு. தமிழுக்கு அமிழ்து என்ற பெயர் போலத் தமிழுக்குச் சிவம் என்பதும், தமிழே சிவம் என்பதும், தமிழகமே சிவாலயம் என்பதும் பொருந்தும்.

பூகோளத்தின் முதல்தோற்றம் தென்குமரிக்கண்டம் என்பர் அறிஞர். அத்தென் தமிழகத்துத் தோன்றிய நுதல்விழிச் செல்வனே எந்நாட்டவரும் ஏற்றிப் போற்றும் இறைவனாக ஒளிர்கின்றான். முதலில் தோற்றமுற்ற மண்ணிலேயே முதல்வனும் தோன்றுவான். எனவேதான் மணிவாசகப் பெருமானும் 'தென்னா டுடைய சிவனே போற்றி' என்று பூ முதல்வனின் தோற்றப் பழமையைக் கூறி உணர்த்தினார்.

சிவனால் தமிழகம் பெற்ற அருளும், சீர்மையும் பற்றி அறிய தமிழிலக்கியங்களும், அவற்றுள் சிறப்பாக வழிபாட்டு இலக்கியங்களுமே சாலும். சிற்றூரரால் சீர்பெற்ற தமிழகம், சிவத்தலங்களால் பேர்பெற்றமை உலகறிந்த உண்மை. திருத்தணிகை முதல் தென்குமரி வரை இடைப்பட்ட நிலத்தில் நிறைந்து விளங்கும்

கோயில் தலங்களும், கோபுரங்களும் சிவனருள் மணக்கும் எழிற்கோலச் சின்னங்களாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றன் பெருமை உணர்த்த எழுந்த புராண இலக்கியங்கள், பிரபந்த இலக்கியங்கள், தேவாரத் திருப்பதிகங்கள், திருவிசைப்பாக்கள் தனிப்பாடல்கள், சித்தர் பாடல்கள் முதலிய அனைத்தும் சிவனருள் மணக்கும் அருள்நெறி நூல்களாகும். இவற்றோடன்றிக் கோயில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் சிவநெறி உணர்த்தும் வரலாற்றுச் செல்வங்களாகும்.

சிவம் பேணும் நாடு செந்தமிழ்நாடு. தமிழக வரலாற்றுக் கருவிற்கு உயிராகவும், உலகக் கலைச்செல்வத் திற்குச் சிகரமாகவும் இருப்பன இங்குள்ள திருக்கோயில் களே. சிதைவிடத்து ஒல்காச் சுதை வேலைப்பாடுகள்; நுண்மாண்நுழைபுலத் திறனால் கைவரப்பெற்ற கலைச் செல்வங்கள்; கலைக் கூடங்களாக-அருளாலயங்களாக-நின்று விளங்குவன இத்திருக்கோயில்கள். கோயிலருட் சிறப்புணர்ந்தே அருட் கவியரசி ஔவைப் பிராட்டியார் கோயில் இல்லா' ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று கூறினார்.

அன்பே சிவம்

தமிழக மக்கள் அன்பு நீர்பாய்ச்சி அறக்கதிர் விளைத்த பண்பு நலம் மிக்கவர்கள். வீரத்திற்கு விளைநிலமாகத் தமிழகம் விளங்கியது போலவே ஈரத்திற்கும் (அன்பிற்கும்) இருப்பிடமாகத் திகழ்ந்தது. ஈரமில்லாத மனிதவாழ்வு பாலை நிலத்து வற்றல் மரம் தளிர்த்தது போன்றதாகும். தளிர்க்காத வற்றல் மரம், அதிலும் பாலை நிலத்தில் தளிர்க்குமோ? அதுபோலவே, 'எவ்வுயிரும் தன்னுயிர்போல் மதிப்பவனே மாதேவன் உறையும் மனம் பெற்றவன்' என்பார் வடலூர் வள்ளலார். இத்தகைய மனவுணர்

33-1

வாகிய அன்பே 'சிவம்' ஆகும். அன்பு வேறு; சிவம் வேறு எனக் கொண்டு நெறிதவறித் திரிவார்க்கு அறிவுறுத்தும் வகையில்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

எனச் சிவத்தின் நிலையைத் திருமூலர் கூறியுள்ளார். ஆகையால், அன்பு வழிபாடே சிவவழிபாடு. இதுவே உலகச் சமயங்கள் அனைத்தும் உணர்த்தும் இறைவழிபாடு.

தமிழ்வேந்தரின் சிவத்தொண்டு

'சிவாய நம எனச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' யென எண்ணி, சோழ வேந்தர்களும் பாண்டிய வேந்தர்களும் எழுப்பிய திருக்கோயில்கள் எண்ணில் அடங்கா. கொடிகட்டி வாழ்ந்த கோட்டை கொத்தளங்கள், அழகு மிகுந்த அரண்மனைகளெல்லாம் அழிந்தொழிய, அருள்வடிவான இறைவனுக்கு அவர்கள் எழுப்பிய திருக்கோயில்கள் மட்டும் அழியாதுள்ளன வெனில், இறைவனின் பெருமையை இயம்பவும் ஒண்ணு மோ? இவ்வருளாலயங்கள் இன்றும் 'அவனன்றி ஓரணு வும் அசையாது' என்னும் உண்மையை விளக்கித் திகழ் கின்றன.

சிற்பங்கள் நுட்பங்களோடு மிளிர, ஓவியங்கள் உணர்ச்சி பாவங்களோடு ஒளிர, உலகெலாம் கடந்தானின் உறைவிடங்கள் நிறைந்தது தமிழகம். மூவேந்தருள், சோழ வேந்தரின் வளமெல்லாம் திருநீற்றுச் சொரூபம் காட்டவே பயன்பட்டன எனலாம். சோழவேந்தரும், சோழர்குல மங்கையரும் செய்த தானதருமங்கள், கோயிற்பணிகள்

பல.இதனாலேயே சோழவேந்தர், தாம் விரும்பும் அரசமுடி மாலையாகச் சிவபிரானின் ஆத்திமாலையையே கொண்டனர் எனக்கூறுவர்.

தமிழகத்தின் நடுநாயகமாக நின்று விளங்கியது சோழ நாடு. சோழநாட்டின் பெரும்பகுதி ஆத்திமரம் மிகுந்த தோப்பும் துரவும் செறிந்த கான்வளநாடாக விளங்கியது. ஆத்திக்காடு மிகுந்திருந்தமையால், இப்பகுதி 'ஆர்க்காடு' என்னும் பெயர்பெற்றது. 'ஆர்' என்பது ஆத்தி என்னும் பொருள் குறிப்பது.

இவ்வார்க்காடு தெற்கு, வடக்கு எனப்பிரிந்து, தென்னார்க்காடு வடவார்க்காடு என அமைந்தது. வட பகுதியினும் தென்பகுதி நிலநீர் வளத்தாலும், செல்வச் செழிப்பாலும், வாழ்க்கை நலத்தாலும், வரலாற்றுச் சிறப்பாலும், அருளாலயப் பொலிவாலும், அருள்மணப் பெருக்காலும் சிறந்தது.

நடராஜர் கலை நடம் புரிந்தருளும் திருத்தலம் தில்லை.

இத்தில்லைத்தலம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது; கொள்ளிடம் என்னும் காவிரியின் பிரிவுக்கு வடக்கிலும். மணிமுக்தா நதிக்குத் தெற்கிலும் உள்ளது; சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் உள்ள மெயின் லைன் இரயில் பாதையின் இடையே உள்ளது. சிதம்பரம் நிலையத்தில் இறங்கி, சுமார் 1 கி. மீட்டர் தூரம் மேற்கே சென்றால் நகரத்தின் நடுநாயகமாகத் திகழும் திருக்கோயிலையும், இதன் நான்கு கோபுரங்களையும் காணலாம்.

2. தலப் பெயர்கள்

நடராஜப் பெருமான் இடையறாது கலைநடம் புரிந் தருளும் இச்சிவத் திருத்தலத்திற்குக் 'கோயில்' என்பது சிறப்புப் பெயர். கோயில் என்பது எல்லா ஆலயத்திற்கும் பொதுப்பெயர். ஆனால் இப் பெயரே சிறப்புப் பெயராக ஒரு குறிப்பிட்ட தலத்தைக் குறிக்குமானால், அது இத் தலத்தின் மிக்க உயர்வைக் குறிக்கும் அன்றோ?

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர் களுக்குக் கோயில் சிதம்பரம். வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம். திருவிசைப்பா அருளிய கருவூர்த் தேவர், "என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து என்னையும் புணர்ப்பவன் கோயில்" என இத்தலத்தைப் போற்றுங்கால், இத்தலத்தின் சிறப்புப் பெயரை உணர்த்துகின்றார்.

'தில்லைவனம்' என்பதும் இத்தலத்தின் பெயர். இத் தலம் தில்லை என்னும் மரங்கள் அடர்ந்த காடாக இருந்த தால் இப்பெயர் பெற்றது. தில்லை என்னும் இம் மரங்கள் இப்பொழுது சிதம்பரத்தில் காணக் கிடைக்கவில்லை; சிதம்பரத்திற்குக் கிழக்கில் உள்ள பிச்சாவரத்திற்கு அருகே அமைந்துள்ள உப்பங்கழியின் கரைகளில் மிகுதியாக இருக் கின்றன. தில்லைவனம் என்னும் இத்தலத்தின் பெயரைத் 'தில்லை' எனவும் வழங்கினர் பக்திநெறிச் சான்றோர்கள் பலரும் தம் பாடல்களில் 'தில்லை' என இத்தலத்தின் பெயர் குறித்தே பாடியுள்ளனர். "மன்னுக தில்லை! வளர்க நம் பக்தர்கள்! வஞ்சகர் போயகல!" என்பார் சேந்தனார்.

இத்தலத்திற்குப் 'பெரும்பற்றப் புலியூர்' என்னும் பெயரும் உண்டு. புலிப்பாதர் (வியாக்கிரபாதர்) என்னும் முனிவர்

பெரும் பற்றினால் இத்தலத்தில் பூசித்ததால் இப்பெயர் ஏற்பட்டது. "பெரும்பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல் லாம் பிறவா நாளே'' என்பார் அப்பரடிகள்.

இத்தலம் 'சிதம்பரம்' என்னும் பெயரால் இப்பொழுது வழங்கி வருகின்றது. சித் + அம்பரம்=சிதம்பரம் சித்— அறிவு. அம்பரம்—வெட்டவெளி. ஆகையால் இத்தலம் 'ஞானாகாசம்' என்னும் பெயர் உடையதாயிற்று. சிதம்பரத் திற்குப் "பொன்னம்பலம்" என்னும் பெயரும் உண்டு. அம் பலம் என்பது சபையைக் குறிப்பது. "பொன்னம்பல நாதன் கழல் பொற்போடு பணிந்தான்'' என்பார் வில்லிபுத் தூராழ்வார்.

புலிப்பாதர் என்னும் முனிவர் இத்தலத்தில் இறை வனைப் பூசித்ததால், இத்தலத்திற்குப் 'புலியூர்' என் னும் பெயரும் தோன்றி வழங்கிவந்தது. ''பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே'' என்று இத்தலத்தைப் போற்றிப் புலியூர் என்னும் பெயர் வழக்கை உணர்த்துகின்றார்.

இப்பெயர்களேயன்றி, இத்தலத்திற்கு 'வியாக்கிரபுரம்' 'பூலோக கைலாசம்' புண்டரீகபுரம் முதலிய வேறு பெயர் களும் உண்டு.

3. தலச் சிறப்புகள்

சிதம்பரத் (கோயில்) தலம் சைவர்களுக்கு முதன்மையானது. அவர்கள் இத்தலத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் போற்றி வருகின்றனர். இவ்வாறு கொள்வதற்கும், போற்றுவதற்கும் காரணம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் மேன்மைபெற்று விளங்குவதே.

இத்தல மூர்த்தி ஓம் என்னும் பிரணவத்தின் வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான். ஐந்தெழுத்துச் சொரூபியாக விளங்கும் நடராஜப்பெருமானின் திருக்கூத்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் உணர்த்துகின்றது. எம்பெருமான் நடராஜர் தம் திருக்கூத்தின்மூலம் இவ்வைந் தொழில்களையும் நிகழ்த்தியருள்கின்றார்.

உலகம் விராட்புருடன் வடிவம்; திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மதியம்; சிதம்பரம் இருதயம் என்பர்.

உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே நடைபெறும் ஆனந்தத் தாண்டவத்தை நடராஜப் பெருமான் அடியார் பொருட்டு, இருதயத்தானமாகிய சிதம்பரத்தில் ஆடிக்காட்டி யருள்கின்றார்.

சைவ உலகத்தில் தனிச் சிறப்புக் கொண்டு திகழும் இச்சிதம்பரத் தலத்தில் அமைந்து விளங்கும் விசேட தீர்த்தங்கள் பத்து. இவற்றுள் சிவகங்கை என்னும் தீர்த்தம் சிவ வடிவமாக அமைந்து விளங்குவதாகச் சிதம்பர மான்மியம் கூறுகின்றது சிதம்பர மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தைக் குமரகுருபர சுவாமிகள்.

''மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''
"ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே"
''தீர்த்தம் என்பது சிவகங் கையே"

எனக் கூறிப் போற்றுகின்றார்.

இத்தலத்துத் திருக்கோயிலில் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, இராசசபை என்னும் ஐந்து மன்றங்களும் அமைந்திருத்தலும், சிவன் விஷ்ணு இருவர் திருச்சந்நிதிகள் ஒரே இடத்தில் நின்று தரிசிக்கும்படி அமைந்திருத்தலும் தனிச்சிறப்புகளாகும்.

பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் கோயில் கொண்டுள்ள திருத்தலம் இஃது ஒன்றே.

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணிற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யார் உரைப்பாரே

— திருமந்திரம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

— பெரியபுராணம்

4. தலப் பெருமை

இத்தலத்தின் புனிதமரம்-தலவிருட்சம்-தில்லைமரம். இது திருமூலட்டானக் கோயில் மேற்குப் பிராகாரத்தின் மேல்பால் இருக்கின்றது; கருங்கல் வடிவத்தில் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று; ஆகாயத் தலமாக அமைந்து விளங்குவது.

பொதுவாக ஒரு தலத்தின் பெருமை, அத்தலத்துக் கோயிற் சிறப்பாலும், மூர்த்தி சிறப்பாலும், தீர்த்த விசேடத்தாலும், அத்தலத்தில் நிகழும் அருளற்புத நிகழ்ச்சிகளாலும், அத்தலத்தில் தோன்றும் பெரியோர்களாலும், அத்தலத்தில் முக்தி எய்தும் பெரியோர்களாலும், அத்தலத்தைப் பெரியோர்கள் போற்றிப் பாடுவதாலும், இவைபோன்ற பிறவகையாலும் அமைவதாகும். இப்பெருமைகள் அனைத்தும் பெற்றுள்ளது சிதம்பரத் தலம்.

ஊமைப்பெண் பேசிய அற்புதம்

சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டுக் கொண்டு இறுதியில் தில்லையம்பதியை வந்தடைந்தார் மாணிக்க வாசக சுவாமிகள்; இத் தலத்தில் தங்கி எம்பெருமானை வழிபட்டுக், கண்டபத்து, குலாப்பத்து, மூன்று அகவல்கள், குயில்பத்து, கோத்தும்பி, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருத்தெள்ளேணம். திருப்பொற்சுண்ணம். திருப்பொன்னூசல், திருவுந்தியார், அன்னைப்பத்து, கோயில்பதிகம் கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப் பதிகம், ஆனந்த மாலை, திருப்படையெழுச்சி, யாத்திரைப் பத்து முதலியன பாடியருளினார்.

மாணிக்கவாசகர் தில்லையில் இவ்வாறு வாழ்ந்து வரும் நாள்களில், சிவனடியார் ஒருவர் ஈழநாடு சென்றார். அங்கே தாம் செல்லுமிடங்களிலெல்லாம் 'பொன்னம் பலம்' 'பொன்னம்பலம்' என்று சொல்லி வந்தார். இதைக் கண்ட புத்தர்கள் மனம் பொறாதவர்களாய், இவரை மன்னனிடம் கொண்டு சென்றனர். இவ்வடியார் மன்னன் முன்பும் 'பொன்னம்பலம்; பொன்னம்பலம்' என்று சொல்லியமர்ந்தார்; தில்லைப் பொன்னம்பலத்தின் பெருமையையும் விளக்கிக் கூறினார்.

அதைக் கேட்டுணர்ந்த புத்த மன்னன், தில்லை படைந்து புத்தசமயத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கருதி, புத்தகுருவுடனும், தன் ஊமைப் பெண்ணுடனும் புறப்பட்டுத் தில்லை வந்தடைந்தான்.

தில்லை வந்தடைந்த புத்த குரு, தில்லையிலுள்ளாரை வாதுக்கு அழைத்தார். அந்நிலையில் இறைவன் தில்லை வாழந்தணர் கனவில் தோன்றி, மாணிக்கவாசகரைக் கொண்டு புத்தரை வெல்லுமாறு பணித்தருளினார்.

மணிக்கவாசகரும் சிற்றம்பலத்தில் அறிஞர்கள் முன் னிலையில் புத்த குருவை நோக்கி, 'உன் வாதம் என்னை?' எனவினவ, அவர் புத்தசமயக் கொள்கைகளைக் கூறினார். அவற்றைக்கேட்ட மாணிக்கவாசகர், சைவ சமய உண்மை களை எடுத்துக்கூறி, புத்தசமய வாதத்தை மறுத்தருளி னார். புத்தகுரு அதை ஏற்காத நிலையில், மாணிக்க வாசகர் எம்பெருமான் திருவருளை நினைந்தார். அந்நிலை யில் கலைமகள் புத்தர்கள் வாக்கினின்றும் நீங்கி அவர் களை ஊமர்களாக்கினாள்.

அதைக் கண்ட புத்த மன்னன், உடனே மாணிக்க வாசகரை நோக்கி, 'பேசுபவர்களை ஊமர்களாக்கிய

தாங்கள் ஊமையாகிய என் மகளைப் பேசச் செய்தால், நாங்கள் அனைவரும் சைவர்களாகிவிடுவோம்' என்றனன்.

மாணிக்கவாசக் சுவாமிகள் உடனே பிறவி ஊமையாகிய அப்பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அப்பெண் வாய் திறந்து பேசிப் பதில் கூறினாள். மாணிக்கவாசகர் இவற்றைத் 'திருச்சாழல்' எனத் தொகுத்தருளினார்.

புத்த மன்னன் சைவனாயினான். அம்மன்னன் வேண்ட, மாணிக்கவாசகர் புத்த ஊமர்களைப் பேசச் செய்தருளினார். அவர்கள் அனைவரும் சைவராயினர்.

அம்பலக் கூத்தனே அதன் பொருள்

அதன்பின்னர் ஒருநாள் இறைவன் அந்தண வுருவுடன் மாணிக்கவாசகரை அணுகி, தாம் பாண்டி நாட்டினர் என்று கூறி, திருவாசகம் முழுமையும் மாணிக்க வாசகர் சொல்ல, ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதி முடித்தார். பின், 'பாவைபாடிய வாயால் கோவை பாடுக' என்று மாணிக்கவாசகரைப் பணித்தருளினார்.

மாணிக்கவாசகர் உடனே திருச்சிற்றம்பலக்கோவை பாடியருள, அந்தண வுருவினராய இறைவன் அதையும் எழுதியருளி, 'மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம் பலம் உடையான் எழுதியது' என்று கைச்சாத்திட்டுச் சிற்சபையின் பஞ்சாட்சரப்படியில் ஒருவரும் காணாதவாறு வைத்து மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர்கள் இவ்வேட்டை மணிவாசக அடிகட்குக் காட்டி, இப்பாடல்களின் பொருள் கூற வேண்டினர். மாணிக்கவாசக சுவாமிகளும் அவர்களை அழைத்துத் தில்லைக் கூத்தப் பெருமானைக்காட்டி, 'இவரே பொருள்' எனக்கூறி, அம்பலக்கூத்தன் அடிமலரில் இரண்டறக் கலந்தருளினார்.

சம்பந்தர் கணநாதரைக் காணல்:

நாளும் இன்னிசையால் செழுந்தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர்க்குத் தில்லைத் தலத்தில் திருக்கூத் தியற்றும் அம்பலவாணரைக் கண்டு வணங்கவேண்டும் என்ற ஆவல் அதிகமாயிற்று; தம் விருப்பத்தைத் தம் தந்தையாரிடம் தெரிவித்து, அவரோடும் மற்ற அடியார் களோடும் புறப்பட்டுத் தில்லைத் தலத்தின் எல்லையை நெருங்கி, தெற்கு வாயிலை அடைந்தார்.

திருஞானசம்பந்தரின் வருகையை அறிந்து தில்லை வாழந்தணர்கள் அனைவரும் சிந்தை மகிழ்ந்து, தமது நகரினை ஒப்பனை செய்து, மங்கல இயங்களின் முழக்க மும் மறையொலியும் சேர்ந்தொலிக்க, திசைகள்தோறும் விளங்கும் நிறைகுடமும் விளங்க வாயிலின் புறத்தே சென்று ஞானசம்பந்தரை எதிர்கொண்டு வாழ்த்துப் பல கூறி வரவேற்றனர்.

ஞானசம்பந்தரும் தொண்டர்களின் தூய உள்ளம் போல் தில்லையில் சிவமணங்கமழும் திருவீதியினைக் கண்டு வணங்கி, எழுநிலைக் கோபுரத்தை வழுவில்லாத அன்புடன் தாழ்ந்து இறைஞ்சிப் பின்னர்த் திருக்கோயிலி னுட்சென்று அன்னம் டாலிக்கும் பொன்னம்பலத்தைத் தொழுது, முடியின்கண் கரங் குவித்து கண்களில் நீர்த் ததும்ப அன்புடன் அம்பலத்தினுட் புகுந்தார்; ஆண்டவன் தமக்கு அருளிச் செய்த மெய்யறிவின் வடிவே அம்பலமாக வும், அவ்வறிவின் பயனாகத் தமது உள்ளத்தே நிறைந்து வழியும் பேரின்பப் பெருக்கே திருநடனமாகவும், தமது புறக்கண்ணிற்குப் புலனாயது கண்டு, அத்திருக்கூத்தினைப் பொன்மொழிகளால் போற்றினார்.

இவ்வாறு போற்றிய ஞானசம்பந்தர், 'உணர்வினேர் பெறவருஞ் சிவபோகத்தை யொழிவின்றி யுருவின்கண்,

அணையும் ஐம்பொறியளவினும் எளிவர அருளினை' எனத் தம் கண்மாரி பொழியப் பாடி ஆடித்துதித்தார்: அம்பலவாணன் கழலேத்தும் செல்வத்தையே சிறப்புடை செல்வமாகக் கொண்ட தில்லைவாழந்தணரைப் பதிகத்துள் முன் வைத்து, 'கற்றாங் கெரியோம்பி' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார்; தேனும் பாலும் தீங்கன்னலும் அமுதுமாய்த் தித்தித்து ஊனையும் உயிரையும் உருக்கும் உமையொருபாகன் திருக்கூத்தினை அகத்தேயன்றிப் புறத்தேயுங் கண்டு பெருமகிழ்வெய்தினார்; பின்னர்ப் பொன்னம்பலத்தை வலம் வந்து புறம் போந்து கோயிற்றிரு முற்றத்தில் வீழ்ந்து வணங்கி, நான்கு திரு வீதிகளையும் இறைஞ்சி, திருவேட்களம் சென்று, அங்குள்ள இறைவன் மீது பதிகம் பாடிப் பணிந்து, அங்குத் தங்கினார்

திருவேட்களத்தில் தங்கிய ஞானசம்பந்தர் நாடோறும் தில்லைவந்து அம்பலவாணர் திருவடிகளை வணங்கி வருவது வழக்கம்; ஒருநாள் திருக்கழிப்பாலை என்னும் திருத்தலத்துக்குச் சென்று, அங்கு எழுந்தருளிய இறைவனுக்கு அருந்தமிழ்மாலை சாத்தினார். நீலகண்ட யாழ்ப்பாணனாரும் அவரது திருப்பதிக இசையினைத் தமது யாழிலமைத்துப் பாடிவந்தார். அந்நிலையில் ஒருநாள் ஞானசம்பந்தர் தில்லைக்குச் செல்லும்போது தில்லைவாழந்தணர்கள் அனைவரும் இறைவனருளால் கணநாதராகக் காட்சியளிக்கக்கண்டார். தாம் கண்ட அக்காட்சியினைப் பாணர்க்குக் காட்டிப் பரவசமுறச் செய்தார்; பின்னர் அம்பலவாணர் திருமுன் சென்று, 'ஆடினாய் நறுநெய்' எனத்தொடங்கும் பதிகம் பாடி, தாம் கண்ட காட்சியை அதில் வைத்துப் போற்றினார்.

அப்பரடிகளின் உழவாரப்பணி

அப்பரடிகள் என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் நிவா நதிக்கரையின் வழியாக நடந்து சென்று தில்லையம் பதியை அடைந்து, பொன்னம்பலத்திலே எந்நாளும் இன்பநடம் புரிந்தருளும் கூத்தப் பெருமானைக்கண்டு கும்பிட்டு, நலமுற வீழ்ந்து வணங்கி எழுந்து மீண்டும் வீழ்ந்து வணங்கினார்; என்புருகப் பதிகம்பாடிப் போற்றிப் பணிந்தார்.

இவ்வாறு வணங்கி எழுந்த அப்பரடிகள் நெருப்பிற் பட்ட வெண்ணெய் போல மனங்கசிந்துருக, கூத்தன் குரை கழல் முன்நின்று, 'என்று வந்தாய்' என்னுந் திருக்குறிப் புடன் நடம்புரியும் நம்பன் நயத்தினின்றும் பொழியும் திருவருளை வாரிவாரி மடுத்து, அம்மகிழ்ச்சிப் பெருக்கால் 'கருநட்ட கண்டனை' என்னும் திருவிருத்தமும், 'பத் தனாய்ப் பாட மாட்டேன்' என்னும் திருநேரிசையும் பாடி யருளினார்; பின்னர் எம்பெருமான் திருக்கோயில் முற்றத் திலும், திருவீதிகளிலும் உழவாரப்பணி செய்துகொண்டும், காலந்தோறும் கருநட்ட கண்டனைப் பணிந்துகொண்டும் சின்னாள் தங்கியருளினார்; அப்பொழுது 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்னுந் திருக்குறுந் தொகை பாடியருளினார்.

மூவர் தேவாரம் கிடைத்தமை

சோழ நாட்டுத் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதி சைவ மறையவர் குலத்தில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி, அத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் பொல்லாப் பிள்ளையாரைப் பூசிக்கும் குடியைச் சார்ந்தவர். இவர் வேதங்களையும், ஆகமங்களையும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் உரிய பருவத்தில் பயிலத் தொடங்

கினார்; ஒரு நாள் இவரின் தந்தையார் வேற்றூருக்குச் செல்லவே, தந்தையின் கட்டளைப்படியே பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யச் சென்றார்; பிள்ளை யாருக்குத் திருமஞ்சனம் முதலியவற்றைச் செய்தபின், நிவேதனத்தை முன்வைத்து 'எம்பெருமானே, அமுது செய்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

விநாயகர் உண்மையாகவே நிவேதனத்தை ஏற்றருள் வார் என்று இளஞ்சிறுவர் நம்பியாண்டார் நம்பி எண்ணி யிருந்தார்; விநாயகர் அமுது செய்யாது இருப்பதைக் கண்டு, 'நாம் ஏதேனும் தவறு செய்து விட்டோமோ!' என்று எண்ணி உள்ளம் வருந்தினார்; பின்னர் வருத்த மிகுதியால் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளப் புகுந் தார். அதுகண்டு இரங்கிய பொல்லாப் பிள்ளையார் அச் சிறுவரைத் தடுத்து, நிவேதித்த நிவேதனத்தை அமுது செய்தருளினார். பிறகு அப்பொல்லாப் பிள்ளையாரே நம்பியாண்டார்க்குக் கல்வி கற்பித்தார். நாள்தோறும் இவ்வற்புதங்கள் நிகழ்ந்து வரவே, இச்செய்தி எங்கும் பரவியது.

அக்காலத்தில் தஞ்சையில் இருந்து அரசாண்டு வந்த சோழ மன்னன் சிவபக்தன். அவனிடம் வந்த சிவ பக்தர்கள் தேவாரத்தில் சில பாசுரங்களைச் சொல்வது வழக்கம். அவற்றைக் கேட்ட சோழன், அவற்றின் இனிமையிலே உள்ளம் பறிகொடுத்து, தேவாரம் முழு வதும் எங்கே கிடைக்கும் என்று ஆராய்ந்தான்; எங்கும் கிடைக்காமற் போகவே வருந்தியிருந்தான்.

அவ்வாறு இருந்த சோழன், நம்பியாண்டார் நம்பி யின் செய்தியை அறிந்தான்; உடனே 'அப்பெரியாரைக் கொண்டு நம் குறையைப் போக்கிக் கொள்வோம்' என்று

எண்ணி, பூசைக்குரிய பொருள்களோடு திருநாரையூர் வந்தடைந்தான்; நம்பியைக் கண்டு வணங்கி, பொல்லாப பிள்ளையாருக்குப் பூசையும் நிவேதனமும் செய்யும்படி வேண்டினான்; நம்பியும் அவ்வாறே செய்யக் கண்டு களித்தான்.

அதன் பின்னர் சோழமன்னன் நம்பியை அடிவணங்கி ''அடியேனுக்கு ஒரு குறை உள்ளது. மூவர் முதலிகள் அருளிச் செய்த தேவாரம் முழுவதும் எங்கும் கிடைக்க வில்லை. விநாயகமூர்த்தியின் திருவருள் துணைகொண்டு அவை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்,'' என்று வேண்டினான்.

நம்பியாண்டார் நம்பியும் பொல்லாப் பிள்ளையாரை வணங்கி, அப்பெருமானுடைய திருவருளால் 'சிதம்பரத் தில் பொன்னம்பலத்தின் அருகே மூவர் திருக்கர முத்திரை களோடு தேவார ஏடுகள் உள்ளன' என்று அறிந்தார்; அன்றியும் 'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம்; திருநாவுக்கரசு நாயனார் பாடி யவை நாற்பத்தொன்பதினாயிரம் பதிகங்கள்; சுந்தர மூர்த்தி நாயனார் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள்' என்றும் உணர்ந்து. இச்செய்திகளைச் சோழ மன்னனுக்குத் தெரிவித்தார்.

அதன் பின்னர் நம்பியாண்டார் நம்பியும், சோழ மன்னனும் சிதம்பரம் சென்று ஆங்குள்ள தில்லைவாழ் அந்தணரை வணங்கிச் செய்தியைக் கூறினர். மூவர் முதலி களுக்கு விழா நடத்தி அவர்களை எழுந்தருளச் செய்து, குறிப்பிட்ட இடத்தில் தேடும் பொழுது, கறையான் புற்று மூடிக்கிடப்பது கண்டு திடுக்கிட்டனர். பின்னர் எண்ணெய் சொரிந்து புற்றினுள்ளே இருந்த சுவடிகளை எடுத்துப் பார்த்தபொழுது, பல பகுதிகள் கறையானுக்கு இரை

யாகிப் போயினவென்று அறிந்தார்கள். உள்ளவற்றை எடுத்துச் சோதித்து அடைவு படுத்தத் தொடங்கினார் நம்பியாண்டார் நம்பி. இவரே மூவர் தேவாரம், மணி வாசகர் திருவாசகம் முதலிய நூல்களைத் தொகைப் படுத்திப் பன்னிரு சைவத் திருமுறைகளை வகுத்தவர் ஆவார்.

அம்பலவாணர் அளித்த பரிசில்

சேரமான் பெருமாள் நாயனார் என்னும் பெரியார் வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைக் காணவும் பொன்னம்பலத்தை இறைஞ்சவும் விரும்பியவராய்த் தில்லைக்கு வந்தார்; திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்; இறைவனைப் போற்றிப் 'பொன்வண்ணத் தந்தாதி'யைப் பாடினார். இறைவனாரும் அதற்குப் பரிசிலாகக் காற் சிலம்பொலியைக் கேட்பித்தருளினார். (பொன் வண்ணம் என்று தொடங்கிப் பொன்வண்ணம் என்று முடிதலின், பொன்வண்ணத் தந்தாதி என்னும் பெயர் பெற்றது.)

உமாபதி சிவத்தின் கொடிக்கவி

தில்லைவாழந்தணர் மரபில் தோன்றியவர் உமாபதி சிவாச்சாரியார். சிவஞானபோதம் அருளிச்செய்த மெய் கண்டாரின் மாணாக்கராக அருணந்தி சிவாச்சாரியார் விளங்க, அவர் மாணாக்கராக மறைஞான சம்பந்தர் விளங்க, மறைஞான சம்பந்தரின் மாண்புறு நன்மாணாக்க ராக நின்று, சந்தானாச்சாரிய மரபை முற்றுவிக்கும் நற் றவத்தவரே உமாபதி சிவாச்சாரியார்: இவர் சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கினுள் எட்டு நூல்களை அருளிச் செய்தவர். 'சித்தாந்த அட்டகம்' என இவரது எட்டுச் சாத்திர நூல்களும் தொகை கொடுத்து வழங்கப் பெறும்.

தில்லைவாழந்தணர் மரபில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார், தில்லைக் கூத்தப்பெருமானுக்குப் பூசை முடித்துக் கோயில் மரியாதைகளுடன் பகல் நேரத்தில் இல்லம் சென்றார். அப்போது ஒரு வீட்டுத் திண்ணையில் அருளாளராக அமர்ந்திருந்த மறைஞான சம்பந்தர், பட்டப்பகலில் முன்னே ஒருவன் தீவட்டி எடுத்துச் செல்ல, பல்லக்கில் அமர்ந்து சென்ற உமாபதி சிவத்தின் பரிபக்குவ முதிர்ச்சியைக் கண்ணுற்று, 'பட்டமரத்தில் பகற் குருடு போகிறது பாரீர்' என்று உமாபதி சிவத்தின் செவிகளிற் படுமாறு கூறினார்,

கர்ப்பூரத்தில் காட்டிய நெருப்புப் போல், பக்குவ முதிர்ச்சியின் மேல் மறைஞான சம்பந்தரால் அமைக்கப் பெற்ற ஞான வார்த்தைகள் சிவஞானத்தை விளைத்தன. அதைக் கேட்ட அளவிலேயே உமாபதி சிவாச்சாரியார் பல்லக்கிலிருந்து கீழே குதித்து மறைஞான சம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து, தம்மை மாணாக்கராக ஏற்றருள வேண்டுமெனப் பணிந்தார்.

மறைஞான சம்பந்தர் ஒன்றும் பேசாது திண்ணையில் இருந்து எழுந்து சென்றார். உமாபதி சிவாச்சாரியார் அவரைப் பின்தொடர்ந்தார்.

மறைஞான சம்பந்தர் ஓர் இல்லத்தின் முன் நின்று உணவு கேட்க, அவ்வீட்டார் தம்மிடம் உள்ள கூழுணவை மறைஞான சம்பந்தரின் கைகளில் விட, அதனை அவர் வாங்கிக் குடித்தார், உமாபதி சிவாச்சாரியார். அவருடைய கைகளின் இடுக்குகளிலிருந்து ஒழுகிய கூழைத் தம் கைகளால் ஏற்று, குருவருட்பிரசாதமாக எண்ணி உட்கொண்டார்.

அதனை அறிந்த தில்லைவாழந்தணர்கள், உமாபதி சிவாச்சாரியார் செயல் ஆசாரமற்றது எனக் கருதி,

அவரைத் தம் குழுவிலிருந்தே நீக்கிவிட்டனர். அதனால் உமாபதி சிவாச்சாரியார் தில்லைக்குக் கீழ்ப்பகுதியில் உள்ள 'கொற்றவன் குடி' என்னும் ஊரில் தங்கி வாழ்ந்து வரலானார். அது முதல் அவர் 'கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்' என வழங்கப் பெற்றார்.

உமாபதி சிவாச்சாரியாரை நீக்கிய தில்லைவாழந்தணர் அடுத்தநாள் காலையில் கோயிலுக்குள் சென்ற போது, தில்லைக் கூத்தப் பெருமான் திருமேனியைக் காணாது திகைத்தனர். அப்போது 'உமாபதிசிவத்தின் பெட்டகத்தில் இருக்கிறோம்' என்று ஓர் அசரீரி கூறியது.

அதன்பின்னர் தில்லைக்கூத்தப் பெருமான் திருவிழா நெருங்கியது. திருவிழாத் தொடக்கத்துக்காகக் கொடியேற்றம் நடத்தும்போது, கொடி மேலே ஏறாமல் தடைப்பட்டு நின்றுவிட்டது. அப்போது தில்லைவாழந்தணர்களின் வேண்டுகோளுக்காக இரக்கங்கொண்ட உமாபதி சிவாச்சாரியார், திருவைந்தெழுத்து மந்திரத்தின் உட்பொருளாக. திருவருளாணையைச் செயல்படுத்துவதாக, 'கொடிக்கவி' என்னும் நூலைப் பாடியருளினார். அந்நிலையில் கொடி ஏற்றுவாறின்றித் தானாகவே ஏறியது.

பெத்தான் சாம்பான் முக்தி

பெத்தான் சாம்பான் என்பவன் தீண்டத்தகாத சாதியில் பிறந்தவன்; சிறந்த சிவபக்தன். இத்தகைய இவன், சிவஞானமும் திருவருள் நலமும் கைவரப்பெற்று விளங்கிய உமாபதி சிவாச்சாரியாரின் அருமை பெருமைகளை உணர்ந்து, அவருக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எண்ணி, நாடோறும் விறகுக்கட்டு ஒன்றை அவரது திருமடத்திற்கொண்டு சென்று வைத்துவிட்டு வந்தான்.

அன்றாடம் யார் விறகுக் கட்டு கொண்டு வந்து வைப்பது என்பது எவருக்கும் தெரியாது.

அந்நிலையில் ஒருநாள் அடைமழை பெய்தது. பெத்தான் சாம்பானால் விறகுக்கட்டைக் கொண்டுபோய் வைக்க முடியவில்லை. அதனால் அவன், திருத்தொண்டுக்கு ஊறு விளைந்ததே எனக் கவன்று கூத்தப்பெருமான் திருச் சந்நிதிக்கு நேரே தில்லையின் எல்லையில் நின்று கதறி யழுதான். அவ்வாறு கதறிய பெத்தான் சாம்பானிடம் இறைவன் தோன்றி "கவலற்க" எனக்கூறி, 'அடியார்க் கெளியன்' எனத் தொடங்கும் திருப்பாட்டு ஒன்று எழுதப் பட்ட ஓலைநறுக்கு ஒன்றைக் கொடுத்து, உமாபதி சிவாச் சாரியாரிடம் கொண்டு போய்க் கொடுக்குமாறு பணித் தருளினார்.

திருச்சிற்றம்பலமுடையான் தந்த ஓலை நறுக்கை வாங்கிப் பார்த்த உமாபதி சிவாச்சாரியார், திருச்சிற்றம் பலமுடையான் திருக்கரத்தால் எழுதப்பெற்ற பாடலைப் படித்து, இறைவன் திருவருளையும், பெத்தான்சாம்பானின் பக்குவப் பேற்றையும், அவனது திருத்தொண்டினது பெருமையையும் உணர்ந்து மகிழ்ந்தார்; பெத்தான் சாம்பானுக்குத் தீட்சை செய்து, இப்பிறவியிலேயே அவனுக்குச் சிவப்பேறு கிடைக்குமாறு செய்தார்.

இவரது செய்கையில் ஐயுறவு கொண்ட சிலர் வாதிட்டபோது, இவர்தம் திருமடத்தில் அபிடேக நீரில் செழித்து வளர்ந்திருந்த முள்ளிச் செடிக்கும் அம்முறையி லேயே தீட்சை செய்து, எல்லோரும் நேர் நின்று காண, அம் முள்ளிச்செடிக்கு முக்தி நல்கியருளினர்.

திருநாளைப் போவார் தரிசனம்

தில்லையை அடுத்துள்ள ஆதனூரில் தோன்றிய அரிசனத் தொண்டர் **நந்தனார்** என்னும் பெரியார். இவர்

பல சிவத்தலங்கட்கும் சென்று புறவாயிலில் நின்றபடியே இறைவனைக்கண்டு வழிபட்டுவரும் இயல்புடையவர். இத்தகைய இவர் ஒருமுறை தில்லை செல்ல விரும்பினார்; தில்லைக்குச் சென்றால் தம் குலம் காரணமாக நடராஜப் பெருமானைக் கண்டு வழிபட முடியாது என்னும் கருத்தினால், 'நாளைச் செல்லலாம்' 'நாளைச் செல்லலாம்' என்று கூறிக்கொண்டிருந்து, இறுதியில் ஒருநாள் தில்லை சென்றடைந்தார்; ஆனால் அங்கும் தம் சாதி காரணமாக அம்பலத்துள் செல்ல விரும்பாமல் புறத்தே இருந்து எம் பெருமானை மனத்தால் நினைந்து வணங்கி, தம் பிறப்பைப் பற்றியே நினைந்து வருந்தித் துயிலச் சென்றார்.

அந்நிலையில் இறைவன் அவர் கனவில் தோன்றி, இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி நம் கோயிலினுள் புகுக' எனப்பணித்து, அவ்வாறே தில்லைவாழந்தணர்கட்கும் நந்தனுக்கு எரி அமைத்துத்தரப் பணித்து மறைந்தருளினார்.

மறுநாள் தில்லைவாழந்தணர்கள் அவ்வாறே தீ அமைத்துத்தர, திருநாளைப் போவார் அதில் மூழ்கி எழுந்து திருக்கோயிலுட் சென்று இறைவனுடன் இரண்டறக் கலந்தார்,

'நாளைச் செல்லலாம்', 'நாளைச் செல்லலாம்' எனக் கூறிக் கொண்டிருந்தவராதலால், நந்தனார் திருநாளைப் போவார் என்னும் பெயர் பெற்றார்.

திருப்பல்லாண்டும் தேரோட்டமும்

தில்லைத் தலத்தில் திருக்கோயில் கொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் நடராஜப் பெருமானின் அடியார் சேந்தனார் என்னும் பெரியார், இவ்வடியாரின் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்டவேண்டுமென்ற

திருவருள் நோக்கத்துடன், மார்கழித் திருவாதிரைத் திரு விழாவில் எம்பெருமான் திருத்தேர் கொண்டருளும் போது, மழை பெய்யுமாறு செய்து தம்முடைய தேரைச் சேற்றில் அழுந்துமாறு திருவருள் பாலித்தார்.

அப்பொழுது 'சேந்தா தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக' என்றதோர் ஒலி எல்லோரும் கேட்கும்படி விண்ணில் ஒலித்தது.

தேர் இழுக்கும் அடியார் குழுவில் ஒருவராய் நின்ற சேந்தனார், ''மன்னுக தில்லை! வளர்க நம் பக்தர்கள்' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

அந்நிலையில் எம்பெருமான் திருத்தேரும் வடம் பிடிக் காமலே தானே அசைந்து ஓடி நிலையினை அடைந்தது. இவ்வற்புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனாரின் பேரன்பின் திறத்தைப் பெரிதும் எண்ணி நெஞ்சம் நெக்குருகினர். பதின்மூன்று திருப்பாடல்களைக் கொண்ட இத்திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் ஒன்பதாந் திருமுறை யின் இறுதிப் பதிகமாக அமைந்துள்ளது;

அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்தல்

தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் தோன்றியவர் அருண்மொழித்தேவர் என்னும் பெரியார். இவர் சிறந்த சிவபக்தர்; 'சேக்கிழார்குடி' என்னும் குடியில் பிறந்தவர்; அதனால் சேக்கிழார் என்றே வழங்கப் பெற்றவர்.

சிவம் பெருக்கும் சீலராகிய சேக்கிழார், அநபாயன் என்றும், திருநீற்றுச் சோழன் என்றும் புகழப்பெற்ற இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் தலைமை யமைச் சராகப் பணி பூண்டு விளங்கினார்

அக்காலத்தில் தமிழகத்தில் சமணம் பரவிவந்தது. சோழமன்னன் குலோத்துங்கன் சமணக் காப்பியமாகிய

சீவகசிந்தாமணியைப் பெரிதும் விருப்பத்துடன் பயின்று வந்தான். அது கண்ட அமைச்சர் சேக்கிழார், அம் மன்னனது மனத்தைத் திருப்ப எண்ணி, சிவத்தொண்டர் களின் வரலாற்றை அவனுக்கு எடுத்துக் கூறினார், அதைக் கேட்ட சோழமன்னன் பெரிதும் வியந்து தொண்டர் தம் வரலாற்றையெல்லாம் தொகுத்து ஒரு காவியமாகப் பாடித்தரும்படி பணிக்க, அமைச்சர் சேக்கிழாரும் அதற் கிணங்கி தில்லை வந்தடைந்து அம்பலவாணரைக் கண்டு வணங்கி வழிபட, அம்பலவாணர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார். சேக்கிழார் அதனையே காப்பியத் தொடக்கமாகக் கொண்டு, திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்து, 'திருத்தொண்டர் புராணம்' என்னும் அருள் மணக்கும் காப்பியத்தைப் பாடி முடித்தார்,

அதனை அறிந்து மகிழ்ந்த குலோத்துங்கன், சேக்கிழாரையும், 'பெரியபுராணம்' என்னும் அக் காப்பியத்தையும் யானை மீதேற்றி நகர்வலமாகக் கொணர்ந்து சிறப்பிக்க, சேக்கிழார் சுவாமிகள் தில்லை யிலேயே தம் காப்பியத்தை அரங்கேற்றியருளினார்.

மற்றும் இத்தில்லைத் தலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்ப் பெருமானைச் சிற்றம்பலத்தே கண்டு வணங்கிய அருளற்புதமும் நிகழ்ந்தது.

சிவநெறிப் பெரியார்களாகிய திருநீலகண்டர், கோச் செங்கட்சோழர், கணம்புல்லர், கூற்றுவர் முதலான நாயன்மார்களும், மறைஞான சம்பந்தராகிய சந்தான குரவரும், இரணியவர்மனும் வியாக்கிரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சுகர் முதலிய முனிவர்களும் இத்தலத்தில் முக்தியடைந்து பெருமை சேர்த்துள்ளனர். சிவத்தலங்களுள் இறைவனருளற்புதங்களால் பெருமைகள் நிறைந்தது தில்லைத்தலம்.

5. இறைவன் திருப்பெயர்கள்

இத்திருத்தலத்தில் திருமூலட்டானக் கோயில், திருச்சிற்றம்பலம் என்னும் ஈரிடங்களில் இறைவன், இறைவி எழுந்தருளித் திகழ்கின்றனர்.

திருமூலட்டானக் கோயில்

இறைவன் திருப்பெயர்கள் - மூலட்டானேசுவரர், திருமூலநாதர்.

இம்மூலட்டானேசுவரரை, திருநாவுக்கரசு சுவாமிகள் 'பெரும்புலியூர் விரும்பினார்' எனத்தொடங்கும் திருத்தாண்டகப் பாடலில் ''பெரும்பற்றப் புலியூர் மூலட்டானத்தார்'' எனக் குறிப்பிட்டுப் பாடிப்போற்றியுள்ளார்.

அர்த்தசாம வழிபாடு முடிந்தபின்னர் எல்லாத்திருக்கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத்தான இலிங்கத்தில் ஒடுங்குவதால், இம்மூர்த்திக்கு 'மூலட்டானேசுவரர்' என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

இறைவியாரின் திருப்பெயர் - உமையம்மையார்.

திருச்சிற்றம்பலம்

ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் இறைவனின் திருப்பெயர் - சபாநாயகர்,

இப்பெருமான் திருப்பெயர்களாகக் கூத்தப்பெருமான் நடராஜர், விடங்கர், மேருவிடங்கர், தட்சிணமேரு விடங்கர் என்னும் பெயர்கள் இலக்கியங்களில் வழங்கப் பெற்றுள்ளன.

விடங்கர்: விடங்கர் என்னும் திருப்பெயர் சுயம்பு மூர்த்தி என்னும் பொருளில் சப்த விடங்கத் தலங்களில்

எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு வழங்குவதாகும். இத் தலத்தில் எம்பெருமானாகிய நடர்ராஜப்பெருமானுக்கு இத் திருப்பெயர் 'பேரழகன்' என்னும் பொருளில் அமைந்தது.

மேருவிடங்கர்

தில்லைத் திருக்கோயிலுக்கு 'மேரு' என்னும் பெயர் உண்டு. இப்பெயரினைப் பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள், தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

''பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின்
பிறங்குபே ரம்பலம் மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்.''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேரு என்னும் பேரம்பலத்தில் திருநடம் புரிந்தருளும் விடங்கர்—மேருவிடங்கர்.

சேந்தனார் தமது திருப்பல்லாண்டில், இம்மேரு விடங்கரை ''வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்'' எனப் போற்றியுள்ளார்.

தட்சிண மேருவிடங்கர்:

வடக்கே ஒரு பொன்மலை உத்தர மேருவாக இருப்பது போல, தெற்கே சிற்றம்பலம் இரணியவர்மன், முதற் பராந்தகன் இவர்களால் பொன்வேயப் பெற்று ஒரு மலை போல் ஓங்கி, பொன்னொளி வீசி நாற்றிசையும் ப்ரவி நிற்றலால், இதனைத் தட்சிண மேருவாகப் பழங்காலத் தில் ஆன்றோர் கொண்டனர்.

தில்லைச் சிற்றம்பலத்தைத் தட்சிண மேருவாக ஆன்றோர் வழங்கிய வழக்கினையொட்டியே, ஒட்டக் கூத்தர் தம் 'தக்கயாகப்பரணி' என்னும் நூலில்,

> "நீடிய வெண்டிசை நீழல்வாய்ப்ப
> நேரிய தெக்கிண மேரு வென்னப்
> பீடிகை தில்லை வனத்தமைத்த
> பெரிய பெருமாளை வாழ்த்தினவே"

எனப் பாடியுள்ளார், தட்சிண மேருவாகிய சிற்றம்பலத்தில் ஆடியருளும் எம்பெருமான் 'தட்சிண மேருவிடங்கர்' என்னும் திருப்பெயரையும் பெற்றார்.

இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள இறைவரின் திருப் பெயர்களன்றி, திருச்சிற்றம்பல முடையார், தில்லை நாயகத் தம்பிரான், ஆனந்தத் தாண்டவப் பெருமான், பொன்னம்பலக் கூத்தர் என்னுந் திருப்பெயர்களும் உண்டு. இத்திருப்பெயர்களெல்லாம் கல்வெட்டுக்களில் காணப் படுகின்றன. இவையனைத்தும் சபாநாயகருக்கு வழங்கிய வேறு திருப்பெயர்களாகும்.

இறைவியாரின் திருப்பெயர்—சிவகாமசுந்தரி.

இவ் வம்பிகைக்குத் திருக்கோயில் உண்டு. இத் திருக் கோயில் மூன்றாம் பிராகாரத்தில் சிவகங்கைத் திருக்குளத் துக்கு மேற்குப் பக்கத்தில் அழகுமிக அமைந்து விளங்கு கின்றது.

6. திருக்கோயில் அமைப்பு

தில்லைக் கூத்தப் பெருமான் திருக்கோயில் ஐம்பத்தொருஏக்கர் நிலப்பரப்பில் அமைந்து விளங்குகின்றது. இத்திருக் கோயிலின் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு பக்கங்களிலும் கம்பீரமான நான்கு ராச கோபுரங்கள் அமைந்து கோயிலை அழகு செய்கின்றன.

இந் நான்கு ராச கோபுரங்கள் ஒவ்வொன்றும் 135 அடி (40.5 மீ.) உயரம் உடையவை; ஏழு தளங்களும், பதின்மூன்று பெரிய செப்புக் கலசங்களும் கொண்டவை. இவ்விராச கோபுரங்கள் 90 அடி (27 மீ,) நீளமும், 60 அடி (15 மீ.) அகலமும் உள்ள நீண்ட சதுர அமைப்புடன் கூடிய அடிப்பகுதியை உடையவை; 36 அடி உயரம் வரை நேராகவும், கருங்கல்லாலும் கட்டப்பட்டவை; அதன்மேல் பகுதிகள் சிறிது சிறிதாக நேராகச் சென்று சிகரத்தில் முடிகின்றன. இக்கோபுரங்களின் சிகரங்கள் வளைத்த கூரை போன்ற அமைப்புடையவை.

நான்கு ராச கோபுரங்களின் கீழ் அமைந்துள்ள கோபுர வாயில்கள் நான்கும் மிகவும் உயரமானவை. ஒவ்வொரு ராச கோபுரவாயிலும் 40 அடி (12 மீ) உயரம் கொண்டு விளங்குகின்றது.

ராச கோபுர வாயிலின் இரு பக்கங்களிலும் நாட்டிய முத்திரை என்று சொல்லப்படும் பரதக்கலைச் சிற்பங்கள் பொலிவுடன் காணப்படுகின்றன. எம் பெருமான் நடராஜர் தெற்கு முகமாகத் திருநடம் புரிந்தருள்வதால், தெற்குக் கோபுரத்தின் மேல் சுவாமியினுடைய கொடி கட்டப்பட்டிருக்கின்றது.

நடராஜப் பெருமான் தெற்கு முகமாக எழுந்தருளியிருப்பினும், திருவிழாக் காலங்களில் சுவாமி புறப்பாடு

முதலியவை கிழக்குப்பக்கமாகவே-கிழக்குப் பக்கக் கோபுர வாயில் வழியாகவே—நடைபெறுகின்றன. கிழக்குக் கோபுரம் வழியாகக் கோயிலின் உள்ளே நுழைந்ததும், கோபுரத்தின் இருபுறங்களிலும் தென்பக்கத்தில் விநாயகப் பெருமானும், வடபக்கத்தில் சுப்பிரமணியரும் கிழக்கு முகமாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கக் காணலாம்.

தெற்குக் கோபுர வழியாக உள்ளே நுழைந்தாலும், கோபுரத்தில் விநாயகரும், சுப்பிரமணியரும் சிறிய திரு வுருவங்களில் காட்சி தருகின்றார்கள். மேல் பாகத்தில் இரு புறங்களிலும் சுவாமியினுடைய துவார பாலகர்களில் முதல்வர்களாக ஆட்கொண்டார், அய்யாக்கொண்டார் திருச்சந்நிதிகள் இருக்கின்றன.

நான்கு ராசகோபுரங்களைச் சுற்றிலும் சுமார் 30அடி (9 மீ.) உயரமுள்ள கருங்கல்லாலான மதிற்சுவர் அமைந் துள்ளது. இது வீரப்ப நாயகர் என்பவர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. ஆகையால் இம்மதிற்சுவர், 'வீரப்ப நாயகர் மதில்' என வழங்கப்பட்டு வருகின்றது.

முக்குறுணி விநாயகர் கோயில்

தெற்குக் கோபுரத்தின் வழியாகக் கோயிலுக்குள் சென்றால், தென்மேற்கு மூலையில் கிழக்கு முகமாக முக் குறுணி விநாயகர் திருச்சந்நிதி அமைந்துள்ளது. இத் திருச்சந்நிதி அமைந்துள்ள பிராகாரம், திருக்கோயிலின் வெளிப் பிராகாரமாகும். இம் முக்குறுணி விநாயகர் பெரிய திருவுருவினரும், சிறந்த வரப்பிரசாதியுமாவார். சுமார் 8 அடி உயரமுள்ள இவ்விநாயகர் போன்ற பெரிய உருவமுள்ளவராயும், மூர்த்திகரமாயும் உள்ள விநாயகரை வேறு எந்தத் தலத்திலும் காணவியலாது.

இத்தலத்தில் சிறந்த வரப்பிரசாதியாகத் திகழ்கின்ற இம்முக்குறுணி விநாயகர், தங்களுடைய விருப்பங்களை யெல்லாம் தடையின்றி முடித்தருள்கின்றார் என்பது பக்தர் களின் நம்பிக்கை. அதற்காக 108, 1008 தேங்காய் உடைக் கின்றார்கள். இஃது இன்றும் நடைபெற்று வருகின்றது.

கற்பக விநாயகர் கோயில்

இவ் வெளிப்பிரார்காரத்தின் வலப்பக்கமாகச் சென்றால் மேற்குக் கோபுரத்தை அடுத்துக் கற்பக விநாயகர் திருச் சந்நிதி அமைந்துள்ளது. இவ்விநாயகப் பெருமான் மேற்குக் கோபுரத்தின் வெளிப்பக்கத்தில் கோயில் கொண்டுள்ளார், இவரே தல விநாயகர்.

இவ் விநாயகப் பெருமான் ஏழு திருக்கரங்களோடு நர்த்தன கணபதியாகத் திருக்காட்சி யருள்கின்றார். இவ் விநாயகர், துருவாச முனிவருக்கு இரவு சாமவேளையில் நடனம் செய்து காட்சியருளியவர். ஆகையால், நர்த்தன விநாயகராகக் காட்சி தருகின்றார்.

சுப்பிரமணியர் கோயில்

மேற்குக் கோபுரத்தின் உட்புறத்தில் வடக்குப் பக் கத்தில் கிழக்கு முகமாகப் பாலசுப்பிரமணியர் திருச்சந்நிதி அமைந்துள்ளது, இச்சந்நிதியில்தான் ஐப்பசி மாதம் கந்தசஷ்டிக்கு ஆறுநாள் திருவிழா நடைபெற்று, சஷ்டியில் (தெற்கு வீதியில்) சூரசங்காரம் மிகச் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

சோமசுந்தரர் கோயில் முதலியன

இவ்வெளிப் பிராகாரத்தில் மேலும் வடக்கே சென்றால் மதுரை சோமசுந்தரக் கடவுள் திருச்சந்நிதி அமைந்

துள்ளது. அதற்கு வடக்கில் நூற்றுக்கால் மண்டபமும், அம்மண்டபத்தின் அருகில் ஒற்றைக்கால் மண்டப விநாயகர் எனப்படுகின்ற திருமூல விநாயகர் திருச்சந்நிதியும் அமைந்துள்ளன.

திருமூல விநாயகர் திருச்சந்நிதிக்கு எதிரில் சிவகங்கைத் தீர்த்தமும் (குளம்) அழகுமிக அமைந்து விளங்குகின்றது. இச்சிவகங்கைத் தீர்த்தம் மிகவும் விசேடமானது. கோயிலுக்குள்ளே திருக்குளம் இதைப் போல் பெரியதாகவும், நாற்புறமும் நல்ல படிக்கட்டுகள் அமைந்ததாகவும் வேறு தலத்தில் இல்லை.

சிவகாமசுந்தரி அம்பாள் கோயில்

மூன்றாம் பிராகாரமாகிய இவ்வெளிப் பிராகாரத்தில் மேலும் வடக்கே சென்றால், ஞான சக்தியாகிய சிவகாம சுந்தரி அம்பாள் திருக்கோயில் அழகாக அமைந்து, அருள் வழங்குகிறது.

இவ்வம்பாள் கோயிலில், வேறு எத்தலத்திலும் இல்லாத சித்ரகுப்தர் திருச்சந்நிதி அமைந்துள்ளது. இங்குக் கொடி மரம் இருக்கும் திருமண்டபம் மிகவும் விரிவானது. இடைத்தாங்கல் ஏதுமின்றி இவ்வளவு அகலமுள்ள கருங்கல் மண்டபம் வேறெங்கும் இருப்பது அரிது.

இவ்விடத்தில் தேவி மகாத்மியம் பழைய சித்திரக்கலை மூலம் எழுதப்பட்டுள்ளது. ஆனால், இது எழுதப்பட்டு நெடுங்காலமானதால் இப்பொழுது அழிந்த நிலையில் உள்ளது. இங்குக் கருங்கல் தூண், மரத்தூண் போல் வேலைப்பாடு மிக்கதாக அமைந்து விளங்குகின்றது; சிற்ப வேலைப்பாடுகளும் மிகுதியாக உள்ளன; கருங்கல் தொங்குகின்றது.

இக்கோயிலில் அம்பாள் சிவகாம சுந்தரி அருள் பொழியும் திருநயனங்களோடு, அழகுமிகு திருக்கோலத்தில் கிழக்கு முகமாக நின்று, அடியார்க்குத் திருக்காட்சி தந்தருள்கின்றார்.

பாண்டிய நாயகர் கோயில்

இம்மூன்றாம் பிராகாரத்தில் மேலும் வடக்கே சென்றால், வடக்கு முகமாகத் துர்க்கையம்பாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு வடக்கே சண்முகப் பெருமான் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் பாண்டிய மன்னனால் கட்டப்பட்டதாகையால், சண்முகப் பெருமான் 'பாண்டிய நாயகர்' என்னும் பெயரும் பெற்று விளங்குகின்றார்.

இக்கோயில் ஒரு தேர்போலக் கருங்கல் சக்கரங்கள் யானைகள் ஆகியவற்றுடன் அமைந்து அழகு மிகுந்து விளங்குகின்றது. இக்கோயில் தூண்களில் அற்புதச் சிற்பவேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சண்முகப்பெருமான் மயில் வாகனத்தின்மீது, ஆறு திருமுகங்களுடனும், பன்னிரு திருக்கரங்களுடனும், வள்ளி தெய்வயானையோடும் காட்சி தந்து, அன்பர்கட்கு அருள்புரிகின்றார்.

இம் மூன்றாம் பிராகாரத்தில் முக்குறுணி விநாயகர் வலப்புறத்திலும், பாண்டியநாயகராகிய சுப்பிரமணியர் இடப்புறத்திலும் எழுந்தருளித் திகழ, நடுவில் தாயாராகிய சிவகாமசுந்தரி அம்பிகை திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் பாங்கு, அன்பர்கட்கு இன்பத்தை அளிப்பதாகும்.

இக்கோயிலின் வடக்குப்பக்கத்தில் தெற்கு முகமாக உள்ள சண்முகர் சந்நிதி என்னும் கோயிலில் சுப்பிரமணியரும், தர்மராஜா (இயமன்) சந்நிதியும் அமைந்திருக்கக் காணலாம். இதற்குக் கிழக்கில் நவக்கிரகங்களால் பூசிக்கப் பட்ட நவலிங்கக் கோயில் அமைந்துள்ளது.

நவலிங்கக் கோயிலுக்குக் கிழக்கில் ஐந்து சபையில் அன்னமய கோசமான ராசசபை என்னும் ஆயிரக்கால் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபமே நடராஜப் பெருமானுக்கு ஆனி, மார்கழி மாதங்களில் நிகழும் அபிடேகமும், அலங்காரமும் நடக்கும் இடமாகும். நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவம் நடக்கும் சபையுமாகும். இங்கிருந்து தெற்கே சென்றால் கோயிலுக்குள் செல்லும் வழி அமைந்துள்ளது.

உட்பிராகார கோயில் (மனோமயம்)

உட்பிராகாரம் என்பது இரண்டாவது பிராகாரம். இப்பிராகாரத்துக்குச் செல்ல இரண்டு வழிகள் உண்டு; கிழக்குப் பக்கமாக ஒரு வழியும், மேற்குப் பக்கமாக ஒரு வழியும் அமைந்துள்ளன. கிழக்குப் பக்கமாக உள்ள வழியிலேயே செல்லலாம்.

கிழக்குப் பக்கமாக உள்ள வழியில் சென்றால் 21 படிகள் உள்ளன. உட்புறமாக இப்படிகளில் இறங்கியவுடன் இருபக்கங்களிலும் புருஷா மிருகங்கள் இருக்கின்றன. கோயிலினுள்ளே செல்வோர் தம்மையும் அறியாது புரியும் தீயனவற்றைப் போக்கியருளுமாறு இவர்களிடத்தில் வேண்டிக் கொள்ள வேண்டியது முறை.

பிராகாரத்தை அடைந்தவுடன் தெற்குப் புறமாக வலப்பக்கம் சென்றால் கிழக்குப் பிராகாரம் முடிந்து

தெற்குப் பிராகாரம் தொடங்குகின்றது. இத்தெற்குப் பிராகாரத்தில் காலசங்காரமூர்த்தி சந்நிதி, மனோமய கோசமாகிய நிர்த்தன சபையில் காளியுடன் ஆடிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தி சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

இந்நிர்த்தன சபையும் ஒரு தேர் வடிவில் அமைந்தது. இச்சபைக்குச் சக்கரங்களும் குதிரைகளும் அமைந்துள்ளன. இச்சபையின் தூண்களில் சிற்பவேலைப்பாடுகள் சிறப்பாக உள்ளன.

இப்பிராகார்ரத்தில், நரசிம்மாவதாரத்தில் உண்டான மதத்தை அடக்கச் சிவபெருமான் எடுத்தருளிய அவதாரமான சரபேசுவரர் திருச்சந்நிதியும் அமைந்துள்ளது. இவரைப் பற்றி மந்திர சாத்திரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அங்கிருந்து நடராஜமூர்த்தியின் கொடிமரத்துக்கு வந்து, ஆனந்த நடராஜரைத் தரிசித்துக் கொண்டு மேலும் வலமாக வந்தால் இலக்குமி சந்நிதியையும், தண்டாயுதபாணி சந்நிதியையும் கண்டு வழிபடலாம்.

மேற்குப் பிராகாரத்தில், பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்குச் சொல்லியவாறு-சிதம்பரத்தில் இரண்டாவது பிராகாரத்தில், மூன்றுவிரல் அடையாளமுள்ள இடத்தில் தேவாரம் இருக்கின்றது என்று சொல்ல அவ்வாறே திருமுறை கண்ட சோழன் என்னும் மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் தில்லைக்கு வந்து, தில்லை வாழந்தணர்களின் துணை கொண்டு, கறையான் அரித்தது போக மிகுதியான தேவாரம் இருந்த இடத்தைக் காண்பித்த, திருமுறை காட்டிய விநாயகர் சந்நிதியும், பொல்லாப் பிள்ளையார் சந்நிதியும் அமைந்துள்ளன.

மேற்குப் பிராகாரத்தின் கடைசியில் கிழக்கு முகமாக அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர் நால்வர் சந்நிதியும் அமைந்துள்ளன.

வடக்குப் பிராகாரத்தில் தட்சிணாமூர்த்தி, மல்லிகேசுவரர், வல்லபகணபதி, மோகனகணபதி, ஆகியோர் சந்நிதிகள் அமைந்துள்ளன. இப்பிராகாரத்தின் நடுவிலுள்ள வழியில் வடக்கு முகமாகச் சென்றால் விநாயகர், சிவலிங்கம், கருங்கல்லில் சமைக்கப் பெற்ற இத்தலத்துப் புனித மரம் ஆகியவை அமைந்துள்ளன. (புனிதமரம்—தில்லை மரம்)

இங்கு அறுபத்து மூன்று நாயன்மார்களும், இவர்கட்கு எதிரில் சுவரின்மேல் சிவபிரானின் 26 மூர்த்தங்களும், ஸ்ரீ சக்கரமும், ஸ்ரீ தேவியின் அம்சமும் ஓவியவடிவில் வரையப்பட்டுள்ளன. இங்குச் சண்டேசுவரர் சந்நிதியும், இதன் கிழக்கே அருணாசலேசுவரர் சந்நிதியும் அமைந்துள்ளன. பக்தர்கள் சண்டேசுவரர் சந்நிதியில் நின்று கைதட்டி ஒலி எழுப்பி வணங்குவது வழிபாட்டு மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அருணாசலேசுவரர் சந்நிதியிலிருந்து தெற்குப் பக்கமாக வந்தால், ஆதிமூலமாயும் சுவயம்பு மூர்த்தியுமாகிய மூலட்டானேசுவரர் திருச்சந்நிதி அமைந்துள்ளது. இம்மூர்த்தியே இத்தலம் தில்லைவனமாக இருந்தபொழுது, தில்லை என்னும் மரத்தடியில் வியாக்கிரபாத முனிவரால் பூசிக்கப்பட்டு வந்தவர் அம்முனிவரின் குமாரரான உபமன்யு முனிவர் குழந்தையாயிருந்த பொழுது பாலுக்காக அழுத அக்குழந்தையின் பொருட்டுப் பாற்கடலையே இவர் உண்டாக்கினார்.

சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டில் ''பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட, பால்கடல் ஈந்த பிரான்'' என்று இத்திருமூலநாதரைப் போற்றிப் பாடினார்.

திருமூலநாதர் கோயிலில் மூலட்டானேசுவரர், உமையம்மை சந்நிதிகளும், வியாக்கிரபாதர், பதஞ்சலி இருவருடைய மூர்த்தங்களும் உள்ளன. இவர்களையெல்லாம் வழிபட்டுக் கொண்டே வந்தால், சாஸ்தா எனப்படும். ஐயப்பன் சந்நிதியும், திருவிழா மண்டபமும், யாகசாலையும் காணப்படும். இங்கிருந்து தெற்கே சென்று, பின்னர் மேற்கு நோக்கிச் சென்றால் தேவசபை காணப்படும்.

தேவசபை என்று சொல்லப்படுவது 'பேரம்பலம்' இங்குதான் உத்சவ மூர்த்தங்கள் இருக்கின்றன. மேலும் இங்குத்தான் தில்லைவாழந்தணர்களாகிய தீட்சதர்கள் சபை கூட்டிப் பேசுவர்.

இத்தேவ சபைக்கு மேற்குப் பக்கத்தில் சட்டநாதர் சந்நிதி, சனீசுவரர் சந்நிதி, நவக்கிரகங்கள் சந்நிதி, அர்த்தசாம அழகர் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

முதற் பிராகாரத் திருக்கோயில்

தேவசபையையும், அதன் மேற்பாலுள்ள சந்நிதிகளையும் கண்டு வழிபட்டதன் பின்னர் முதற்பிராகாரத்திற்குச் செல்லுதல் வேண்டும். இம் முதற்பிராகாரத்திற்குச் செல்லும் வாயில் வழியாக உள்ளே சென்றால், முதலில் சிற்றம்பலத்தின் தங்க ஓடுகள் வேய்ந்த விமானம் தெரியும். இங்குத்தான் ஆனந்த நடராஜமூர்த்தி, சிவகாம சுந்தரியுடன் எப்போதும் ஆனந்தத்தாண்டவம் ஆடியருள்கின்றார்; தாண்டவமாடி, நம்மையெல்லாம் ஆட்டிக் கொண்டிருக்கின்றார்.

பொன்னம்பலத் தத்துவம்

சித்சபையும் கனகசபையும் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றன. இவ்வாறு சேர்ந்திருக்கும் இடந்தான் பொன்னம்பலம், சிற்றம்பலம், ஞானசபை எனும் பல பெயர்களைக் கொண்டு விளங்குகின்றது.

சித்சபை எனப்படுகின்ற பொன்னம்பலத்தின் மேல் ஒன்பது தங்கக்கலசங்கள் உள்ளன — இவ்வொன்பதும் ஒன்பது சக்திகளாகும்.

பொன்னம்பலத்தில் 64 கைம்மரங்கள் உள்ளன — இவை 64கலைகளாகும். 21600 ஓடுகள் வேயப்பட்டுள்ளன- இவை மனிதனால் ஒவ்வொரு நாளும் விடப்படுகின்ற சுவாசங்களின் எண்ணிக்கையை உணர்த்துவன. 72000 ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன—இவை மனிதனுடைய சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகளின் எண்ணிக்கையை உணர்த்துவன.

மனிதனுடைய இருதயத்தில் இருக்கின்ற இறைவனே இப் பொன்னம்பலத்திலும் இருக்கின்றார் என்பதனை உணர்த்தவே, மனித உடல் போலவே அம்பலம் அமைந்திருக்கின்றது.

கனகசபையில் உள்ள இரண்டாவது பரமேசுவரரான நந்தியம் பெருமானை வணங்கியே, நடராஜப்பெருமானைத் தரிசிக்க வேண்டும்.

மனிதனுடைய இருதயம், உடம்பின் நடுவே இல்லாமல் இடப்புறத்தே தள்ளியிருப்பது போல், கர்ப்பக்கிருகம் திருக்கோயிலின் மத்தியில் இல்லாமல் சிறிது தள்ளியே அமைந்திருக்கின்றது.

மனித இருதயத்தில் இரத்தம் நேரில் செல்லாமல் பக்கங்களிலிருந்தே செல்வது போல், இத்திருக்கோயிலிலும் நேராக வழி இல்லாமல் இருபக்கங்களிலும் அமைந்திருக்கின்றது.

கனகசபையில் உள்ள பதினெட்டுத் தூண்களும் பதினெண் புராணங்களை உணர்த்துவன; ஐந்து வெள்ளிப் படிகளும் ஐந்தெழுத்துக்களை உணர்த்துவன; வெள்ளிப் பலகணிகள் தொண்ணூற்றாறும், தொண்ணூற்றாறு தத்துவங்களை உணர்த்துவன.

சித்சபையில் உள்ள ஐந்து தூண்களும் ஐம்பொறிகளை உணர்த்துவன.

பிரமபீடத்தில் உள்ள பத்துத் தூண்களில், கீழ் ஆறு தூண்களும் ஆறு சாத்திரங்களை உணர்த்துவன; மேல் இருக்கும் நான்கு தூண்களும் நான்கு வேதங்களை உணர்த்துவன

இவ்வாறு தத்துவார்த்தத்தோடு அமைந்த பிரணவ பீடம், சதாசிவ பீடங்களில் முறையே இரகசியமும் நடராஜப் பெருமானும் சிவகாமசுந்தரி அம்பாளும் எழுந்தருளியிருக்கின்றனர்.

நடராஜப் பெருமானின் திருமுடியிலுள்ள சந்திரனினின்று உண்டான படிக லிங்கமும், மாணிக்க மயமான இரத்தின சபாபதியும், சுவர்ண கால பைரவரும், பலி நாயகர் முதலானவர்களும் எழுந்தருளி யிருக்கின்றனர்.

சிதம்பர இரகசியம்

சித்சபையில் சபாநாயகரின் வலப்பக்கத்தில் உள்ளது ஒரு சிறு வாயில். இதில் உள்ள திரை அகற்றப்பெறும்; ஆரத்தி காட்டப் பெறும். இதனுள்ளே திருவுருவம் ஏதும்

தோன்றாது; தங்கத்தால் ஆன வில்வ தளமாலை ஒன்று தொங்கவிடப் பட்டுக் காட்சியளிக்கும். மூர்த்தி இல்லாமலேயே வில்வதளம் தொங்கும், இதன் இரகசியம், இறைவன் இங்கு ஆகாய உருவில் இருக்கின்றார் என்பது தான்.

அகண்ட பெருவெளியில் நிறைந்திருக்கும் இறைவனை எந்த உருவில் வழிபடுவது? நல்ல வெறும் வெளியையே இறைவனாக இங்கு வழிபட வகை செய்யப்பட்டுள்ளது.

திருவாரூரில் மண்ணாக, திருவானைக்காவில் நீராக, திருவண்ணாமலையில் நெருப்பாக, திருக்காளத்தியில் காற்றாக வழிபடப்பெறும் இறைவனையே, இங்கு ஆகாய உருவில் வழிபட்டு வருகின்றார்கள். தில்லை ஆகாயத் தலமல்லவா!

சிவன் விஷ்ணு சந்நிதிகள்:

சித்சபையில் நடம்புரியும் நடராஜப்பெருமானைத் தரிசித்துக்கொண்டு பிராகாரமாக வந்தால், விநாயகர், இலிங்கோத்பவர், சுப்பிரமணியர், ஆகியவர்களை வணங்கிக்கொண்டு, அருகிலுள்ள வழியில் மேலே சென்றால் அங்கு ஆகாயலிங்கத்தை வழிபடலாம்; பின்னர் கீழே வந்து பள்ளியறைக்கு அருகில் ஜைமினி, பிட்சாடனர், பைரவர், சந்திரர், சூரியர், சண்டேசுவரர் சந்நிதிகளையும் கண்டு வழிபடலாம்.

இப்பிராகாரத்தின் கீழ்ப்பாகத்தில் நாட்டிய சம்பந்தமான சிற்பங்களும், பிறவகைச் சிற்பங்களும் அழகுமிகக் காணப்படும். இப்பிராகாரம் வழியாக வந்து மீண்டும் நடராஜர் சந்நிதி அடைந்து, எதிரில் உள்ள படிகளின் மேல் ஏறிச்சென்று நின்று பார்த்தால், தெற்குமுகமாக உள்ள நடராஜர் சந்நிதியையும், கிழக்குமுகமாக உள்ள கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதியையும் கண்டு வழி

படலாம். இவ்வாறு ஒரே இடத்தில் நின்று சிவன், விஷ்ணு இருவரையும் வழிபடும் வகையில் இரு திருச்சந்நிதிகளும் அமைந்துள்ள தலம் வேறு இல்லை. இஃது இத்தலத்தின் தனிச்சிறப்பு.

நால்வர் வருகை:

வானளாவித் திகழும் நரன்கு ராச கோபுரங் களோடும், அகன்றுயர்ந்த நான்கு கோபுரத் திருவாயில் களையும் கொண்டு விளங்கும் இத்திருக்கோயிலுக்குச் சமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் வருகை தந்து, எம்பெருமான் நடராஜரைக்கண்டு வணங்கிப் போற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

இப்பெரியார்கள் நால்வரும் எழுந்தருளியபோது, நான்கு திருக்கோபுர வாயில்கள் வழியாகவே திருக் கோயிலுள் நுழைந்தனர் என்பர். கிழக்குக் கோபுர வாயிலாக மாணிக்கவாசகரும், தெற்குக் கோபுர வாயில் வழியாக ஞானசம்பந்தரும், மேற்குக் கோபுரவாயிலில் அப்பரும், வடக்குக் கோபுர வாயில் வழியாகச் சுந்தரரும் சென்று சித்சபையில் நடம்புரியும் சபாநாயகரைக் கண்டு வணங்கி வழிபட்டனர்.

புனிதக் கோயில்

நால்வர் முதலான பெரியோர்கள் எழுந்தருளிய தாலும், மாணிக்கவாசகர், மறைஞானசம்பந்தர், திரு நாளைப் போவார் முதலான பெரியோர்கள் முக்தியெய்தி யமையாலும், உமாபதிசிவம், திருநீலகண்டர் முதலான பெரியோர்கள் தோன்றியமையாலும், சம்பந்தர், சேந்தனார் போன்ற பெரியோர்கள் கண்ட அருளற்புத நிகழ்ச்சிகளாலும் இத்தில்லைத்தலம் தெய்விகப் புனிதம் மிக்கதாகத் திகழ்கின்றது.

7. ஐந்து சபைகள்

இப்புனிதத் தலத்தில் பெருஞ் சிறப்புற்று விளங்குவன ஐந்து சபைகள். இவை: சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, ராசசபை என்பவை.

சிற்றம்பலம்

நடராஜப் பெருமான் திருநடம் புரிந்தருளும் இடம் சிற்றம்பலம். இதனையே 'சித்சபை' என்பர். எம் பெருமான் இச்சபையில் திருநடம் புரிந்து ஐந்தொழில் களையும் நிகழ்த்துகின்றார். எம்பெருமானின் ஐந்தொழில் களான ஆக்கி, யழித்து, அளித்து மறைத்து அருளல் என்பன ''தோற்றம் துடியதனில்'' என்னுந் திருப்பாட்டில் கூறப்பட்டுள்ளன. எம்பெருமானின் திருநடனம் நின்றால், இவ்வுலக இயக்கம் நின்று விடும்.

சித்சபையில் நிகழும் திருநடத்தைச் சிவகாம சுந்தரி யார் இடையறாது கண்டு மகிழ்வது, ஆன்மாக்களின் பிறவிப் பிணியைப் போக்குவதற்கே என்று குமரகுருபர சுவாமிகள் கூறுகின்றார்.

இச்சிற்றம்பலத்தை அப்பர் அடிகள், ''தூய செம் பொன்னினால் எழுதிவேய்ந்த சிற்றம்பலம்'' எனக் கூறு கின்றார். இதனை வடமொழியில் 'தப்ரசபா' என்று கூறுவர்.

இச்சிற்றம்பலத்திற்கு முதலில் பொன் வேய்ந்தவன் இரண்யவர்மன் என்று கோயிற் புராணம் கூறுகின்றது. இவனுக்குப் பின்னர் ஆதித்தசோழன் மகன் முதற் பராந்தக சோழன் பொன் வேய்ந்தான்.

இச்சிற்றம்பலத்தின் உள்ளே செல்வதற்கு ஐந்து படிகள் இருக்கின்றன. இவற்றிற்குப் பஞ்சாட்சரப் படிகள் என்று பெயர். இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் இருக்கின்றன. சிந்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படிகளில் உள்ள யானைகளுள் ஒன்று அந்நூலை எடுத்து நடராஜப் பெருமான் திருவடியில் வைத்தது. அதனால் இந்நூலுக்குத் 'திருக்களிற்றுப்படியார்' என்னும் பெயர் அமைந்தது.

பொன்னம்பலம் (கனகசபை)

பொன்னம்பலம் என்பது சிற்றம்பலத்திற்கு முன் உள்ளது. இப்பொன்னம்பலம், எம்பெருமான் அபிடேகம் கொண்டருளும் இடம். இங்குப் படிக இலிங்கத்திற்கு நாடோறும் ஆறுகால பூசையும், இரண்டாங்காலத்தில் இரத்தினசபாபதிக்கு அபிடேக வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இப்பொன்னம்பலத்தின் முகட்டை, ஆதித்தசோழன் கொங்கு நாட்டிலிருந்து கொண்டுவந்த மாற்றுயர்ந்த பொன்னால் வேய்ந்தான் என்று சேக்கிழார் சுவாமிகள் இடங்கழி நாயனார் புராணத்தில் கூறியுள்ளார். மணவில் கூத்தனான காலிங்கராயன் என்பான் இப் பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான் என்று இக் கோயிற் கல்வெட்டுப் பாடல் கூறுகின்றது.

பேரம்பலம்

பேரம்பலம் என்பதனைத் 'தேவசபை' என்று கூறுவர். இப் பேரம்பலத்தைத் திருஞானசம்பந்தர்,

"நிறைவெண் கொடிமாடம்
நெற்றி நேர்தீண்டப்

பிறைவந் திறைதாக்கும்
பேரம்பலம்”

எனப் பாடியுள்ளார். இப் பேரம்பலத்தில் பஞ்சமூர்த்தி களும் எழுந்தருளியிருக்கின்றனர்.

இப் பேரம்பலத்தை, மணவில் கூத்தனான காலிங்க ராயன் விக்கிரம சோழன் செம்பினால் வேய்ந்தான் என்று தில்லைக் கோயிற் பாடல் கூறுகின்றது. இப் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தவன் மூன்றாம் குலோத் துங்க சோழன்.

நிருத்த சபை

நிருத்த சபை என்பது நடராஜப் பெருமானின் கொடி மரத்துக்குத் தென்பால் உள்ளது. எம்பெருமான் ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய இடம் இது. இங்கு அப்பெரு மானின் திருமேனி காட்சி தருகின்றது.

ராச சபை

ராச சபை என்பது ஆயிரக்கால் மண்டபம். ஆனி, மார்கழி மாதங்களில் நடைபெறும் ஒன்பதாம் திருநாள் களில், நடராஜப் பெருமான் திருத்தேரில் எழுந்தருளி நான்கு வீதிகளில் உலாவந்த பின்னர், இரவில் இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருந்து, விடியற்காலை யில் அபிடேகம் கொண்டருளப் பெற்று, பத்தாம் நாள் பிற்பகலில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குத் திருக் காட்சியளித்து, பெருமான் முன்னவும் பெருமாட்டி பின்னவும் மாறி மாறி நடனம் செய்து கொண்டு சிற்றம் பலத்திற்கு எழுந்தருளுங் காட்சியே அநுக்கிரக தரிசன மாகும். அஃது இச் சபையின் முன்புதான் நிகழ்கின்றது.

ராச சபையாகிய ஆயிரக்கால் மண்டபத்தில் பல பெரியோர்கள் வீற்றிருந்து, பல விசேடமான காரியங்களை நடராஜப் பெருமான் திருவருளால் நிகழ்த்திப் பெருமை கொண்டனர்.

பதஞ்சலி வியாகரணம்

ஆதிசேடன் அவதாரமான பதஞ்சலி முனிவர், கௌட பாதர் முதலான தம்முடைய சீடர்களுக்கு ராச சபையாகிய ஆயிரக்கால் மண்டபத்தில் வியாகரண சூத்திர பாடம் சொல்லிக் கொடுக்க எண்ணினார்; தாம் ஆதிசேடனின் அவதாரமானபடியால், தம்முடைய மூச்சுக் காற்று நஞ்சினால் சீடர்கள் வெந்து சாம்பலாகி விடுவார்கள் என்று கருதி, தமக்கும் சீடர்களுக்கும் மத்தியில் திரை ஒன்று இட்டு, அத்திரைக்குப் பின்னால் இருந்து பாடம் சொல்லிக் கொடுப்பதாகவும், பாடம் முடிகின்ற வரையில் எவரும் திரையை விலக்கிப் பார்க்கக் கூடாது என்றும், பாடம் சொல்லிக் கொடுக்கும் போது தம் உத்தரவின்றி வெளியில் செல்லக் கூடாது என்றும், தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டார்.

இவ்வாறு கட்டளையிட்ட பதஞ்சலி முனிவர், தம்முடைய ஆயிரம் வாய்களாலும் தம் சீடர்கள் அனைவரும் கேட்கும் கேள்விகளுக்கு ஒரே காலத்தில் விடையளித்துக் கொண்டு, சீடர்களெல்லோருக்கும் நன்கு புரியும் படியாகப் பாடம் கற்பித்து வந்தார்.

இவ்வாறு பாடம் கற்பித்து வந்த இரகசியத்தை எவரும் அறியார்.

அந்நிலையில் ஒருநாள், குரு சீடர்களெல்லோருக்கும் ஒரே நேரத்தில் ஐயந்திரிபறப் பாடம் கற்பிக்கும் அதிசயத்

தை நேரிற் காண விரும்பி, சீடர்களில் ஒருவர் குருவின் கட்டளையை மீறித் திரையை விலக்கி விட்டார்.

அவ்வளவுதான்! பதஞ்சலி முனிவரின் வாக்குப் பொய் யாகுமோ? நொடிப் பொழுதில் சீடர்கள் அனைவரும் வெந்து சாம்பலாகி விட்டனர்.

நடந்தவற்றை ஊகித்தறிந்த குருவாகிய பதஞ்சலி முனிவர் மிகவும் உள்ளம் வருந்தினார்; ஆயினும், அப் போதுதான் எங்கோ வெளியில் சென்று விட்டுத் திரும்பி வந்தவரான கௌடபாதரைக் கண்டு, இவன் ஒருவனாகி லும் எஞ்சினானே என்று எண்ணி மகிழ்ச்சி கொண்டார்; ஆனால், தம் கட்டுப்பாட்டை மீறிஉத்தரவின்றி வெளிச் சென்று வந்ததையும் மறந்து, தம் தவவலிமையால் தம் முடைய கல்வியை அக்கௌடபாதருக்கு முழுமையாக உபதேசித்தருளினார்.

இவ்வாறு வியாகரண சூத்திர பாடம் கற்பித்த பதஞ்சலி முனிவர், திருக்கோயிலின் மேலைக் கோபுரத்தில் உள்ள குகையில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

சிறப்பு வாய்ந்த வியாகரண சூத்திர பாடம் நடந்த இடம் ராசசபை என்னும் ஆயிரக்கால் மண்டபம்.

சபைகள் ஐந்தும், ஐந்து கோசங்களாகும். அவற்றுள் ராசசபை, கோசங்கள் ஐந்தில் அன்னமய கோசம் என்பர்; ஆயிரம் இதழ்கள் கொண்ட கமலம் என்றும் கூறப்படும்.

அருளற்புதக் களம்

சமய குரவர் நால்வருள் மாணிக்கவாசக சுவாமிகள் ஆயிரக்கால் மண்டபத்திலேயே ஈழத்துப் புத்தமன்னனை

மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசவைத்தருளினார்; புத்தர்களை வாதில் வென்று புகழ் பெற்றார்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் பாடியதை, இறைவன் அந்தண உருவில் வந்து ஏட்டில் எழுதி, தம் கைச்சாத்திட்டதும் இம்மண்டபத்திலேயே நிகழ்ந்தது.

அநபாய சோழனின் அமைச்சரான சேக்கிழார் சுவாமிகள், நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பான பெரியபுராணத்தை இயற்றுவதற்கு இங்குவந்து சபா நாயகரைக் கண்டு வணங்க, அப்பெருமான் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருள் செய்ய, இவ் வாயிரக்கால் மண்டபத்திலேயே இருந்து அப்புராணம் முழுவதையும் இயற்றி, அரங்கேற்றம் செய்தருளினார்.

இவ்வாறு பல அருளற்புத நிகழ்ச்சிகள் இந்த ராச சபையில் நிகழ்ந்து விளங்கின.

அரங்கேற்றம்

நடராஜப் பெருமான் பிரமாவின் தலைகளை மாலையாக அணிந்திருக்கிறார். அம்மாலையில் முப்பத்திரண்டு தலைகள் உள்ளன. எம்பெருமான் ஆடும்பொழுது திருமுடியிலுள்ள சந்திரனிடமிருந்து அமிர்த தாரைகள் மாலையில் உள்ள பிரமாவின் தலைகளின்மீது விழ, அத்தலைகள் அமிர்தத்தினுடைய சம்பந்தத்தினால் பாடத் தொடங்கின. இதிலிருந்துதான் இசை உண்டாயிற்று என்று சங்கீத சாத்திரம் கூறுகின்றது. ஆகையால் இசை பயிலும் இசைக் கலைஞர்களும், நாட்டியம் பயிலும் நாட்டியக் கலைஞர்களும் முதலில் இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்து புகழ் பெறுகின்றார்கள்.

முடிசூட்டு மண்டபம்

சோழமன்னர் மரபில் முடிசூடப் பெறுபவர்களுக்கு, முன் கூறிய பஞ்சாக்கரப்படியில் அபிடேகமும், இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நடைபெற்று வந்தன. இம்முறைப்படி சில ஆண்டுகளுக்கு முன்னர்ச் சோழமன்னரின் குலத்தோன்றலாகிய பிச்சாவரம் ஆண்டியப்ப சோழர்க்கு முடிசூட்டுவிழா நடைபெற்றது.

இம்மன்னர் மரபினர்க்குத் தில்லைவாழந்தணர்களே முடிசூட்டி வந்தனர். இது கூற்றுவ நாயனார் புராணத்தில் ''செம்பியர்தம் குலமுதலோர்க்கன்றிச் சூட்டோமுடி'' என்று தில்லைவாழந்தணர்கள் பெருமிதமாக மொழிந்தருளிய மொழியால் அறியலாம்.

சைவவேளாளர் குலத்தினராகிய நாட்டுத் தேவராய பிள்ளையும், அவர் முன்னோரும் முடியை எடுத்துக் கொடுக்க, தில்லைவாழந்தணர்கள் அம்முடியை வாங்கிச் சூட்டுவது வழக்கம். இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லைநகரில் முடிசூட்டப்பெற்ற செய்தியைத் திருமாணிக்குழி கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

இவ்வாறு பல விசேட நிகழ்ச்சிகளும் நிகழும் இடமாக இருந்து ராசசபை சிறப்புற்று விளங்குகின்றது.

8. நாதாந்தத் தாண்டவம்

இத்தில்லைத் தலத்தில் உள்ள சித்சபையில் நடுவே நின்று நடராஜப் பெருமான் எக்காலத்தும் நாதாந்தத் தாண்டவம் ஆடியருள்கின்றார்.

எம்பெருமான் இத்திருநடனத்தால் புரிந்தருளும் ஐந் தொழில்களும் முறையே பிரமன், விஷ்ணு உருத்திரன், மகேசுவரர், சதாசிவர் ஆகியோரின் தனித் தொழில் களாகும். நடராஜப் பெருமான் திருக்கரத்தில் உள்ள உடுக்கை உலகின் தோற்றத்தையும், அபயமளிக்கும் திருக் கரம் காத்தலையும், பிறிதொரு கரத்தில் உள்ள நெருப்பு அழித்தலையும், முயலகன் என்னும் பூதத்தின் மீது அமர்ந்த கால் மறைத்தலையும், தூக்கிய கால் முக்தியை யும் — அருள் புரிதலையும் — நிகழ்த்துகின்றன. தூக்கிய காலைச் சுட்டிக் காண்பிக்கும் இடது திருக்கரம் நோக்கத் தக்கது.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம் பூதங்களிலும் ஆடியருளும் அம்பலவாணரைத் திருமூல நாயனார்,

"காளியோ டாடிக் கனகாசலத் தாடிக்
கூளியோ டாடிக் குவலயத்தே யாடி
நீடியநீர் தீகால் நீள்வானிடை யாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே."

எனப் பாடியுள்ளார்.

சிவன் அழித்தல் தொழிற் கடவுள்; சுடலையை விரும்பு பவர். சிவன் எதை அழிக்கின்றார்? விண்ணுலகையும் மண்ணுலகையும் யுகத்தின் முடிவிலே அழிக்கவில்லை; ஒவ்

வோர் உயிரின் உள்ளத்தையும் மறைத்து நிற்கும் பாசத்தை அழிக்கின்றார். இவர் நடனமாடும் இடம், நம் உடலைத் தீக்கிடும் சுடுகாடன்று; பாசத்தைப் பொசுக்கிய பக்தரின் உள்ளக்காடே. உயிர்களின் உள்ளக்கிடக்கையிலே உள்ள அகந்தையை, மடமையைப் போக்குவித்தலே இவர் செய்யும் எரித்தல் தொழிலாகும் — இதுவே சுடுகாடாகும் எனவேதான் சிவபிரானைச் 'சுடலையார்' எனக் கூறினார், இதையே 'உண்மை விளக்கம்' என்னும் நூல்,

"மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள் நானெடுத்து – நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத்தானமுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்."

எனக் கூறுகின்றது.

சிவபிரானின் திருநடனத்தை மற்றொரு வகையில் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தைக் குறிப்பதாகவுங் கூறுவர்.

"திருவடி நகரத்தையும், உதரம் மகரத்தையும், வளர் தோள் சிகரத்தையும், முகம் 'வா' வையும், முடி 'ய' வையும் குறிக்கும்" என்கிறது உண்மை விளக்கம். இதனைக் கொண்டு, ஐந்தெழுத்தே ஆண்டவனின் வடிவம் எனவுங் கூறுவர்.

நடராஜப் பெருமான் திருவுருவைச் சுற்றி வளைந்து நிற்கும் திருவாசியை, ஓங்காரமாகவும் கூறுவர். இதனை விளக்குவது,

"ஓங்கார மேநல் திருவாசி யுற்றதனின்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
அற்றால் அறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்."

என்னும் உண்மை விளக்கப் பாடல்.

இதையே 'திருவருட்பயன்' என்னும் நூல் மிகவும் தெளிவாகக் கூறுகின்றது.

சித்சபையில் விளங்கும் நடராஜப் பொருமானின் திருவுருவம், விஞ்ஞானம், சமயம், கலை ஆகிய அனைத்தையும் ஒன்றாக்கி விளக்கும் ஓர் உண்மை ஒளியாகும். சோழப் பேரரசன் ராஜராஜன் காலத்தில்தான் இத்திருவுருவம் முதன்முதலில் தோற்றுவிக்கப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. அதன் பின்னரே அனைத்துச் சிவாலயங்களிலும் இத்திருவுருவம் அமையலாயிற்று.

9. தீர்த்தங்கள் பத்து

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றன் பெருமையுடைய இத்தில்லைத்தலத்தில், விசேடமான தீர்த்தங்கள் பத்து அமைந்து விளங்குகின்றன. அவை; சிவகங்கை, பரமானந்தகூபம், வியாக்ரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் ஆகியவையாகும். இத் தீர்த்தங்களுள் முதன்மை விசேடம் பெற்றுச் சிறந்து விளங்கும் தீர்த்தம் சிவகங்கைத் தீர்த்தமாகும்.

சிவகங்கை

இஃது அன்னை சிவகாமசுந்தரியார் எழுந்தருளித் திகழும் திருக்கோயிலுக்கு எதிரில் அழகும், தூய்மையும் அருட்சிறப்பும் மிக்கதாக அமைந்து விளங்கும் திருக்குளம் இது சிவவடிவம் உடையது.

இத்தீர்த்தத்தில் வருடப்பிறப்பு, மார்கழித் திருவாதிரை, மாசிமகம், சிவராத்திரி ஆகிய விசேட நாள்களில் நீராடுவது பெரும் புண்ணியமாகும்.

பரமானந்த கூபம்

இத்தீர்த்தம் சிற்றம்பலத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இது சக்தி வடிவம் பொருந்தியது.

வியாக்ரபாத தீர்த்தம்

நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு மேற்கே அமைந்து விளங்குவது இளமையாக்கினார் கோயில். இக் கோயிலுக்கு எதிரில் அமைந்து விளங்கும் திருக்குளமே வியாக்கிரபாத தீர்த்தம்.

அனந்த தீர்த்தம்

இத்தீர்த்தம், நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு மேற்கே உள்ள திரு அனந்தேச்சுரத்துக்கு முன்பு அமைந்துள்ள திருக்குளம்.

நாகச்சேரி

நாகச்சேரி என்னும் இத்தீர்த்தம், திரு அனந்தேச்சுரத்துக்கு மேற்பால் இருக்கும் திருக்குளமாகும்.

பிரம தீர்த்தம்

நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு வடமேற்கே உள்ளது திருக்களாஞ்சேரி. திருக்களாஞ்சேரி என்பது ஓர் ஊரின் பெயர். இங்குள்ள திருக்குளமே பிரமதீர்த்தம்.

சிவப்பிரியை

நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு வடக்கேயுள்ளது பிரமசாமுண்டி கோயில். இக்கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளம் சிவப்பிரியை என்னும் தீர்த்தமாகும்.

புலிமடு

இத் தீர்த்தம் சிதம்பரத்திற்குத் தெற்கே ஒன்றரை மைல் (2.4 கி. மீ) தூரத்தில் அமைந்துள்ளது.

குய்ய தீர்த்தம்

சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள கிள்ளை என்னும் ஊருக்கு அருகில், கடற்கரையில் பாசமறுத்தான் துறையை உடையது.

திருப்பாற் கடல்

இத் தீர்த்தம், சிவப்பிரியை என்னும் தீர்த்தத்திற்கும் நடராஜர் கோயிலுக்கும் இடையில் உள்ளது. இத்தீர்த்தம் வியாக்கிரபாத முனிவரின் மைந்தரான உபமன்யு குழந்தையாக இருந்த பொழுது பாலுக்காக அழ, கருணைக் கடலாகிய திருமூலநாதர் பாற்கடலை உண்டாக்கினார். இப்பாலைப் பருகி வளர்ந்த குழந்தையாகிய உபமன்யு பின்னர் வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றுணர்ந்த நிலையில், கிருஷ்ண பகவான் இவரிடம் வந்து சிவதீட்சை பெற்றார்.

10. தலபுராண வரலாறு

சித்சபையில் நடராஜப் பெருமான் புலித்தோல் உடுத்தி, உடுக்கை, அனல், மான், மழு தாங்கி, அரவுமாலை அணிந்து இடக்காலைத் தூக்கி, வலக்காலை முயலகன்மீது ஊன்றி நின்று திருநடம் புரிந்தருள்கின்றார்.

யுக முடிவில் முனிவர்களுள் சிறந்தவரான வசிட்டமா முனிவர்க்கு உறவினராகிய மத்யந்தினர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். இவருக்கு, குமாரன் ஒருவன் பிறந்தான். மத்யந்தினர், தம் குமாரனுக்கு 'மாத்யந்தினர்' என்று பெயரிட்டு, நான்கு வேதங்களையும் ஆறு சாத்திரங்களையும் கற்றுக் கொடுத்து, "நீ ஆன்மஞானம் பெற்று அழிவில்லாத பரமபதத்தை அடைவாய்" என்று வாழ்த்தினார்.

அப்பொழுது மாத்யந்தினர், ஆன்மஞானம் அடைவதற்குரிய வழியைக் கூறியருளுமாறு தம் தந்தையிடம் கேட்டு வணங்கி நின்றார்.

அதற்கு மத்யந்தினர், "தில்லைவனம் என்றொரு காடு உண்டு. அங்குச் சுவயம்புவான சிவலிங்கம் ஒன்று இருக்கின்றது. அதைப்பூசித்தால் உன் விருப்பம் நிறைவேறும்' என்று கூறினார்.

மாத்யந்தினரும் அவ்வாறே தில்லைவனம் சென்று தவம் செய்து கொண்டு சிவலிங்கபூசை செய்து ஆன்மஞானத்தை அடைய விரும்பி, தம் தந்தையாரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

அவ்வாறு புறப்பட்ட மாத்யந்தினர், பல காடுகளையும், பல நாடுகளையும் கடந்து, தில்லைவனம் எங்கே உள்ளது எனக்கேட்டவாறு வந்து, தில்லைவனத்தை அடைந்தார். வனத்தில் எல்லா இடங்களிலும் சுற்றித் தேடிப்

பார்த்தார்; இறுதியில் ஒரு தில்லை மரத்தின்கீழ்ப் பரஞ்ஜோதியாய் விளங்கும் திருமூலநாதரைக் கண்டார்; 'இவரே நம் தந்தையாரால் சொல்லப்பட்ட எல்லாம் வல்ல சிவலிங்கமூர்த்தி' என முடிவு செய்தார்; அதற்கு அருகில் இருந்த சிவகங்கை என்னும் திருக்குளத்தில் நீராடி அனுட்டானம் முதலியவற்றை முடித்துக் கொண்டு, பெருமானின் சந்நிதியில் வந்து பஞ்சாங்க, அட்டாங்க வணக்கம் செய்து, தாம் இருப்பதற்கும் பெருமான்மீது வெய்யில் மழை முதலியவை விழாமல் இருப்பதற்கும் பர்ணசாலையும் பந்தரும் அமைத்தார்; அவ்விடத்தில் தங்கி அன்றாடம் பெருமானை அன்புடன் பூசித்து வந்தார்.

அவ்வாறு பூசித்து வந்த மாத்யந்தினர், நாள்தோறும் தமது பூசைக்கு வேண்டிய மலர், பழவகை முதலியவற்றையும், தமக்கு உணவுக்கு வேண்டியவற்றையும் தாமே தேடிக் கொண்டுவர வேண்டியவராக இருந்தார். அவர் அவ்வாறு மலர்களை நாள்தோறும் பொழுது விடிவதற்கு முன்னால் எடுப்பதற்கு இருட்டானபடியால், மலர்கள் தெரியாவாயினும், பொழுது விடிந்த பிறகு எடுத்தால் தம் பூசை, தவம் முதலியவற்றிற்கு நேரமாகிறபடியாலும் மலர்களில் உள்ள தேனை வண்டுகள் எடுப்பதால் அம் மலர்கள் பூசைக்கு ஏற்றவையல்ல என்பதாலும், ஒவ்வொரு நாளும் மிகவும் மனம்வருந்திக் கொண்டே மலரெடுத்துப் பூசை செய்து கொண்டு வந்தார்.

அந்நிலையில் ஒருநாள், பனியின் மிகுதியினால் விடியு முன் மரங்களிலும் செடிகளிலும் மலர் எடுக்க முடியாமல் போயிற்று. பொழுது விடிந்த பிறகு எடுக்கும் பொழுது எல்லா மலர்களும் வண்டுகளால் கடிக்கப்பட்டிருந்தன. பூசைக்கு வேறு மலர் கிடைக்கவில்லை. அதனால் மாத்யந்

தினர் மிகவும் மனம் வருந்தி நிலத்தில் விழுந்து அழுது புரண்டார்,

அவ்வாறு மிகவும் வருந்தியழுத மாத்யந்தினரை கருணைக் கடலாகிய சிவபிரான் கண்டு, அசரீரியாக, ''குழந்தாய்! ஏன் வருத்தப்படுகின்றாய்?'' என்று கேட்டார்.

அதைக் கேட்ட மாத்யந்தினர் உடனே தமது துயரத்தை அடக்கிக் கொண்டு ஆனந்தத்துடன், ''சுவாமி! தங்கள் பூசைக்காகப் பொழுது விடியுமுன் மலர்களைப் பறிக்க இருட்டில் மலர்கள் தெரியவில்லை. பொழுது விடிந்த பின்னர் மலர்களைப் பறிக்கலாம் என்றால், மலர் களில் உள்ள தேனை வண்டுகள் எடுத்து விடுகின்றன; மலர் களையும் பழுதாக்கி விடுகின்றன. அதனால் பூசைக்கு நல்ல மலர்கள் எடுக்க முடியவில்லை,'' என்று கூறினார்.

அடியார்களுக்கு அருள்புரியும் பெருமான் உடனே ''குழந்தாய், மரங்களில் ஏறுவதற்கு வசதியாக, வழுக் காமல் இருக்க புலியினுடைய கை கால்கள் போன்ற உறுப்புகளும், இருளிலும் நன்றாகத் தெரியும்படியான கண் பார்வையும் உனக்குக் கொடுத்தோம்,'' என்று கூறி யருளினார்.

இவ்வாறு கொடுத்துக் கூறியருளிய பெருமான் உடனே மேலும் தொடர்ந்து, ''புலிக்கால், புலிக்கைகளைப் போன்ற உறுப்புகளைக் கொண்டதால் உன்னுடைய பெயரும் 'வியாக்கிரபாதன்' என்றும், இந்த வனத்துக்குப் 'புலியூர்', 'வியாக்கிரபுரம்' என்றும் பெயர் உண்டாகக்கடவது'' என்று கூறி அருள் புரிந்தார்.

பெருமான் அருளால் மாத்யந்தினர் உடனே புலியி னுடைய கைகால்கள் போன்ற உறுப்புகளைப் பெற்றார்;

கூர்மையான ஒளிமிகுந்த கண்பார்வையைப் பெற்றார்; பெருமகிழ்வு கொண்டு திருமூலநாதர் திருவடியில் விழுந்து வணங்கினார்; முன்னிலும் மிகுந்த பக்தியுணர்ச்சியுடன் பூசை செய்து வந்தார்.

உபமன்யு பிறப்பு

மாத்யந்தினர் அவ்வாறு பூசித்துவந்த நிலையில், திருமணத்திற்கு உரிய வயதை அடைந்தார். அதனால் அவருடைய தந்தையாரான மத்யந்தினர், தம்மைந்தனைப் பார்க்கத் தில்லைவனத்துக்கு வந்தார்; அப்பொழுது மைந்தன் புலிக்கால் புலிக்கைகளுடன் இருக்கக் கண்டு வியப்படைந்தார்; புலிக்கால் வந்த காரணத்தையும், பெருமானின் கருணையையும் கேட்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டார்; தம் மைந்தனை நோக்கி, ''மைந்தனே! உனக்குத் திருமணம் செய்வதற்குரிய பருவம் வந்து விட்ட தாலும், நீ காட்டில் தனியே இருந்து சமையல் முதலிய வற்றை நீயே செய்து கொண்டிருப்பது மிகவும் கடின மாதலாலும், உனக்கு ஒரு நல்ல பெண்ணை மணம் செய்து வைக்கக் கருதி வந்தேன்,'' என்று கூறினார்.

அதைக்கேட்ட மைந்தர் மாத்யந்தினர் என்னும் வியாக்கிரபாதர், தந்தையாரின் வார்த்தையை வேத வாக்காகக் கருதி மதித்து நடக்கும் இயல்புடையவர் ஆகையால், தந்தையாரின் கருத்துக்கு இணங்கினார்.

தந்தையார் மத்யந்தினர் வசிட்டரின் சகோதரியைத் தம் மைந்தர்க்கு மணம் செய்து வைத்து, தில்லைவனம் என்னும் வியாக்கிரபுரத்திலேயே அவர்கள் இருவரையும் இருக்கச் செய்தார்.

வியாக்கிர பாதர், தம் தர்மபத்தினியோடு இல் வாழ்க்கை நடத்திக்கொண்டு, திருமூலநாதரை மிகவும் சிறப்பாகப் பூசை செய்து வாழ்ந்து வந்தார்.

அவ்வாறு வாழ்ந்து வருங்கால் நாளடைவில் வியாக்கிர பாதருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதனை அறிந்து வசிட்டர் முதலிய முனிவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். அக்குழந்தைக்கு 'உபமன்யு' என்னும் பெயரிட்டனர். அதன் பின்னர் வசிட்டரும், அருந்ததியும் ''குழந்தைக்குப் பால் முதலியவையும், மற்ற வசதிகளும் போதுமான அளவில் கிடைக்க, இவ்வனத்தில் தனிமையாக வாழும் உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும், ஆகையால் குழந்தையையும் தாயையும் சில நாள்களுக்கு எங்கள் ஆசிரமத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று, பின்னர் திருப்பிக்கொண்டு வந்து விடுகின்றோம்,'' என்று கூறினர்

மத்யந்தினரும், வியாக்கிரபாதரும் அதற்கு இணங்கவே அவர்கள் குழந்தையையும் தாயையும் அழைத்துக் கொண்டு சென்றனர். வசிட்டர் ஆசிரமத்தில் காமதேனுவின் சுவை மிக்க பால் கிடைத்தது. குழந்தை உபமன்யு அப்பாலைப் பருகி, மிகவும் மகிழ்ச்சியாக வளர்ந்து வந்தான்,

வியாக்கிரபுரத்தில் தனியே இருந்த வியாக்கிர பாதர் உபமன்யு நினைவாகவே இருந்தார், அவரால் குழந்தையை விட்டுத் தொடர்ந்து பிரிந்திருக்க முடியவில்லை. அதனால் அவர், வசிட்டருடைய ஆசிரமத்தில் மகிழ்ச்சியாக இருந்து கொண்டிருந்த தாயையும், குழந்தையையும் வியாக்கிர புரத்திற்கு வருமாறு செய்தார்.

பாற்கடல் உண்டாக்கியது

உபமன்யுவும், அவன் தாயும் வியாக்கிரபுரம் வந்து சேர்ந்தனர். வியாக்கிரபாதருக்குத் திருமூலநாதரை விட வேறு காமதேனுவோ, மற்ற செல்வங்களோ இல்லை. ஆகையால், காமதேனுவின் சுவையான பாலைக் குடித்து

வந்த உபமன்யு, இங்குப் பால் கிடைக்காததாலும், இங்குக் கிடைத்த கஞ்சியைக் குடிக்க விருப்பம் இல்லாததாலும் அழுதான்.

அவ்வாறு அழுத குழந்தை உபமன்யுவை எவ்வளவு சமாதானப்படுத்தியும், உபமன்யு அடங்காமல் அழவே, வியாக்கிரபாதர் தம் தலைவராகிய திருமூலநாதர் சந்நிதிக்குக் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்று, குழந்தையை நோக்கி, ''எனக்குக் காமதேனுவோ, மற்ற செல்வங்களோ எல்லாம் இப்பெருமான்தான்'' என்று சொல்லி, குழந்தையை அச்சந்நிதியிலேயே கிடத்தி விட்டார்,

அப்பொழுது குழந்தை உபமன்யு, மேலும் அதிகமாக அழுதான்.

அப்பொழுது கருணைக் கடலாகிய திருமூலநாதர். குழந்தையின் இளந்தொண்டை மிகவும் வறண்டு போனதைக் கண்டு, குழந்தையின்மீது இரக்கம் கொண்டு, பாலுக்காக அழுத குழந்தைக்குப் பாற்கடலையே வரவழைத்து விட்டார்.

பாற்கடலை வரவழைத்த பெருமான், வியாக்கிரபாதரை அழைத்து, ''பாலுக்காக அழுகின்ற இப்பாலகனுக்காகப் பாற்கடலை வரவழைத்திருக்கின்றோம். இதைப் பருகவைத்துக் குழந்தையை மகிழ்ச்சியாக வைத்திருப்பாயாக,'' என்று கூறியருளினார்.

வியாக்கிரபாதரும் பாற்கடலைக் கண்டு பெருமகிழ்வு கொண்டு, குழந்தை உபமன்யுவையும் பால் பருகச் செய்து, பெருமானின் கருணைத் திருவிளையாடலை நினைத்துப் பேருவகை கொண்டு, மனநிறைவுடன் முன்னிலும் பேரன்பு கொண்டு பெருமானைப் பூசித்து வந்தார்.

கிருஷ்ணபகவான் சிவதீட்சை

குழந்தை உபமன்யு அப்பாலைக் குடித்து நன்கு வளர்ச்சியுற்று, நான்கு வேதங்களையும் ஆறு சாத்திரங்களையும், மற்றுமுள்ளவற்றையும் கற்றுணர்ந்து தேர்ந்தான். அப்பொழுது கிருஷ்ணபகவான் உபமன்யுவிடம் சிவதீட்சை பெற்றுச் சென்றார்.

பதஞ்சலி வரலாறு

மகாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேடன் ஒருநாள் மகாவிஷ்ணுவின் பாரம் தாங்கமுடியாமல் மிகவும் துன்பப்பட்டு அவரை வணங்கி, ''சுவாமி, நான் தங்களை எப்பொழுதும் படுக்கையாக இருந்து தாங்கி வருகிறேன். அவ்வாறு இருக்க இன்று மட்டும் தங்களைத் தாங்க முடியாமல் மிகவும் பாரமாக இருக்கின்றது. இதற்கு என்ன காரணமோ?'' என்று அச்சத்துடன் கேட்க, அதற்கு மகாவிஷ்ணு மிகவும் மகிழ்வுடன் பதில் சொல்லத் தொடங்கினார்; ''நான் முன்பு ஒரு சமயம் ஆதிநடனனான சிவனின் ஆனந்த நடனத்தைக் கண்டேன். அதை இன்று நினைத்துக் கொண்ட பொழுது, அதன் மகிழ்ச்சியினால் என்னுடைய உடல் மிகவும் பாரமாக இருந்திருக்கும்'' என்று கூறினார்.

அதற்கு ஆதிசேடன், ''அந்த நடனம் எப்பொழுது எங்கே நடந்தது?'' என்று கேட்டான்.

மகாவிஷ்ணு கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய ''முன்னொரு காலத்தில், தாருகாவனம் என்ற ஒரு வனத்தில் மிகவும் தவவலிமை உடையவர்களான முனிவர்கள் இருந்தார்கள். அவர்கள் நான்கு வேதங்கள், ஆறு சாத்திரங்கள் முதலியவற்றைக் கற்றுணர்ந்ததோடன்றி, அவற்றின்படியே தங்கள் காரியங்களைத் தவறாமல்

செய்து வந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லாவற்றிற்கும் காரணமான ஈசுவரன் ஒருவர் இருக்கின்றார் என்ற நினைவே இல்லாமல் ஈசுவரத் தியானம் இல்லாமல் இருந்தார்கள்.

கருணைக் கடலாகிய ஈசுவரர், அம் முனிவர்களை உய்விக்கும் பொருட்டும், அவர்கட்கு ஈசுவரத் தியானம் உண்டாவதன் பொருட்டும் திருவுள்ளம் கொண்டு என்னை (மகா விஷ்ணுவை) நினைத்தார். நினைத்த அளவில் நான் அவர்முன் தோன்றினேன். நானும் அவரும் தாருகா வனத்திலுள்ள முனிவர்களை நல்வழிப்படுத்தத் திருவுள்ளங் கொண்டோம்.

ஈசுவரர் என்னை நோக்கி, 'நீ உலகங்களையெல்லாம் மயக்கும்படியான மோகினி (பெண்) வேடம் கொண்டு, தாருகாவனத்தில் உள்ளமுனிவர்கள் இருக்கும் இடங்களில் சென்று அவர்களை மயக்குக' என்று சொல்லிவிட்டு, தான் நந்திகேசுவரர் மீதேறித் தாருகாவனம் சென்று, நந்திகேசுவரரை ஓர் இடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு, தான் எல்லா உலகங்களும் கண்டு களிக்கும்படியான ஒரு பிட்சாடன வேடம் கொண்டு, அம்முனிவர்கள் இருக்கும் பர்ணசாலைகளுக்கு அருகில் சென்று பிட்சை கேட்டுக் கொண்டு இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தார்.

நான் அப்பெருமான் சொல்லியபடியே மோகினி வேடங் கொண்டு, அம்முனிவர்கள் தவம், ஹோமம், முதலியவை செய்து கொண்டிருக்கும் இடங்களில் காம விகாரத்துடன் சுற்றி வந்தேன். அங்குள்ள இளம் வயதுள்ள முனிவர்கள் மாயையின் அம்சமான மோகினியின் காம ரூபத்தைக் கண்டு, தங்கள் தவம் முதலியவற்றை விட்டு விட்டு ஒவ்வொருவரும் தாம் தாமே மோகினியை அடைய வேண்டும் என்று கருதி என்னைப் பின் தொடர்ந்தார்கள்.

நானும் அவர்களுக்குக் கிட்டுவது போல் நடித்துக் கொண்டு, அந்த வனம் முழுவதும் சுற்றிச்சுற்றி வந்தேன். அவ்விளம் முனிவர்கள் மது அருந்தியவர்கள் போல் என்னோடு சுற்றிச்சுற்றி வந்தார்கள். இவ்வாறு ஒருபுற மிருக்க, மற்றொரு புறம் பிட்சாடனர் வேடம் கொண்ட அப்பெருமானைக் கண்ட முனிபத்தினிகள் அவருடைய உருவைக் கண்டு மோகித்து, தாம்தாமே அவரையடைய விரும்பி, தேனை உண்பதற்கு மொய்க்கும் வண்டுகளைப் போல் அவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

அப்பெருமானும் ஒவ்வொரு முனிபத்தினியிடமும் ஆசை உள்ளவர்போல் நடித்துக் கொண்டு, அவ்வனம் முழுவதும் சுற்றி வந்தார். அம்முனி பத்தினிகளும் சுற்றி வந்தார்கள்.

அவற்றைத் தூரத்தில் நின்று கவனித்துக் கொண் டிருந்த நந்திகேசுவரர், ஈசுவரரின் திருவிளையாடலை நினைத்து வியப்படைந்து கொண்டிருந்தார்.

அவ்வாறிருக்க, அங்குள்ள வயது முதிர்ந்தவர்களும், என்னைப் பின்தொடராதவர்களுமாகிய முனிவர்கள், ஒரு பக்கத்தில் பிட்சாடனருடன் தங்கள் பத்தினிகள் சுற்று வதையும், மற்றொரு பக்கத்தில் என் (மோகினியின்) பின் தங்களுடைய இளம் முனிவர்கள் சுற்றுவதையும் கண்டு, மிகவும் கோபமும் வெட்கமும் அடைந்து, இவ்வாறு நாம் தவம் செய்கின்ற இடத்தில் கொடியவளாகவும் கொடிய வனாகவும் வந்து, நம்முடைய இளம் முனிவர்களையும், பெண்களையும் காமவிகாரத்தில் ஈடுபடும்படி செய்த இவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கோபங் கொண்டனர்; தங்களுக்கு முக்கிய ஆயுதமான அக்கினியில், அதர்வண வேதத்தில் சொல்லியிருக்கின்ற, எதிரியைக் கொல்லக் கூடிய ஹோமத்தைச் செய்தார்கள்

அவ்வாறு செய்த அக்கினியிலிருந்து பயங்கரமான ஒரு புலி உண்டானது. விடபுருடன் வேடம் கொண்ட அப்பெருமானைக் கொல்லும்படி அம்முனிவர்கள் அப்புலியை ஏவினார்கள்.

அந்தப்புலி, தீப்போன்ற கண்களையும், கத்திபோன்ற பல் நகங்களையும் கொண்டு, மிகவும் பயங்கரமாகப் பெருமானைக் குறித்துப் பாய்ந்து வந்தது. அவ்வாறு வந்த புலியைப் பெருமான் தம்முடைய நகங்களால் இரண்டாகப் பிளந்து அதன் தோலைத் தமக்கு ஆடையாக்கிக் கொண்டார்.

அதைக் கண்ட அம்முனிவர்கள், மீண்டும் அக்கினியில் ஹோமம் செய்ய, அவ்வக்கினியிலிருந்து மிகவும் நஞ்சுடைய பாம்புகள் உண்டாயின. அம்முனிவர்கள் அப்பாம்புகளைப் பெருமான்மீது ஏவ, பெருமான் அவற்றைத் தமக்கு அணிகலன்களாக அணிந்து கொண்டார்.

அதையுங் கண்ட அம் முனிவர்கள் கடுங்கோபங் கொண்டு மீண்டும் விசேடமாக ஹோமம் செய்ய, அவ்வக்கினியிலிருந்து மிகவும் பயங்கரமானதும், வலிமை மிக்கதுமான அபஸ்மாரம் என்னும் பெரும்பூதம் உண்டாயிற்று. அம்முனிவர்கள், பெருமானைக் கொல்லும்படி கூறி அப்பூதத்தை ஏவினார்கள்

அப்பெரும் பூதம், அக்கினிசுவாலை போலக் கண்கள் சிவக்க, வீராவேசத்தோடு பயங்கரமாக ஆரவாரம் செய்து கொண்டு, பெருமானைக் குறித்துப் பாய்ந்து வந்தது. அவ்வாறு வந்த அப்பூதத்தைச் சர்வ வல்லமை பொருந்திய பெருமான் தம் வலக்காலுக்கு அடியில் போட்டு, அதன் முதுகில் நின்று கொண்டார்.

அதைக் கண்ட அம்முனிவர்கள், தங்களால் ஏவப்பட்ட புலி, பாம்புகள், பூதம் முதலியவற்றை ஆடையாகவும், அணிகலனாகவும், ஆசனமாகவும் பெருமான் செய்து கொண்டதைப் பார்த்துப் பெருங்கோபங் கொண்டார்கள்; தங்களால் நெடுங்காலமாகப் பூசிக்கப்பட்டு, அதனால் மிகவும் சிறப்புப் பொருந்திய அக்கினியையே பெருமானை எரிக்கும்படி ஏவினார்கள்.

அந்த அக்கினியும் இரு முகங்களுடன், சுவாலையுடனும் பெருமானிடம் வந்தது. அந்த அக்கினிக்கும் அதன் சக்தியைக் கொடுப்பவராகிய பெருமான் தமது இடக் கையில் அந்த அக்கினியை ஏந்திக்கொண்டார்.

அதைக்கண்ட அம்முனிவர்கள், தங்களுக்கு முக்கிய சொத்துப் போன்று இருந்ததும், தங்களுக்குப் புலி, பாம்புகள், பூதம் முதலியவற்றைக் கொடுத்ததுமாகிய அக்கினியையும் இழந்துவிட்டதால், அதன் பின்னர் தங்களிடமுள்ள முக்கியமான வேத மந்திரங்களையே பெருமான்மீது ஏவினார்கள்.

வேதங்களுக்கெல்லாம் இருப்பிடமாகவும், வேதங் களால் புகழப்பட்டவருமான பெருமான், அம்மந்திரங் களைத் தம்முடைய பாதத்தில் சிலம்புகளாக அணிந்து கொண்டார்.

இவ்வாறு தங்களால் நெடுங்காலமாகச் செய்துவரப் பட்ட தவம், அக்கினி, மந்திரம் முதலியவற்றாலும் எதிரியான பெருமானை வெல்ல முடியாமற்போகவே, அப்பெருமானை (ஈசுவரனைப்) பெரும் சக்திவாய்ந்த வராகவும், அதனால் தாங்கள் அவரிடம் தோற்றுவிட்ட தாகவும் நினைத்து மிகவும் வருந்தினார்கள்.

அப்பொழுது கருணாமூர்த்தியாயும், அம்முனிவர்களின் அனைத்துக் காரியங்களுக்கும் பலனைக் கொடுப்பவராயுமுள்ள பெருமான், அவர்களுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்துத் தம்முடைய சடைகள் எட்டுத்திக்கிலும் விரிந்தாட, அண்டங்களெல்லாம் குலுங்கத் தாண்டவம் செய்தார்.

அத்தாண்டவத்தைக் கண்ட முனிவர்கள் மிகவும் அஞ்சி, நம்மால் இவரிடம் ஒன்றும் செய்யவியலாது என்றும், இவரே ஈசுவரன் என்றும் அறிந்தார்கள்; தாங்கள் செய்த குற்றங்களைப் பொறுத்தருளும்படி வேண்டினார்கள்.

அம்முனிவர்களின் அகந்தையைப் போக்குவதற்கு வந்தவராகிய பெருமான் (ஈசுவரர்), அவர்களை மன்னிப்பதற்காகவும், அவர்களுக்கு ஆனந்தம் உண்டாகச் செய்வதற்காகவும், தம்முடைய தாண்டவத்தை ஆனந்தமாகச் செய்து, அவர்களுக்கும் ஆனந்தம் உண்டாகச் செய்தார்.

அதைக் கண்ட நானும் (மகாவிஷ்ணு), நந்திகேசுவரரும் ஆனந்தமடைந்து, பெருமானுடைய பெருந்திறத்தை வியந்து கொண்டிருந்தோம்.

இவ்வாறு பெருமான் பிட்சாடன வேடமும், நான் மோகினி வேடமும் எடுத்த காலத்தில்தான் சாஸ்தா (ஐயனார்-ஐயப்பன்) உண்டானார்.

அம்முனிவர்கள், பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைப் பார்த்து, அஞ்ஞானம் நீங்கி மெய்ஞானம் உண்டாகி, பெருமானைப் பார்த்து, 'நாங்கள் மோட்சம் அடைய வழி வேண்டும்' என்று வேண்ட, பெருமானும் 'நீங்கள் சிவலிங்கம் தாபித்து, சிவபூசை செய்துவர, பிரம

ஞானம் உண்டாகி மோட்சம் அடைவீர்கள்,' என்று கூறியருளினார்; என்னையும் என் இருக்கைக்குச் செல்ல அனுமதி கொடுத்து, நந்திகேசுவரர் மீதேறித் திருக்கயிலை அடைந்தார்.

இவ்வாறு நிகழ்ந்த ஈசுவரரின் ஆனந்த நடனத்தை இப்பொழுது நினைத்துக் கொண்டதன் காரணமாக, ''மகிழ்ச்சிப் பெருக்கினால் என் உடல் உனக்குப் பாரமாக இருந்திருக்கும்'' என ஆதிசேடனுக்குச் சொல்லி முடித்தார்.

ஆதிசேடன் அதைக்கேட்டு, ''தங்கள் வேலைக் காரனான நானும் அந்த ஆனந்த நடனத்தைக் காண ஆசைப்படுகின்றேன், அதைக் காண்பதற்குரிய வழியை எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

அதற்கு மகாவிஷ்ணு, ''நீ கயிலைசென்று, பெரு மானைக் குறித்துத் தவம் செய். பெருமான் உனக்கு அருள்கூர்ந்து, அந்த நடனத்தைக் காண்பிப்பார்'' என்று கூறினார்.

ஆதிசேடனும் உடனே மகாவிஷ்ணுவிடம் வணங்கி விடை பெற்றுக் கொண்டு, திருக்கயிலைக்குச் சென்று, பெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தார்

அப்பொழுது ஈசுவரரும் ஆதிசேடனின் தவத்துக்கு மனமிரங்கி, ஆதிசேடனின் முன்தோன்றி, ''நீ கடுந்தவம் புரிவதன் காரணம் யாது?'' என்று கேட்க, ஆதிசேடனும் ''தங்கள் ஆனந்தத் தாண்டவத் தரிசனத்தைக் காண விரும்புகின்றேன்,'' என்று கூறினார்.

அதைக்கேட்ட ஈசுவரர் மகிழ்ச்சியோடு, ''பூலோ கத்தில் வியாக்கிரபுரம் என்று ஒருவனம் இருக்கின்றது. அங்கு உன்னைப்போல் ஒரு பக்தன் வியாக்கிரபாதன்

என்பவன், புலிக்கால் புலிக்கைகளுடன் ,கூடினவனாய், என்னுடைய ஆனந்தத் தாண்டவத்தைக்காண, திருமூல நாதரைப் பூசித்து வருகின்றான். நீயும் அங்குச் சென்றிரு. தை மாதத்தில் குருவாரத்தில் பூசநட்சத்திரமும் பூரணையும் சேர்ந்தநாளில், நாம் அங்கு ஆனந்தத் தாண்டவம் காண்பிப்போம். ஆனால் நீ உன்னுடைய ஆயிரம் தலைகளோடும் இந்தப்பாம்பு உருவத்தோடும் செல்வாயானால் எல்லோரும் உன்னைக்கண்டு அஞ்சு வார்கள். ஆகையால், முன்னொரு காலத்தில் அத்திரி முனிவரும் அனுசூயையும் உன்னைப் பிள்ளையாகப் பெற வேண்டும் என்று மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் புரிய, அவரும் அவ்வாறே வரம் கொடுத்திருக்கின்றார். அவ்வாறே, நீ அவர்களுடைய கையிலிருந்த நீரில் சென்று குழந்தை யாவாயாக. அவர்கள் அஞ்சிக் கீழேபோட, அதனால் உனக்குப் 'பதஞ்சலி' என்னும் பெயர் உண்டாகும். அந்த மனித உருவத்தோடும், ஐந்து பாம்புத் தலையுள்ள உருவத்தோடும் சென்று வியாக்கிர பாதனுடன் இருப்பாயாக,'' என்று திருவாய் மலர்ந்து மறைந் தருளினார்.

தில்லைவனம் வருதல்

ஈசுவரர் கட்டளைப்படியே பதஞ்சலியும் பிலத்துவாரம் வழியாகப் பூலோகம் வந்து, வியாக்கிரபுரத்தையடைந் தார்; அங்குத் தேடி திருமூலநாதர் சந்நிதியையும், அதன் அருகில் உள்ள சிவகங்கை என்னும் தீர்த்தத்தையும், அதன் கரையில் தவம் செய்து கொண்டிருந்த வியாக்கிர பாதரையும் கண்டார்; இவரே பெருமான் கூறிய வியாக்கிர பாதர் என்று முடிவு செய்தார். அவர் அருகில் சென்று அவரது நிட்டை கலையும் வரை காத்திருந்தார்.

வியாக்கிரபாதர் நிட்டை கலைந்து கண்ணை விழித்த போது, தாம் வந்ததைப் பதஞ்சலி தெரிவித்தார்.

வியாக்கிரபாதரும் நெடுநாள்களாக அவரை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஆகையால், இருவரும் ஒரு வரை யொருவர் ஆனந்தத்தால் கட்டித் தழுவி, "நீரே பாக்கியசாலி, நீரே பாக்கியசாலி", என்று சொல்லிக் கொண்டனர்; இருவரும் கலந்து உரையாடினர்.

அதன்பின்னர் இருவரும் சிவகங்கையில் நீராடி, திருமூலநாதர் சந்நிதிக்குச் சென்று, பூமியில் விழுந்து வணங்கி, பெருமானைப் பூசித்து மகிழ்ந்தனர்; இருவரும் பெருமான் கூறிய நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தனர்.

ஆனந்த நடனம்

ஈசுவரர் கூறிய தைமாதமும், குருவாரமும், பூச நட்சத்திரமும் பூரணையும் கூடிய நாளும் வந்து சேர்ந்தது. அன்று சூரியோதயத்துக்கு முன் வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் எழுந்து நித்தியகடன்களை முடித்துவிட்டு, திருமூலநாதரையும் உமையம்மையையும் பூசித்து, சந்நிதி யில் விழுந்து வணங்கித் தோத்திரம் செய்து கொண்டு திருமூலநாதர் சந்நிதிக்குத் தெற்குப்பக்கத்தில் உள்ள சபை யில் ஈசுவரரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

பகல் 15 நாழிகை வருமுன், இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும் வந்து குழுமினார்கள்.

அந்நிலையில் உடனே ஒரு பேரொலி உண்டாயிற்று. அதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண் டிருந்த பொழுது, தேவதுந்துபிகளுடன் பானுகம்பன் முதலான தேவ வாத்தியக்காரர்கள் வந்தார்கள். அதன்

பின்னர் பிரமன், விஷ்ணு; இலட்சுமி முதலியோரும் வந்து சேர்ந்தார்கள்; திரிசகஸ்ர முனீசுவரர்கள் என்னும் தில்லை மூவாயிரவரும் வந்தார்கள்.

உடனே ஒரு பேரொளி போல் தோன்றியது. எல்லோரும் ஈசுவரர் வருகின்றார் என்று ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தபொழுது, இரண்டாவது பரமே சுவரரான நந்திகேசுவரர் கையில் பொற்பிரப்புடன் வந்து தோன்றினார். எல்லோரும் நந்திகேசுவரரைப் பார்த்து, இனி ஈசுவரர் விரைவில் வந்துவிடுவார் என்று எண்ணி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நந்திகேசுவரர், பிரமா மகாவிஷ்ணு இந்திரன் முதலியோரைக் கண்டு பேசிவிட்டு. பின்னர் பதஞ்சலி, உபமன்யு, வியாக்கிரபாதர் முதலியோரிடமும் பேசினார். பின்னர் அவரவரையும் தகுந்த இடத்தில் இருக்கச் செய்து விட்டு, வியாக்கிரபாதர் பதஞ்சலி உபமன்யு முதலியோரை அழைத்துப் பெருமான் நடனம் செய்யப்போகின்ற இடத் திற்கு அருகில் நிற்கவைத்தார்.

நேரமும் பதினைந்து நாழிகையாயிற்று.

ஈசுவரரின் வருகையை எல்லோரும் எதிர்பார்த்திருந் தார்கள். உடனே ஞானசபையில் அஞ்ஞானமாகிய திரையை எடுக்கவும், ஒளிவடிவமான வெளியில் கருணை வடிவமான பராசக்தியோடு ஆனந்த நடராஜமூர்த்தி காட்சி அளித்தார்.

எல்லோரும் தலைமீது கரங்குவித்துக் கொண்டு, கண் களில் ஆனந்தநீர் சொரிய, 'ஓம் சிவ சிவ' என்று தோத்தி ரம் செய்து கொண்டிருந்தார்கள்.

பெருமான் வலக்கையில் தமருகத்தை அடித்துக் கொண்டும், மற்ற கையில் அபயம் அளித்துக் கொண்டும்,

இடக்கையில் அக்கினியை வைத்துக் கொண்டும், மற்ற கையினால் தமது குஞ்சிதபாதத்தைக் காட்டிக்கொண்டும், வலக்காலை அபஸ்மாரன் என்னும் முயலகன் முதுகின்மேல் வைத்துக்கொண்டும், குஞ்சிதபாதம் என்னும் இடக் காலைத் தூக்கிக் கொண்டும், திருச்சடைகள் எட்டுத்திக்கி லும் விரிந்தாட, தேவதுந்துபிகள் ஒலிக்க, ஆனந்த நடனம் செய்தருளினார்.

பெருமானின் கால்களில் வேதம் என்னும் சிலம்புகள் ஒலிக்கவும், வீரகண்டாமணி முழங்கவும், இடையில் புலித் தோலையும், பாம்புகளைப் பூணூலாகவும் கைகளில் கங் கணமாகவும் அணிந்து கொண்டும், கண்டத்தில் நீலக்கல் போன்ற நஞ்சும், ஒருகாதில் குழையும், மற்ற காதில் குண்டலமும், முகத்தில் புன்சிரிப்பும், பவளவாயும், உலகங் களையெல்லாம் காக்கும் திருக்கண் நோக்கமும், திரிபுரங் களையும் மன்மதனையும் எரித்த நெற்றிக்கண்ணும், முடியில் கங்கையும் சந்திரனும் விளங்கவும், பிரமாவின் தலைகளை மாலையாகத் தரித்துக்கொண்டும், அனைத்து உயிர்களின் இருதயத்து இருப்பவராயும், அதனாலேயே எல்லாச் சமயங்களின் கடவுளராயும் உள்ள பெருமான், தம்முள் அனைத்துலகங்களும் விளங்கப் பரமானந்த நடனம் செய்தருளினார்.

அந்நடனக் காட்சியைக் கண்டு மகாவிஷ்ணு, பிரமன், இந்திரன் முதலான தேவர்கள், முனிவர்கள், தில்லை மூவாயிரவர்கள், வியாக்கிரபாதர், பதஞ்சலி, உபமன்யு முதலானவர்கள் ஆனந்தப் பெருக்கால் சித்திரத்தில் எழுதப்பட்டவர்கள் போல அசைவற்று நின்றும், பிறகு நினைவுவந்து ஆனந்தக் கூத்தாடியும், பலவிதமாகத் தோத்திரம் செய்து கொண்டிருந்தார்கள். இவ்வாறு எவ்வளவு காலம் இருந்தார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை.

இவ்வாறு இருக்கும் பொழுது, பெருமான் வியாக்கிர பாதரையும் பதஞ்சலியையும் பார்த்து, ''என்னுடைய ஆனந்தத் தாண்டவத்தைப் பார்த்ததால் நீங்கள் புனித மானீர்கள். நாமும் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருக் கின்றோம், உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங் கள்,'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும், ''நாங்கள் செய்யும் பூசையைத் தாங்களும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள் வதுடன், தாங்கள் இந்த ஞானசபையில் எக்காலமும் எல்லா உயிரினங்களும் கண்டு, அவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் பெற்று உய்ய வேண்டி ஆனந்த நடனம் செய்தருள வேண்டும்,'' என்று வ்ணங்கி வேண்டினார்கள்.

அதற்குக் கருணைவள்ளலாகிய நடராஜமூர்த்தியும், உலகம் உய்ய வேண்டிக் கேட்டுக் கொண்ட அவர்களின் விருப்பப்படி, ''அப்படியே ஆகுக'' என்றும், ''இங்கே எப் பொழுதும் தேவர்களெல்லோரும் சூழ நீங்களும் இருந்து தரிசித்துக் கொண்டிருக்கக் கடவீர்,'' என்றும் அருள் புரிந்தார்.

அவ்வாறே நடராஜமூர்த்தி எல்லாக்காலத்தும் அழி யாமல் இருந்து, அனைத்துயிர்களுக்கும் கருணையுடன் முக்தி கொடுத்தருள்கின்றார்.

இங்கு ஞானசபை, கனகசபையைச் சுற்றிலும் விநாயகர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, மகாலட்சுமி, பிரமா, தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் கொலுவிருக் கின்றனர். பிரமா சண்டிகேசுவரருடன் சேர்ந்திருக் கின்றார். இதற்குக் காரணம், பிரமாவிற்குத் தனியாகக் கோயில் இல்லை என்னும் சாபமே.

வியாக்கிரபாதரும், பதஞ்சலியும், தில்லை மூவாயிர வரும் பூசை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

11. தில்லை வாழந்தணர்கள்

வியாக்கிரபாதருக்கும், பதஞ்சலிக்கும் வியாக்கிர புரத்தில் ஞானசபையில் நடராஜமூர்த்தி ஆனந்தத் தாண்டவம் காட்டியருளியதுமுதல், அம்மூர்த்திக்குத் தில்லைமூவாயிரவரும் பூசை செய்து கொண்டிருந்தார்கள்.

அவ்வாறு இருக்கும் நாளில், வடக்கே அந்தர்வேதி என்னுமிடத்தில் பிரமதேவர் யாகம் செய்யக்கருதி, அதற் கான காரியங்களையும் செய்தார்: தேவர்கள் நேரில் வந்து அவிர்ப்பாகம் வாங்கவேண்டும் என்று நினைத்து, அவர் களை ஆவாகனம் செய்ய ஒருவரும் வரவில்லை. அதனால் பிரமா உடனே ஞான திருட்டியால் தேவர்களெல்லாம் சிதம்பரத்தில் இருப்பதையும், அந்த யாகத்தைச் சரிவரச் செய்து வைக்க வல்லவர்கள் தில்லை மூவாயிரவர்களே என்பதையும் அறிந்தார்; உடனே தம் குமாரரான நாரதரை அழைத்து, சிதம்பரத்திலிருக்கும் தேவர்களையும், யாகத்தைச் செய்ய வல்லவர்களாகிய தில்லை மூவாயிர வரையும் அழைத்துக் கொண்டு வரும்படி அனுப்பினார்.

நாரதர் சிதம்ப்ரம் வந்து, தில்லை மூவாயிரவர்களைக் கண்டு தம் தந்தையார் செய்யும் யாகத்துக்கு அழைத்து வரும்படி, தந்தையாரின் விருப்பத்தைத் தெரிவித்தார்.

அதற்குத் தேவர்கள், தீட்சதர்கள் இருசாராரும் ''நாங்கள் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்துக் கொண் டிருக்கின்றோம். இதை விட்டுவிட்டு வர மனம் இல்லை'' என்று கூறிவிட்டார்கள்.

நாரதரும், தம் தந்தையாரிடம் சென்று அதனை அவ்வாறே தெரிவித்தார்.

பிரமா உடனே, தாமே நேரில் சென்று அழைப்போம் என்று கருதி, புறப்பட்டுச் சிதம்பரம் வந்து சேர்ந்தார். நடராஜமூர்த்தியையும், சிவகாம சுந்தரியையும், திருமூல நாதரையும், உமையம்மையையும் தரிசித்துக்கொண்ட தன் பின்னர், வியாக்கிரபாதர், பதஞ்சலி, தில்லை மூவாயிரவர் என்னும் தீட்சதர்கள், தேவர்கள் ஆகிய எல்லோரையும் கண்டு, தாம் செய்யப் போகின்ற யாகத்துக்கு எல்லோரும் வரவேண்டும் என்று அழைத்தார்.

பிரமாவே நேரில் வந்து அழைத்ததால், இந்திரன் முதலான தேவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். ஆனால், தில்லை மூவாயிரவர்கள், ''நாங்கள் நடராஜரைப் பூசிப்பதை விட்டு வரமாட்டோம். தாங்கள் யாகம் செய்யும் இடம் வெகுதொலைவில் உள்ளது,'' என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட பிரமா, வியாக்கிரபாதர் பதஞ்சலி இருவரையும் பார்த்து, ''நான் செய்யும் யாகத்திற்குத் தீட்சதர்கள் எப்படியும் வரவேண்டும்,'' என்றுகூற, அவர்கள் இருவரும் தீட்சதர்களிடம் ''தாங்கள் எல்லோரும் வருகிற வரையில் நாங்கள் பெருமானைப் பூசித்துக் கொண்டிருக்கின்றோம்,'' என்று கூறினார்கள்.

அதன் பின்னர் தீட்சதர்களும் ஒருவாறு சம்மதித்து, பிரமாவுடன் அந்தர்வேதிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்

அந்தர்வேதியில் யாகம் செய்யத் தொடங்கிய தீட்சதர்கள், விதிப்படி செய்யத் தொடங்கிய யாகத்தில் முதல் நாளிலேயே நடராஜமூர்த்தியைத் தரிசிக்காததால் மிகவும் மனம் வருந்தினார்கள்.

அவ்வாறு மனம் வருந்திக்கொண்டே தீட்சதர்கள் யாகம் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்காக நடராஜர் அந்த யாகாக்கினியிலிருந்து ஒளிவடிவில் தோன்றினார்.

தீட்சதர்களும் அவரைக் கண்டு தரிசித்துக் கொண்டு யாகத்தைக் குறைவின்றிச் செய்து முடித்து விட்டு, நடராஜருடன் வியாக்கிரபுரம் வந்தடைந்தார்கள்.

அவ்வாறு வந்தடைந்த தில்லை மூவாயிரவரும் எல்லோரும் வந்துவிட்டார்களா என்று சரிபார்த்த பொழுது ஒருவர் எண்ணிக்கை குறைந்தது. அதனால் தீட்சதர்களும், வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் வருந்தினர்.

அப்பொழுது வானத்தில் ஓர் அசரீரி கேட்டது; ''குறையும் ஒருவர் நாமே! எம்மையும் சேர்த்து எண்ணிக் கொள்ளவும்,'' என்றது அவ்வசரீரி. அதனைக் கூறியருளியவர் நடராஜர். அதைக்கேட்டு அனைவரும் வியப்பும் மகிழ்வும் கொண்டனர்.

தில்லை வாழந்தணர்களுக்கு அந்தர்வேதி யாகத்திலிருந்து கிடைத்து, கொண்டு வரப்பட்ட நடராஜமூர்த்தியே இப்பொழுதும் இருக்கும் மாணிக்கமூர்த்தி என்றும், இரத்தின சபாபதி என்றும் சொல்லப்படுகின்ற ஜோதி நடராஜர்.

தர்ம சாத்திரத்தில் சிவனுக்கு வேதவிதிப்படிதான் பூசை செய்ய வேண்டும் என்றும், சிவபூசைக்குச் சம்பளம் வாங்கக்கூடாது என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி நடக்கும் கோயில் சிதம்பரம் நடராஜர் கோயில் ஒன்றே. இத்திருக்கோயிலில் வேதவிதிப்படியே பூசை நடந்துவருகின்றது.

தில்லைவாழந்தணர்களாகிய தீட்சதர்களுக்கே நடராஜர் கோயில் சொந்தமானது. ஆகையால், தீட்சதர்கள் முற்காலத்தில், அவரவர் பூசை முறையில் இரவு கதவு பூட்டும்பொழுது சுவர்ணகால பைரவருடைய திருவடியில்

செப்புத்தகட்டை வைத்து விட்டு, பிறகு காலையில் கதவைத் திறக்கும்பொழுது பைரவருடைய அருளால் அச் செப்புத்தகடு தங்கத் தகடாக இருக்கும். அதை எடுத்து அவரவர் தத்தமக்கு மறுபூசை முறை வரும்வரை தம் குடும்பச் செலவுக்கு வைத்துக் கொள்வார்கள். ஆகையால் தீட்சதர்கள் வேறு வருவாய்களில் ஆசை கொள்ளாமல் நடராஜரின் பூசையைச் செய்து வந்தார்கள்.

அவ்வாறு செப்புத்தகடு தங்கமாக மாறுவது எக்காலத் திலிருந்து என்ன காரணத்தினால் நின்று விட்டது என்பது தெரியவில்லை.

இக்கோயிலுக்குச் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளவில்லை. ஆறுகால பூசைகளுக்கும், விசேட பூசை களுக்கும், திருவிழாக்கள் முதலியவற்றிற்கும் பலராலும் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றிற்காக நில மாகவோ, சொத்து மூலமாகவோ ஏற்பாடு செய்யப் பெற்று, அவர்கள் குடும்பத்திலேயே வைத்துக்கொண்டு, அவரவர் குடும்பத்தவர்களே அந்தக் கட்டளையையும் தீட்சதர்கள் மூலம் நடத்தி வருகின்றார்கள்.

12. திருப்பணிகள்

முற்காலத்தில் கௌட தேசத்தை அரசாண்ட மன்னனின் மூத்த குமாரனான சிம்மவர்மன் என்பவன், உடம்பில் நோய் பீடிக்கப்பட்டிருந்தான். அதனால் அவன் நாட்டை ஆளுவதற்கு மனமில்லாமல், முடிசூட்டிக் கொள்ளாமல் தன் நாட்டை விட்டுப் புறப்பட்டுப் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தான்.

சிம்மவர்மன் அவ்வாறு வரும்பொழுது, ஒரு வேடனால் தில்லைவனம் என்னும் இடத்தில் ஒரு சுயம்பு இலிங்கம் இருப்பதையும், அங்குப் புலிக்கை, புலிக்கால்களையுடையவரும், பாம்பின் உடலுடன் இருப்பவருமான இருவர் அவ்விலிங்கத்தைப் பூசித்து வருவதையும் சொல்லக் கேட்டறிந்தான்.

அதனை அறிந்த சிம்மவர்மன் சென்று தில்லைவனம் அடைந்தான்; வியாக்கிரபாதர், பதஞ்சலி இருவரையும் கண்டு, தன்னுடைய வரலாற்றைச் சொல்லி, தன் உடம்பிலுள்ள நோய் நீங்க அருள்புரிய வேண்டும் என்று வேண்டினான்.

வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் உடனே திருமூலநாதரையும் உமையம்மையையும், நடராஜரையும் சிவகாமசுந்தரியையும் சிம்மவர்மன் தரிசிக்குமாறு செய்து, தாங்களும் பெருமான் சந்நிதியில் அவனுடைய வரலாற்றைச் சொல்லி, அவனுடைய நோயையும் எடுத்துக்கூறிப் பெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டனர்.

கருணா மூர்த்தியாகிய பெருமானும் உடனே. ''சிம்மவர்மனைச் சிவகங்கையில் நீராடச் சொல்'', என்று வியாக்கிரபாதரிடம் அறிவுறுத்தியருளினார். வியாக்கிரபாதரும்

உடனே சிம்மவர்மனைச் சிவகங்கையில் நீராடச் சொன்னார்.

சிம்மவர்மனும் பயபக்தியோடு சென்று சிவகங்கையில் நீராடினான், அந்நிலையில் அவன் உடம்பில் இருந்த நோய் நீங்கியது; அஃதோடன்றே உடம்பு தங்கமயமாகப் பிரகாசித்தது. அதைக்கண்ட சிம்மவர்மன் பெருமகிழ்ச்சி கொண்டு, பெருமான் சந்நிதியில் வந்து தரையில் விழுந்து புரண்டு, பெருமானின் கருணையையும் அருளாற்றலையும் நினைத்து நினைத்து ஆனந்தக் கண்ணீர் பெருக, புலம்பிக் கொண்டிருந்தான்.

அதைக்கண்ட வியாக்கிரபாதரும், பதஞ்சலி முதலியோரும் பெருமானின் கருணையையும், அற்புதச் செயலையும் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்; பெருமானைத் தோத்திரம் செய்தனர்; சிம்மவர்மனைப் பார்த்து, ''உன்னுடைய உடம்பு தங்கமயமானதால், இன்றுமுதல் உன்னை 'இரண்யவர்மா' என்று வழங்குவார்களாக'', என்று சொல்லி, அன்போடு பெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு இருக்கும்போது, இரண்யவர்மாவின் தந்தையானவன் தன் மைந்தனைத் தேடிக்கொண்டுவந்து தில்லைவனத்தை அடைந்து தன் மைந்தனைக் கண்டான்; மைந்தன் உடல் நோய் நீங்கித் தங்கமயமாக உள்ளதைக் கண்டு வியப்படைந்தான்; அவ்வாறு நிகழ்ந்த விபரங்களைக் கேட்டறிந்தான்; பெருமானின் அற்புதச் செயலை அறிந்து, தானும் சிவகங்கையில் நீராடி அனுட்டானம் முடித்துக் கொண்டு, பெருமான் சந்நிதியில் விழுந்து வணங்கி ஆனந்தக் கண்ணீர் பெருகத் தலைமீது கைகுவித்து வணங்கித் தோத்திரம் செய்தான்; திருமூலநாதரைத் தரிசித்துக் கொண்டு, வியாக்கிரபாதர் பதஞ்சலி

முதலியோரையும் வணங்கினான்; தான் தன்மகனைத் தேடிவந்ததையும், மகனை அழைத்துச் சென்று முடி சூட்டக் கருதியிருந்ததையும் கூறினான்.

அருகில் இருந்து அதைக் கேட்ட இரண்யவர்மா, ''என்னுடைய புறநோயை நீக்கிய பெருமான், என்னுடைய அகநோயையும் நீக்கி ஆட்கொள்வார். ஆகையால் எனக்கு அரசபோகம் வேண்டாம். நான் இங்கேயே இருந்து கொண்டு, பெருமானைத் தரிசித்துக் கொண்டிருக்கின்றேன்,'' என்று கூறினான்.

வியாக்கிரபாதர் நன்கு யோசித்து, இவன் நாட்டை ஆள முடிசூட்டிக் கொண்டால்தான், இவனைக் கொண்டு பெருமானுக்கு நல்ல பெரிய கோயிலாகக் கட்டச்செய்ய லாம் என்று எண்ணி, இரண்யவர்மாவை நோக்கி, ''முன்பு உனக்கு உடம்பில் நோயிருந்ததால், நீ முடிசூட்டிக் கொள்ளாதது சரி. இப்பொழுது பெருமான் திருவருளால் உன்னுடைய நோய் நீங்கியதோடன்றி, தங்கமயமா யிருக்கின்றது. மேலும் பெருமானுக்குக் கோயில் இல்லாமல் இருக்கின்றது. ஒரு பெரிய கோயில் கட்ட வேண்டும். ஆகையால், நீ உன் தந்தையின் விருப்பப்படி உன் ஊருக்குச் சென்று முடிசூட்டிக் கொண்டு, பெரு மானின் துணையால் நீதியுடனும், குடிமக்களின் அன் புடனும் ஆட்சி புரிந்து வா உன்னுடைய தாய் தந்தை அனுமதியுடன் அதிகமான போருளோடு இங்குவந்து பெரு மானுக்குக் கோயில் கட்டவேண்டும்,'' என்று கூறினார்.

வியாக்கிரபாதரின் வார்த்தையை மீறமுடியாததாலும், பெருமானுக்குக் கோயில் கட்ட வேண்டியதற்காகவும், இரண்யவர்மா முடிசூட்டிக் கொள்ள இசைந்தான்: ஆனாலும் பெருமானை விட்டுப் பிரிய மனமில்லாமல், பெருமான் சந்நிதியில் நீண்ட நேரம் விழுந்து அழுது

புரண்டான்; மற்றவர்களின் தேறுதல் வார்த்தையால் ஒருவாறு மனத்தையடக்கிக் கொண்டு தன் தந்தையுடன் தன்னுடைய நாட்டுக்குச் சென்றான்.

கௌடதேசத்தில் இரண்யவர்மா நல்லநாளில் முடி சூட்டப்பெற்றான்; எந்நேரமும் பெருமானை மனத்தில் இருத்திக் கொண்டு, நீதிவழுவாது குடிகளிடத்தில் அன்புடன் அரசு புரிந்தான்: தன்னுடைய தாய், தந்தை, உடன் பிறந்தான் முதலிய உறவினர்களோடும் அன்புடன் ஒழுகினான்.

அவ்வாறு அரசுபுரிந்து கொண்டிருந்த இரண்யவர்மன், தன் தாய் தந்தை அனுமதி பெற்றுப் பெரும் பொருளுடன் தில்லைக்கு வந்தான்; திருமூலநாதர் உமையம்மைக்கும், நடராஜர் சிவகாமசுந்தரியம்பாளுக்கும் கோயிலும், நான்கு கோபுரங்களும், ஐந்து பிராகாரங்களும், மதிற்சுவர்களும், மற்றும் மாடமாளிகை கூட கோபுரங்களும், கோபுரங்களில் தங்கக் கலசங்களும், சுவாமி இருக்கும் ஞான சபைக்குத் தங்க ஓடும் தங்கக்கலசங்களும் மற்றும் சபைகளும் அவற்றிற்குத் தங்கக் கலசங்களும், கனகசபை, நிருத்தசபை, தேவசபை என்னும் மூன்று சபைகளுக்கும் செப்பு ஓடுகள் வேய்ந்த விமானங்களும், ராசசபை என்னும் ஆயிரக்கால் மண்டபமும், சிவகங்கை என்னும் தீர்த்தத்திலே நாற்புறமும் படிக்கட்டுகளும், மண்டபங்களும், விநாயகர் கோயிலும், சுப்ரமணியர் கோயிலும், பல மூர்த்தங்களும் அமைத்தான்.

இவ்வாறு கோயில் கட்டிய இரண்யவர்மன், நித்திய பூசைகளுக்கும், ஆண்டு முழுவதும் நடக்கும் திருவிழாக்களுக்கும், தைபூசப் பாவாடை முதலிய பல பாவாடைகளுக்கும் தேவையான பொருளும் கொடுத்தான்; வேத விதிப்படி பூசைகள் நிகழ்த்தவும் ஏற்பாடு செய்தான்;

தில்லை மூவாயிரவர்களையும், பதஞ்சலியையுங் கொண்டு பூசைகள் செவ்வனே நடைபெற்று வரச்செயதான்.

இவ்விரணிய வர்மனுக்குப் பின்னர் சோழமன்னர்கள் பலரும் திருப்பணிகள் செய்தனர் என்னும் செய்தி வரலாற்றால் அறிய முடிகின்றது.

சோழர் திருப்பணிகள்

பிற்பட்ட சோழமன்னர் காலத்திலேயே தில்லைத் திருத்தலம் பல்வகையிலும் சிறப்புப் பெற்று விளங்கியது. இரண்டாம் குலோத்துங்க சோழனால் தில்லைக் கோயிலில் சிறந்த பல அரிய திருப்பணிகள் செய்யப் பெற்றன. தில்லைச் சிவகாமியம்மன் கோயிலும், இதன் எதிரில் உள்ள சிவகங்கைத் திருக்குளமும் இவனாலேயே அமைக்கப் பெற்றன. தில்லைப் பேரம்பலத்திற்கு இவன் பொன் வேய்ந்தான். ஆதலால் இவன் ''பேரம்பலம் பொன் வேய்ந்த சோழன்'' என்று யாவராலும் புகழப்பெற்றான். தில்லையும், இதன் எல்லையும் இவனால் பொன்னின்மயம் ஆக்கப்பெற்றன. இவனது தந்தையாகிய விக்கிரமசோழன் காலத்தில் ஆயிரக்கால் மண்டபம் தொடங்கி, இவன் காலத்தில் முடிவு பெற்றிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

தில்லைக்கோயிலின் மூன்றாம் திருச்சுற்று மாளிகை விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கி மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இத்திருச்சுற்றுமாளிகை மூன்றாம் குலோத்துங்கன் விருதுப் பெயரால் 'இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை' என்று வழங்கப் படுவதாயிற்று.

இத்திருச்சுற்று மாளிகையின் ஒவ்வொரு திசையின் நடுவிலும் ஒவ்வோர் எழுநிலைக் கோபுரம் காட்சியளிக்

கிறது. கீழ்த்திசைக் கோபுரம் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது என்பதை இக்கோபுரத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இக்கோயிலின் மேலைக்கோபுரம் விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இவனுடைய மெய்க் கீர்த்தி, இவன், தன் குறுநில மன்னர்கள் சுமந்து கொணர்ந்து திறையாகச் சொரிந்த செம்பொற் குவை யால் தம் குலநாயகன் தாண்டவம் பயிலும் செம்பொன் அம்பலமும், சூழ்திருமாளிகையும், கோபுர வாசலும், கூட சாலைகளும், பலிபீடமும் செம்பொன் வேய்ந்தான். அதனால் இமையவர் களிக்கவே இருநிலம் தழைத்தது என்று குறிப்பிடுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள கோபுர வாசல் என்பது மேலைக்கோபுரமாகும்.

விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கிய மேலைக் கோபுரம், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முடி வுற்றது. இரண்டாம் குலோத்துங்கன் வடக்கு கிழக்குக் கோபுரங்களின் திருவாயிற் பகுதிகள் மட்டும் கட்டினான்.

தில்லைக்கோயிலின் தெற்குக்கோபுர வாயிலுக்கு மேலுள்ள எழுநிலைமாடம் கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவ மன்னனால் கட்டப்பட்டது. இதனைச் செங்கற் பட்டு மாவட்டத்தில் உள்ள ஆற்றூர்க் கல்வெட்டு உணர்த்துகின்றது.

கெமர்மொழி பேசும் காம்போஜநாட்டு (கம்போடியா-இந்து சீனா) மன்னன், முதற் குலோத்துங்க மன்னனின் உறவை நாடி விலை உயர்ந்த கல்ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தான் என்றும், பரிசாகக் கொடுத்த அக்கல்லைக் குலோத்துங்கன் தில்லையில் எதிரம்பலம் என்று வழங்கப் பெற்ற திருமூலத்தானத்தார் கோயில் திருவாயில் மேல்

சரத்தில் அமைத்தான் என்றும் தில்லைக்கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. இக்கல்வெட்டு, குலோத்துங்க மன்னனின் 44 ஆம் ஆண்டில் இவனுடைய திருத்தங்கையார் குந்தவை ஆழ்வார் தில்லைநாயகர் கோயிலெல்லாம் செம்பொன் வேய்ந்தார் என்ற செய்தியையும் கூறுகின்றது.

தில்லைச் சபாநாயகரின் கீழைக் கோபுரத்தில் இரண்டு கல்வெட்டுப் பாடல்கள் உள்ளன. இக்கல்வெட்டுப் பாடல் களிலிருந்து குலோத்துங்கன் திருமாலின் அம்சமாகத் தோன்றினான் என்பதும், இவன் தில்லைநாயகரின் கோயிலை விரிவாக்கக்கருதி, தன்னுடைய ஆட்சியின் 26 ஆம் ஆண்டில் தில்லைத் திருப்பணியைத் தொடங்கினான் என்றும் தெரிகின்றது.

குலோத்துங்கனின் 46, 47 ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் திருமூலத்தானரின் கோயில் புறச் சுவர்களில் பொறிக்கப் பட்டிருந்தன. பின்னர் 'நடராசன் — கோவிந்தராசன்' கோயில்களை வளைத்துப் புதிதாக எடுக்கப்பட்ட திருச் சுற்று மாளிகையின் வடசுவரில் பொறிக்கப்பட்டன. திரு மூலத்தானர் கோயில் இக்காலத்தில் புதுப்பிக்கப் பெற்றது.

குலோத்துங்கன் காலத்திலும், விக்கிரம சோழன் காலத் திலும் வாழ்ந்த சிறந்த படைவீரன் நரலோகவீரன் என்பவன். இவ்வீரனுடைய வீரச்செயல்களையும், திருப் பணிகளையும் விளக்கும் கல்வெட்டொன்று, தில்லையில் சபாநாயகர் கோயிலின் முதல் திருச் சுற்று மாளிகை மேற்குப்புறச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டில் வட மொழிப்பாடல்கள் 31-ம், தமிழ் வெண்பாக்கள் 36-ம் இடம் பெற்றுள்ளன.

வடமொழிப் பாடல்களில், நரகலோகவீரன் பொன்னம் பலம், பேரம்பலம் ஆகியவற்றிற்குப் பொன் வேய்ந்தமை

யும், கிள்ளைக் கடல் தீர்த்தத் துறைக்குச் செல்வதற்குப் பெருவழி அமைத்து, தீர்த்தத்துறைக்கு அருகே மண்டபம் எடுப்பித்து நன்னீர்க்குளம் தொட்டமையும், இரண்டு கோபுரங்கள் கொண்ட நரலோகவீரன் திருமாளிகை எழுப்பியமையும், இறைவனும் இறைவியும் வீற்றிருக்க நூற்றுக்கால் மண்டபம் அமைத்தமையும், அம்மன் கோயிலும் அதற்குக் கோபுரத்துடன் கூடிய திருச்சுற்று மாளிகை எடுப்பித்தமையும், சிவகங்கையாகிய திருக் குளத்திற்குக் கருங்கற்படி சார்த்தியமையும், திருப்பதிகம் பாடுவோர்க்குத் திருமண்டபம் அமைத்தமையும், மூவர் தேவாரத்தைச் செப்பேடுகளில் பொறித்தமையும், கோயிலுக்கு நந்தவனமும் கமுகந்தோட்டமும் அமைத்தமை யும், வீதிகளுக்கு விளக்குகள் இட்டமையும், தில்லை எல்லை யிலுள்ள வீராணத்தேரிக்கு மண்டபம் அமைத்தமையும் கூறப்பட்டுள்ளன.

முதற்குலோத்துங்கனின் மைந்தன் விக்கிரம சோழன். விக்கிரம சோழன் திருப்பணிகளை வரிசைப் படுத்திக்கூறும் மெய்க்கீர்த்தியும் உள்ளது. இம் மெய்க்கீர்த்தியில் விக்கிரம சோழன், கூத்தர் எழுந்தருள்வதற்குத் திருத்தேர்க்கோயில் செம்பொன் வேய்ந்தான் என்றும், நிறைமணி மாளிகை நெடுந்தேர்வீதி தன் திருவளர் பெயரால் செய்து சமைத் தருளினான் என்றும், மற்றும் சில திருப்பணிகள் செய்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்பிற்காலச் சோழர் காலத்தில் தில்லையில் திருமூலத் தானத்தார்கோயில் புதுப்பிக்கப்பட்டது. முற்பட்டசோழர் காலத்து மூலவர் கோயில் பழைய நிலையில் குலோத்துங் கனுடைய 47 ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது. புதுப் பிக்கப் பெற்ற கோயில் எதிரம்பலம் (கூத்தப் பெருமான் கோயிலுக்கு எதிராக உள்ளது) என்று வழங்கப் பெற்றது.

நிருத்தசபை, உட்புறமுள்ள இரு திருச்சுற்று மாளிகைகள், நூற்றுக்கால் மண்டபம், அம்மன் கோயில் ஆகியவை புதியனவாக இணைக்கப் பட்டன. மேலைக் கோபுரம் விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கி இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முடிவு பெற்றது. இக்காலத்திலேயே சிவகங்கைத் திருக்குளத்திற்குக் கருங் கற் படிகள் கட்டப்பட்டன.

நிருத்த சபை என்பது ஊர்த்துவ தாண்டவமூர்த்தியை முக்கியத் தெய்வமாகக் கொண்ட மண்டபம். இந்நிருத்த சபை முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இவ்வாறு கோயிலின் அமைப்பும், பரப்பும் விரிவடைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்திருக்கோயிலின் கீழைக்கோபுரம், தருமசீலரான பச்சையப்ப முதலியாரின் மாமியாரால் புதுப்பிக்கப்பட்டது.

13. சிற்பங்களும் ஓவியங்களும்

தில்லைத் தலத்துத் திருக்கோயிலில் கலைநுட்பங்கள் வாய்ந்த பல அழகிய சிற்பங்களும், ஓவியங்களும் அமைந்துள்ளன. இவை கோயிலை அணிசெய்வதோடன்றி, அன்பர்களின் இதயத்தைக் குளிர்வித்துப் பக்தியுணர்வைப் பெருக்குகின்றன, இத்தலத்துக் கோயிலின் சிற்பக்கலை பெரிதும் போற்றத் தக்கதாகும்.

கோயிலின் நான்கு பக்கத்துக் கோபுரங்களிலும் எண்ணற்ற சிற்ப உருவங்கள் அமைந்து விளங்குகின்றன. அகத்தியர், திருமூலர், வியாக்கிரபாதர், பதஞ்சலி, அக்கினி தேவர், அசுவினிதேவர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், பாசுபதர், அர்த்தநாரீசுவரர், திரிபுராந்தகர், கஜசங்காரர் முதலிய எண்ணற்ற திருவுருவங்கள் கோபுரத்தில் உள்ள மாடங்களில் நிறைந்திருக்கின்றன. பிற தலங்களில் காண வியலாத திருக்கோலங்களையெல்லாம் இத்தலத்துக் கோபுரச் சிற்பங்களில் கண்டு மகிழலாம்.

கோயிலின் மேலைக் கோபுரத்துத் தலைவாயில் கீழ்த் தளத்தில் பெயர் பொறிக்கப்பட்ட பல அழகிய சிற்பங்கள் அமைந்து விளங்குகின்றன. அவையாவன: சந்திரன், கிரியா சக்தி, சனிபகவான், வாயுபகவான், அக்கினி பகவான், தலப்பாலப்பிள்ளையார், காமதேவன், கங்கா தேவி, அகத்தியர், ஆதிசண்டேசுவரர், கருடன்மீது விஷ்ணு, தன்வந்தரி, திரிபுரசுந்தரி, சீதேவி, சுக்கிரன், தாரகாரி (சுப்பிரமணியர்), ஜயன், விஜயன் என்ற துவார பாலகர், தேவேந்திரன், துவாரபாலக கணநாதர், நாகன், யமுனை, பத்ரகாளி, நிருதி, புதன், ஞானசக்தி, விசுவ கர்மா, துர்க்காதேவி, உருத்திரதேவர், ராகு-கேதுக்கள், நாரதன், அளகேசுவரன் ஆகியவையாகும்.

கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலில் உள்ள குழல் தாங்கிய பூதகணச் சிற்பத் தோற்றம் காணச் சிறப் புடையது. இன்னும் இவ்வாயிலின் இருபக்கமும் உள்ள நிலைகளில் ஒன்றின் மேலொன்றாகிய நாட்டியச் சிற்பங் கள் சிறப்புமிக்கவை, இச் சிற்பங்களில் பரத சாத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பலவேறு நிலைகளைக் காணலாம்.

கோயிலில் திருப்பணிகள் செய்த பெரியோர்களின் திருவுருவச் சிற்பங்களும் கோபுரங்களில் அமைந்து காணப் படுகின்றன. கோயிலின் கீழைக் கோபுரத்தில் பச்சையப்ப முதலியாரின் மாமியார் திருவுருவமும், வடக்குக் கோபு ரத்தில் கிருஷ்ணதேவராயரின் திருவுருவமும், நிருத்த மண்டபத்தில் மூன்றாம் குலோத்துங்கசோழனின் திருவுரு வமும் காணப்படுகின்றன. நாயக்க மன்னனாகிய கிருஷ்ண தேவராயன் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக்கோயிலில் திருப்பணிகள் செய்தவன்.

ஊர்த்துவ தாண்டவமூர்த்தி எழுந்தருளியுள்ள நிருத்த சபை, 6 அடி (1.50 மீ) உயரமும் நல்ல சிற்பவேலைப்பாடும் கொண்டமைந்த 56 தூண்களோடு விளங்குகின்றது. இத் தூண்களில் அமைந்து விளங்கும் விசேடச் சிற்பங்கள் வியக்கத் தக்கவையாகும். இச்சபா மண்டபம் ஒரு தேர் வடிவில் அமைந்து அழகுற விளங்குகின்றது. இதில் உள்ள சக்கரங்களும், குதிரைகளும் சிற்பக் கலைத்திறன் உடையவை.

ஓவியங்கள்

சிற்பக்கலை விருந்தளிக்கும் இத்திருக்கோயிலில், சிற்பக் கலை வளத்தின் அளவிற்கு ஓவியக் கலைவளம் அமைய வில்லை என்று கூறலாம். ஆயினும், சிந்தனையைக் கவரத் தக்க வகையில் சித்திரங்கள் சில காணப்படுகின்றன.

பாண்டிய நாயகர் என்னும் சுப்பிரமணியர் திருக்கோயிலில் கந்தபுராண நிகழ்ச்சிகள் ஓவியங்களாக வரையப் பெற்று விளங்குகின்றன. இவ்வோவியங்கள் மிகவும் கண்டு மகிழ்த்தக்கவை. அவ்வோவியங்களை வரைந்தும், திருப்பணிகள் செய்தும் குடமுழக்கு விழா நிகழ்த்திய தருமசீலர் செ. இரத்தினசாமி செட்டியார்.

சிவகாமியம்மன் மண்டபத்தின் கூரையில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன இவ்வோவியங்களுள், திருமால் மோகினி அவதாரம் எடுத்து, தாருகாவனத்து முனிவரை மயக்கும் காட்சியும், சிவபிரான் பிட்சாடன உருவமெடுத்து வரும் காட்சியும், அவருடைய அழகுக் கோலம் கண்டு முனிவர் மனைவியர் உள்ளம் நெகிழ்தலைச் சித்திரிக்கும் காட்சியும் சிறப்புமிக்க ஓவியங்களாகத் திகழ்கின்றன.

சிவகாமியம்மன் கோயிலில் கொடிமர மண்டபத்தில் தேவிமகாத்மிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை வரையப் பெற்று நெடுங்காலமானதால் அழிவுற்ற நிலையில் உள்ளன.

14. நித்திய பூசைகள்

தில்லைத் தலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜ மூர்த்திக்கு நாடோறும் ஆறுகால பூசைகள் நடைபெற்று வருகின்றன; காலையில் மூன்று பூசைகளும், மாலையில் மூன்று பூசைகளும் நடைபெறுகின்றன. இவை மட்டு மல்லாமல், காலை ஆறு மணிக்குக் கதவு திறக்கப்பட்டுப் பள்ளியறையில் பால், பொரி, பழம் முதலியவற்றை நைவேத்தியம் செய்து, தீபாராதனை செய்து, சுவாமியின் பாதுகையை. வெள்ளி, தங்கப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி கொண்டுவந்து நடராஜரின் அருகில் வைத்து, நடராஜருக்கும் சிவகாமசுந்தரியம்பாளுக்கும் பால், பொரி, பழம் முதலியவை நைவேத்தியம் செய்து தீபாராதனை செய்தும் வருகின்றனர். இது திருவனந்தல் என்றும், பால் நைவேத்தியம் என்றும் வழங்கப்படும். இந்நைவேத் தியம் ஆறுகால பூசைகளில் சேராதது.

நாள்தோறும் முறையே ஆறுகால பூசைகள் நடை பெறுகின்றன. ஒருகாலம் என்பது, நடராஜருக்காக படிகலிங்கத்துக்கு அபிடேகம் செய்து, நைவேத்தியம் செய்து, பின்னர் நடராஜர், சிவகாமசுந்தரிக்குத் தீபாராதனை செய்வது வரையிலுமாகும்.

ஆறுகாலங்களாவன: காலசந்தி, இரண்டாங்காலம், உச்சிக்காலம், சாயரட்சை-சாயுங்காலம், இரண்டாம்மறு காலம், அர்த்த ஜாமம் ஆகியவையாகும்,

அபிடேக நீர்

நடராஜர் எழுந்தருளியிருக்கும் சித்சபைக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள பரமானந்த கூபம் என்னும் தீர்த்தமே (கிணறு) எப்போதும் அபிடேகத்திற்குப் பயன் படுத்தப்படுகின்றது.

இத்தீர்த்தம் மிகவும் விசேடமானது. இத்தீர்த்தத் திற்கு ஐப்பசி மாதம் பூர்வபட்ச நவமி திதியில் கங்கையே

வருகின்றாள். அதனால் இத்திருக்கோயிலிலுள்ள எல்லா சுவாமிகளுக்கும் அபிடேகத்திற்கு இத்தீர்த்தம் பயன் படுகிறது.

காலசந்தி

காலை 7½ மணிக்குக் கும்பம் வைத்துப் பூசை செய்து, ஹோமம் செய்து, பஞ்ச கவ்யம் முதலியவற்றால் அபிடேகம் செய்து, நைவேத்தியம் செய்து 9 மணிக்குத் தீபாராதனை நடைபெறும்.

இரண்டாங் காலம்

10 மணிக்குப் படிகலிங்கத்துக்கு அபிடேகம் செய்து, இச்சமயத்தில் இரத்தினசபாபதிக்கும் பால், தேன். சந்தன அபிடேகம் செய்து, கர்ப்பூர தீபாராதனை நடைபெறும். மாணிக்க நடராஜர் முன்புறம் தீபாராதனை காண்பிக்கும் போது கறுப்பாகவும், பின்புறம் காண்பிக்கும் போது ஜோதியாயும் தெரியும். இது முக்கியமான தரிசனமாகும்.

வேறு எந்தப்பூசை நேரத்திலும் இத்தரிசனத்தைக் காண முடியாது. நைவேத்தியம் செய்து 11-மணிக்குத் தீபாராதனை.

உச்சிக்காலம்

இரண்டாங்காலத் தீபாராதனை முடிந்தவுடன், அபிடேகம் செய்து நைவேத்தியம் காட்டி, 12-மணிக்குத் தீபாராதனை; உடனே கதவு மூடப்பட்டு, மாலை 5-மணிக்குத் திறக்கப்படும்.

சாயுங்காலம்

கதவு திறந்தவுடன் அபிடேகம் செய்து, 6-மணிக்கு ஷோடசோபசார தீபாராதனை நடைபெறும்.

இரண்டாம் மறுகாலம்:

இரவு 7-மணிக்கு அபிடேகம் செய்து தீபாராதனை நடைபெறும். இச்சமயத்தில்தான் அருவமான இரகசியத்

திற்குப் பூசை நடைபெறும். கதவுகள் சாத்தப்பட்டு, பூசை செய்பவர், செய்விக்கின்றவர் ஆகிய இருவர் மட்டும் இருந்து பூசை செய்து நைவேத்தியம் செய்து: 8-மணிக்குத் தீபாராதனை நடைபெறும்.

அர்த்த சாமம்

இரவு 9-மணிக்கு அபிடேகம் செய்து நைவேத்தியம் காட்டி, 10-மணிக்குத் தீபாராதனை செய்து, நடராஜரின் பாதுகையை வெள்ளி, தங்கப்பல்லக்கில் எழுந்தருளச் செய்து, பள்ளியறையில் கொண்டுபோய் வைத்து, அங்கும் நைவேத்தியம் செய்து தீபாராதனை நடைபெற்று, பின்னர் பிரம சண்டேசுவரருக்கும், பைரவ சுவாமிக்கும், அர்த்த சாம அழகருக்கும் நைவேத்தியம் செய்து தீபாராதனை நடைபெறும். இதுவே அர்த்தசாம பூசை.

வெள்ளிக்கிழமைகளில் பாதுகையை இரண்டாம் பிரா காரத்தில் வேதபாராயணங்களுடனும், தேவாரக் குழுவின ருடனும் வலமாக வந்து, ஒவ்வோர் இடத்திலும் மண்டகப்படி நடைபெறும்; ஆடி வெள்ளிக்கிழமைகளில் இது விசேடமாக நடைபெறுவது வழக்கம்.

பிற சந்நிதிகள் பூசைக் காலம்

தில்லைத் தலத்துக் கோயிலில் மூலஸ்தானம் என்று சொல்லப்படுகின்ற திருமூலநாதர், உமையம்மை சந்நிதி யிலும், சிவகாமசுந்தரியம்பாள் திருச்சந்நிதியிலும் நாள் தோறும் காலையில் இரண்டு காலங்களிலும், மாலையில் இரண்டு காலங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

பாண்டிய நாயகம் என்று சொல்லப்படுகின்ற சுப்பிர மணியர் திருச்சந்நிதியிலும், முக்குறுணி விநாயகர் முதலிய மற்ற சுவாமிகளின் திருச்சந்நிதிகளிலும் காலையில் ஒரு காலமும், மாலையில் ஒரு காலமும் பூசைகள் நடைபெறு கின்றன

15. நடராஜர் அபிடேகங்கள்

நமக்கு ஓர் ஆண்டு, தேவர்களுக்கு ஒருநாள். ஓர் ஆண்டில் நடராஜருக்கு அபிடேகம் ஆறு நாள்கள்:

1. சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் கனக சபையில், மாலையில் அபிடேகம்.

2. ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில், இராச சபை என்னும் ஆயிரக்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் 4 மணிக்கு அபிடேகம்.

3. ஆவணி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில், கனக சபையில், மாலையில் அபிடேகம்.

4. புரட்டாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில், மாலையில் அபிடேகம்.

5. மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் இராசசபை என்னும் ஆயிரக்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் 4 மணிக்கு அபிடேகம்.

6. மாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிடேகம்.

இவ்வபிடேகங்கள் நிகழுந் தருணத்தில் நடராஜரைக் கண்டு வணங்கி வழிபடுவது மிகவும் நல்லது; விசேடமானது.

16. திருவிழாக்கள்

தில்லைத் திருக்கோயிலில் நிகழும் திருவிழாக்கள் பல. அவற்றைப் பெரிய திருவிழாக்கள் என்றும், வருடாந்திரத் திருவிழாக்கள் என்றும் இருவகைப் படுத்தலாம்.

பரிய திருவிழாக்கள்

இறைவனுக்கு நாள்தோறும் செய்யப் பெறும் பூசைக்கு நித்தியம் என்றும், விசேடகாலங்களில் செய்யப படும் விழாக்களுக்கு நைமித்திகம் என்றும் கூறுவதுண்டு. நித்திய பூசையில் குறைபாடுகள் ஏற்பட்டால், அவை நைமித்திக பூசையில் நீக்கப்பெறும்.

நடராஜமூர்த்திக்கு ஓர் ஆண்டில் இரண்டு பெரிய திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவை ஆண்டு தோறும் மார்கழித் திருவாதிரையிலும், ஆனி உத்திரத்தி லும் நிகழ்ந்து வருகின்றன.

திருவாதிரை நாள் சிவபிரானுக்கு உகந்த நாள். ஆகை யால் அந்நாளில் திருவிழா நடைபெறுவதுண்டு. தில்லை நடராஜமூர்த்திக்கு மார்கழித் திருவாதிரைத் திருவிழா பழங்காலத்திலிருந்தே நடந்து வந்திருக்கும் உண்மை யினைப் பழைய இலக்கியங்களிலிருந்தும், சமயகுரவர் நால்வர் பாடல்களிலிருந்தும் அறியலாம்.

சிவபிரான் திருவாதிரைத் திருவிழாவினையாதலின், 'ஆதிரை முதல்வன்' என்றும், 'ஆதிரையான்' என்றும் திருப்பெயர் பெற்றுள்ளார்; ''ஆதிரை முதல்வனிற் கிளந்த நாதர்பன் னொருவரும்'' என்று பரிபாடல் எட்டாம் பாட்டிலும், ''அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த'' என்று கலித்தொகையிலும் குறிக்கப் பெற்றுள்ளார்

கார்காலம் நீங்கி முன்பனிப்பருவம் தொடங்கியபோது மார்கழித் திங்களில் முழுச் சந்திரனையுடைய திருவாதிரை நாளில் பல நூல்களையும் கற்றுணர்ந்த அந்தணர்கள் சிவபிரானுக்குத் திருவிழாச் செய்யத் தொடங்கினார்கள். இதனை,

"மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க."

என்னும் பரிபாடல் வரிகள் விளக்குகின்றன.

தில்லையில் நடராஜமூர்த்தி தேர்மீது எழுந்தருளி உலா வந்த விழாக்காட்சியினைக் கண்டு திளைத்த திருநாவுக்கரசு சுவாமிகள் "தேருலாவிய தில்லையுட்கூத்தனை" என்றும், திருஞானசம்பந்த சுவாமிகள்,

"தாரினார்விரி கொன்றையாய் மதி
தாங்குநீள்சடை யாய் தலைவாநல்ல
தேரினார் மறுகிற் றிருவாரணி தில்லைதன்னுள்."

என்றும் பாடிச் சென்றுள்ளனர்.

ஆனித்திருமஞ்சனம்

முதலாவது ஆனிமாதம் உத்திர நட்சத்திரத்திற்குப் பத்துநாள் முன் கொடியேற்றி, முதல்நாள் திருவிழா முதலாக எட்டாந்திருவிழாவரையில் உத்சவ மூர்த்திகளான சோமாஸ்கந்தர், சிவானந்த நாயகி, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் முதலிய பஞ்சமூர்த்திகளும் ஒவ்வொருநாளும், ஒவ்வொரு வெள்ளி, தங்க வாகனங்களில் வீதியுலா வருவார்கள்.

ஒன்பதாம்நாள் தேர்த்திருவிழாவிற்கு மூலவரான நடராஜர், சிவகாமி, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர்

முதலிய பஞ்ச மூர்த்திகளும் ஐந்து தேர்களில் வீதிவலம் வருவார்கள். அதன் பின்னர் நடராஜர், சிவகாமியம்மன் இருவரையும் ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, மீண்டும் திருவாபரணம் சாத்தி, அர்ச்சனை பூசை முதலியவை செய்து, பகல் ஒருமணிக்கு நடராஜ மூர்த்தியும், சிவகாமசுந்தரியம்பாளும் ஆனந்த நடனம் செய்துகொண்டு ஞானாகாச சித்சபையில் எழுந்தருளு வார்கள். எழுந்தருளியதன் பின்னர் தீபாராதனை. இரவு சுடாபிஷேகம் செய்து, கொடி இறக்கப்படும்.

கொடியேற்றம் முதலாகக் கொடி இறக்கும் வரையில் நிகழ்பவை அனைத்தும் ஆனிப்பெருவிழாவாகும்.

கொடி இறக்கப்பட்டதன் மறுநாள் விடையாத்தித் திருவிழா நடைபெறும்.

மார்கழித் திருவிழா

இரண்டாவது, மார்கழி மாதம் திருவாதிரை நட்சத் திரத்திற்கு முன் கொடியேற்றி, பத்துநாள் விழா நடை பெறும். ஆனி உத்திரப் பெருவிழாப் போன்றே பத்து நாள் விழாக்களும் நடைபெறும்.

இத்திருவிழாவில் ஒரு தனி விசேடம் உண்டு; இவ் விசேடம் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அமைவது. பத்து நாள்களிலும் சாயுங்கால தீபாராதனையின் போது மாணிக்கவாசகரை, சுவாமியின் திருச்சந்நிதிக்கு எழுந் தருளச் செய்து, திருவெம்பாவைப் பாட்டுக்கள் பாடிச் சுவாமிக்குத் தீபாராதனை நடைபெறும்.

நாள்தோறும் காலை விழாவில் மாணிக்க வாசகரையும் எழுந்தருளச் செய்வதுடன், – 10ஆம் நாள் தரிசனம் முடிந்தவுடன், மாணிக்கவாசகருக்கும் தீபாராதனை நடை பெறும்.

சுவாமிக்கு விடையாத்தித் திருவிழா முடிந்த மறுநாள், மாணிக்கவாசகருக்கும் விடையாத்தித் திருவிழா நடைபெறும்.

திங்கள்தோறும் விழாக்கள்

சித்திரை வருடப்பிறப்பு, திருவாதிரை நட்சத்திரம், அமாவாசை முதலிய விசேட நாள்களில் நடராஜமூர்த்தி சிவகங்கையில் தீர்த்தம் கொடுத்தருள்வார். மற்ற மாதங்களிலும் இவ்வாறு தீர்த்தம் கொடுத்தருள்வார்.

சித்திரை முதல் பங்குனி முடிய பன்னிரு மாதங்களில் மாதப்பிறப்பு, பிரதோஷம், வெள்ளிக்கிழமை, திருவாதிரை, கார்த்திகை, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாள்களில் இரவு விழா நடைபெறும்.

அப்பர் முக்தி அடைந்த நாள்

அப்பர் அடிகளார் முக்தியடைந்த நாளாகிய சித்திரை சதய நட்சத்திரத்தில் அப்பர் திருவிழா நடைபெறும்.

வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் சுவாமி புறப்பட்டு அனந்தீசுவரன் கோயிலுக்குச் சென்று, அங்குப் பூசைகள் நடந்து, மாலையில் அங்கிருந்து புறப்பட்டு வந்து சேருவார்.

சம்பந்தர் முக்தியடைந்த நாள்

திருஞான சம்பந்தர் முக்தியடைந்த நாளாகிய வைகாசி மாத மூல நட்சத்திரத்தில் சம்பந்தர் திருவிழா நடைபெறும்.

மாணிக்கவாசகர் முக்தியடைந்த நாள்

ஆனிமாதம் உத்திரத் திருவிழாவின் நடுவில் மக நட்சத்திரத்தில், மாணிக்கவாசகர் பஞ்சமூர்த்திகளுடன்

காலையில் வீதி உலா வந்து, சுவாமி முன் எழுந்தருளச் செய்து, சுவாமிக்குத் தீபாராதனை செய்து பின்னர் மாணிக்கவாசகருக்கும் தீபாராதனை நடைபெறும். மாணிக்கவாசகர் முக்தியடைந்த நாள், ஆனிமாதம் மக நட்சத்திர நாளாகும்.

சுந்தரர் முக்தியடைந்த நாள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முக்தியடைந்த நாளாகிய ஆடிமாதம் சுவாதி நட்சத்திரத்தில், சுந்தரர் திருவிழா நடைபெறும்.

ஆடி அமாவாசையன்று சுவாமி விசேடமாகப் பகலில் வீதி வலம் வந்து, தீர்த்தம் கொடுத்தருள்வார்.

ஆடி 18 ஆம் பெருக்கு நாளன்று சுவாமி கொள்ளிடம் நதிக்குச் சென்று தீர்த்தம் கொடுத்தருள்வார்; மாலையில் வழியில் அநேக மண்டகப்படி ஆராதனைகள் நிகழ்ந்து திரும்பி வருவார்.

ஆடிமாதம் பூரநட்சத்திரத்தில் சிவகாமசுந்தரியம்பாளுக்கு இரவில் விசேட அபிடேக அலங்காரம் செய்யப் பெற்று, திருப்பல்லக்கில் வீதி விழா நடைபெறும்.

ஆவணி விநாயக சதுர்த்தியில் விநாயகப்பெருமானுக்குத் திருவிழா நடைபெறும்.

ஆவணி மூல நட்சத்திரத்தில் சுவாமிக்குப் பிட்டுத் திருவிழா நடைபெறும்.

புரட்டாசி மாதம் சிவகாமசுந்தரியம்பாளுக்கு நவராத்திரித் திருவிழா விசேடமாக நடைபெறும்.

ஐப்பசி மாதம் சிவகாமசுந்தரியம்பாளுக்கு, பூச நட்சத்திரத்திற்கு 10ஆம் நாள் முன்னதாகக் கொடியேற்றிப் பத்து நாள் திருவிழா நடைபெறும்; 9 ஆம் நாள் தேர்விழா

நடைபெறும்; 10 ஆம் நாள் திருமணச் சடங்குகள் போன்று சில- சடங்குகள் நிகழ்ந்து, சிவகங்கையில் தீர்த்தம் கொடுத்தருள்வார்; பின்னர் கொடி இறக்கம் செய்யப்பட்டு, மறுநாள் அம்பாள் தவம்புரிந்து அதாவது ஞானப்பிரகாசக் குளத்தின் வடகரையில் உள்ள சிவபுரி மடத்தின்முன் அலங்காரக் கொட்டகையில் எழுந்தருளச் செய்து, அங்கு விசேடமான பூசைகள் நிகழ்ந்து, பின்னர் மாலையில் அங்கிருந்து புறப்பட்டு வீதி வழியாகக் கோயிலுக்கு வருவார். கோயிலில் வந்து சேர்ந்த பின்னர் சுவாமிக்கும் அம்பாளுக்கும் திருக் கல்யாணமும், மறுநாள் காலை விழாவும் நடைபெறும். இத்துடன் பத்து நாள் விழா முடிவுறும்.

ஐப்பசி மாதத்திலோ கார்த்திகை மாதத்திலோ சுக்கிலபட்சம் பிரதமையில் தொடங்கி, கந்தசட்டி வரை ஐந்து நாள்கள் சுப்பிரமணியருக்குத் திருவிழா நடை பெறும். கந்தசட்டியன்று சூரசங்காரம் விசேடமாக நடை பெறும். மறுநாள் இரவு சுப்பிரமணியருக்குத் திருக் கல்யாணத் திருவிழா நடைபெறும். அதனை யடுத்தநாள் காலை விழாவுடன் முடிவு பெறும்.

கார்த்திகை மாதம் திருக் கார்த்திகைக்குப் பஞ்ச மூர்த்திகள் வீதிவலம் விசேடமாக நடைபெறும்.

மார்கழி மாதம் முதல் தேதி முதலாக முப்பதாந்தேதி வரை, நாள்தோறும் காலை 5 மணிக்குள் திருப்பள்ளி யெழுச்சி பூசை அன்னப்பாவாடையோடு நடைபெறும்.

தை மாதம் இரண்டாந்தேதி சிவகாமி அம்மனுக்குக் காலையில் கனு விழாவும், இரவு சுவாமிக்கு விழாவும் நடைபெறும்.

தை மாதம் பூச நட்சத்திரத்திற்குப் பத்து நாள் முன் தொடங்கி வியாக்கிரபாதர், பதஞ்சலி, சைமினி ஆகிய

மும்மூர்த்திகளையும் இரவில் எழுந்தருளச் செய்து மூன்றாம் பிராகாரத்தில் வலம் வந்து, திருமூலநாதர் திருச்சந்நிதியில் சுவாமிக்கு அர்த்தசாம தீபாராதனை செய்து, அதன் பிறகு மும்மூர்த்திகளுக்கும் தீபாராதனை செய்து, இசைக் கச்சேரிகளும் நடைபெறும்.

தைப்பூச நாளன்று காலையில் பஞ்சமூர்த்திகளும், பதஞ்சலி, வியாக்கிரபாதர், சைமினி ஆகிய மூவரும் வீதி உலா வந்து, சிவகங்கையில் தீர்த்தம் கொடுத்தருள்வார். அதன்பின்னர் நடராஜர் சந்நிதியில் — கனகசபை முழுவதும் 15-மூட்டை அரிசி தயிர்சாதப் பாவாடையுடன் தீபாராதனை நடைபெறும். பிறகு அந்த அன்னம் தீட்சதர்கள், கோயில் சிப்பந்திகள், பக்தர்கள் ஆகிய எல்லோருக்கும் கொடுக்கப்படும்.

தைப்பூசத்தில்தான் நடராஜர் ஆனந்தநடனம் செய்தருளிய நாள். அன்று இரவு பஞ்சமூர்த்தி வீதி உலா நடைபெறும்.

தை மாதம் அமாவாசைக்கு முதல்நாள் இரவு, பத்துத் தீர்த்தங்களில் முதலாவதான சிவகங்கையில் சுவாமி தீர்த்தம் கொடுத்து, உடனே அங்கிருந்து புறப்பட்டுக் கிழக்குச் சமுத்திரத்தில் தீர்த்தத்திற்குச் சென்று, அமாவாசையில் காலையில் சமுத்திரத்தீர்த்தம் கொடுத்து, பின்னர் சுற்றிலும் உள்ள புலிமடு முதலிய தீர்த்தங்களிலும் தீர்த்தம் கொடுத்து, கடைசியாகப் பரமானந்த கூபத்தில் தீர்த்தம் கொடுத்தருள்வார்.

மாசி மாதம் மகத்திற்கு முதல்நாள் இரவு சுவாமி கிள்ளைக்குப் புறப்பட்டுச் சென்று மகத்தன்று காலை சமுத்திரத் தீர்த்தம் கொடுத்தருளி, பின்னர் திரும்பி வருவார்.

மாசி மாதம் சிவராத்திரி நாளன்று, நடராஜமூர்த்திக்கு நாள்தோறும் நடைபெறுகின்ற ஆறுகாலப் பூசைகளுக்கு மேல் இரவு நான்கு கால பூசைகளும், இலட்சார்ச்சனையும், நடைபெறும். மூன்றாம் காலம் முடிந்தவுடன் விடிவதற்குச் சற்றுமுன் சுவாமி இடப வாகனத்தின் மீது புறப்பட்டு வீதி வலம் வந்தருள்வார். நான்காவது கால பூசை அர்த்த சாம பூசையாகும்.

பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்திற்குப் பத்து நாள் முன் பாண்டிய நாயகர் என்னும் வள்ளியம்மை தெய்வயானை சமேத ஆறுமுக சுப்பிரமணிய சுவாமிக்கு, கொடியேற்றி நாள்தோறும் காலைமாலை விழாவில் ஏக முக சுப்பிரமணியர் வீதி உலா வந்தருள்வார். தேர்த்திரு விழாவன்று ஆறுமுக சுப்பிரமணியர் தேர்மீதில் நான்கு வீதிகளிலும் உலாவந்தருள்வார்; கொடி இறக்கப்பட்டு வீதி வலம் வந்தருள்வார்;இரவு விழாவும் நடைபெறும்.

17 முத்துத் தாண்டவர் முக்தி

பங்குனி மாதம் சுக்கில பட்சத்தில் பிரதமையில் சுவாமி, பத்துத் தீர்த்தங்களுள் ஏழாவது தீர்த்தமான பிரமதீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருள்வார்.

தில்லைத்தலத்திலே கூத்தப்பெருமான் திருவருளால் முக்திபெற்ற பெரியோர்கள் பலர். அவர்களுள் அண்மைக் காலத்திலே ஆடற்பெருமானின் பக்தராக வாழ்ந்து முக்தி பெற்ற பெரியார்களுள் முத்துத் தாண்டவர் ஒருவர்.

முத்துத் தாண்டவர் சீர்காழியில் மேளவாத்தியக்காரர் குலத்தில் தோன்றியர். இவர் உடலை நெடுநாள் நோய் துன்புறுத்தியது. அதனால் இவர், தம் தொழிலைச் செய்ய முடியாமல் எப்பொழுதும் சீர்காழியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் தோணியப்பர் திருச்சந்நிதியில் பக்திப்பாடல்களான தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் பாடிப்பாடி அப்பெருமான் இடத்தில் அதிக அன்பு செலுத்திக் கொண்டிருந்தார்.

அவ்வாறு இருந்த அவருக்கு வருவாய் இல்லாததால், வறுமையிலும் அல்லலுற்றார்; தோணியப்பர் திருக்கோயிலிலேயே இருந்து கோயிற் பிரசாதங்களை வாங்கியே உண்டு கொண்டிருந்தார்.

அந்நிலையில் ஒருநாள் இரவு முத்துத்தாண்டவருக்குச் சரியானபடி உணவு கிடைக்கவில்லை. அதனால் அவர் பசி மிகுதியினால் களைத்துக் கோயிலினுள் பிராகாரத்திலேயே படுத்துத் தூங்கி விட்டார். கோயில் பூசைகள் முடிந்தவுடன் எவரும் அவரைக் கவனிக்காமல் கோயிற் கதவைப் பூட்டிக்கொண்டு சென்று விட்டார்கள்.

திருக்கோயிலினுள் பிராகாரத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த முத்துத் தாண்டவர், தம் உடம்பின் நோய்

காரணமாகவும், வறுமையின் காரணமாகவும், பசியின் மிகுதியினாலும் மிகுந்த களைப்புடன் தம் நிலையை நினைத்து நினைத்து வருந்தி, இறைவன்மீது பேரன்பு கொண்டு பாடிக்கொண்டிருந்தமையால், அம்மையப் பராகிய தோணியப்பரும் அம்பிகையும் வந்து திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தருளியதுபோல் இவருக்கும் ஞானப்பாலன்னம் கொடுத்தருளினர்; அவ் வாறு கொடுத்தருளியதோடு நில்லாது, ''நீ தில்லைக்குச் சென்று, அங்கு இறைவனைப் பாடு. உன் புறநோய்—உடல் நோய் நீங்குவதோடன்றி அகநோயும் நீங்கும்,'' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இதைக்கேட்டுப் பேருவகை கொண்ட முத்துத் தாண்டவர் உலக மாதாவான அம்பிகையால் ஊட்டப் பட்ட பாலன்னத்தை உட்கொண்டதால் களைப்பு நீங்கப் பெற்றார்; விழித்து உடன் எழுந்தார்; அப்போதுதான் தாம் கோயிலில் படுத்து உறங்கிவிட்டதை அறிந்தார்; இறைவன் கூறியதை எண்ணி எண்ணி ஆனந்தக் கூத் தாடினார்; ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்: பொழுது விடிந்து கோயிற்கதவு திறக்கும்வரை காத்திருந்தார்.

கோயிற்கதவு திறந்தவுடன் முத்துத் தாண்டவர் நடந்தவற்றையெல்லாம் பூசை செய்யும் குருக்களிடம் சொல்லி, நீராடி நித்தியக் கடமைகளை முடித்துக் கொண்டு தோணியப்பர் திருச்சந்நிதிக்குச் சென்று நிலத் திலே வீழ்ந்து வணங்கி எழுந்தார்; அப்பெருமான் கூறிய வாறே தில்லைக்குச் சென்று நடராஜரைப் பாடத் தமக்கு 'ஒன்றும் தெரியாதே, ஒன்றும் தெரியாதே' என்று தோணி யப்பரிடம் சொல்லிக் கொண்டு, தில்லையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

முத்துத்தாண்டவர் தில்லை சென்றடைந்தார்; சிவ கங்கைத் தீர்த்தத்தில் நீராடினார்; பின்னர் திருமூல நாதரைக் கண்டு வழிபட்டார்; தோணியப்பர் கூறியவாறு பாட வேண்டுமே, நான் எவ்வாறு பாடுவேன், என்று எண்ணி எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்,

அப்பொழுது அங்கிருந்த பக்தர்களுள் ஒருவர் ''பூலோகக் கைலாயம்'' என்று உரக்கத் தோத்திரம் செய்தார்.

அவர் அவ்வாறு தோத்திரம் செய்தது முத்துத் தாண்டவர் செவியில் பட்டது.

'பூலோகக் கைலாசம்' என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் முத்துத் தாண்டவர், தில்லைப் பெருமான் திருவருளால் ''பூலோகக் கைலாசகிரி சிதம்பரம் அல்லால் புவனத்தில் வேறுமுண்டோ?'' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார்.

இப்பாடலை முத்துத் தாண்டவர் பாடிய அளவில், உடனே இவருடைய உணவுச் செலவுக்கான படிக்காசு சுவாமியின் திருச்சந்நிதியில் கிடைத்தது.

படிக்காசு பெற்ற முத்துத் தாண்டவர் பெரிதும் மகிழ்ந்தர்ர்; தமக்குப் பெருமான் அருளிய பெருங் கருணையை எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்தார்; பாடும் படி செய்து முதல் நாளிலேயே படிக்காசு, அளித்த பெரு மான்மீது பேரன்பு கொண்டொழுகி வந்தார்.

முதல் நாள் பாடிய முறையிலேயே முத்துத் தாண்டவர் நாள் தோறும் தில்லைக் கோயிலுக்கு வந்து இருந்து, முதலில் என்ன வார்த்தை தம் காதில் படுகின்றதோ, அதனையே பாடலின் தொடக்கமாகக்

கொண்டு பாடிவந்தார். பெருமானும் அவர் பாடலுக்கு நாள்தோறும் படிக்காசு அளித்து வந்தார். பெருமானால் கொடுக்கப் பெற்ற படிக்காசினைக் கொண்டு முத்துத் தாண்டவர் செலவு செய்து வாழ்ந்தார். இவ்வாறு நாள் தோறும் நிகழ்ந்து வந்தது. முத்துத் தாண்டவர் ஒவ்வொரு நாளும் சீர்காழிக்குச் செல்வதும், மறுநாள் தில்லை வந்து பெருமானைப் பாடுவதும், படிக்காசு பெறுவதும், அதைக் கொண்டு வாழ்வதுமாக இருந்தார்.

அவ்வாறு முத்துத் தாண்டவர் வாழும் பொழுது, பெருமான் திருவருளால் அவர் தில்லைக்கு வரும்போது வழியிடையில் சிலநாள்கள் சில தடங்கல்கள் ஏற்பட்டன. அவர் அவற்றையெல்லாம் பெருமானைத் தியானித்தவாறு அகற்றிக்கொண்டு தில்லைவந்து சேர்ந்து நடராஜரைப் பாடினார்; நடராஜரைப் போற்றிப் பாடுவதையே தம் கடமையாக — அன்றாடக் கடமையாகக் — கொண்டு, தடங்கல்களை யெல்லாம் பொருட்படுத்தாது வந்து பொன்னம்பலவாணரைப் போற்றிப் பாடினார். இவ்வாறு பாடிய முத்துத்தாண்டவர் ஒரு நாள், நடராஜரைப் போற்றிப் பாடிக் கொண்டிருந்தபோதே சோதியான பரவெளியில் கலந்தார்.

இவ்வாறு நடராஜரைப் பாடியே முக்தியடைந்த முத்துத் தாண்டவர் எவ்வளவு பாட்டுக்கள் பாடினார் என்பதனை அறிய முடியவில்லை, ஆயினும், இவருடைய பாட்டுக்கள் சில அச்சு வடிவம் பெற்று ''முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்'' எனும் தலைப்பில் வெளிவந்து புகழ் பெற்றிருக்கின்றன. இவருடைய பாட்டுக்கள், பதங்கள் ஆகியவை நடனங்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

18. பிறகோயில்கள்

தில்லைத் தலத்தில் ஐந்தாம் பிராகாரமாகிய தேர்வீதியிலும், மற்றும் வெளியிலுள்ள வீதிகளிலும், எட்டுத் திக்கிலும் இந்திரன் முதலிய தேவர்களாலும், வசிட்டர் முதலிய முனிவர்களாலும், மற்றும் பெரியோர்களாலும் பிரதிட்டை செய்து பூசிக்கப்பட்டு வந்த சிவலிங்கங்களும் இருந்தன. நாளடைவில் அவற்றுள் சில சிவலிங்கங்கள் மறைந்தன. சில இடங்களில் பூமியைத் தோண்டும்போது சில இலிங்கங்கள் கிடைத்தன. சில இடங்களில் சிவலிங்கம் இருந்த கோயிலில் கணபதியோ, வேறு மூர்த்தங்களோ இப்போது உள்ளன.

தில்லைக் காளி கோயில்

முன்னொரு காலத்தில் சிவனுக்கும் சக்திக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு, இருவரும் நடனம் ஆடினார்கள். இந்நடனத்தில் சிவன் காலைத்தூக்கி ஆட, சக்தி தன் காலைத் தூக்கக்கூடாத காரணத்தால் காலைத்தூக்கி ஆடவில்லை. அதனால் சக்தி சிவனிடம் பணிய நேர்ந்தது.

சிவன் உடனே சக்தியை நோக்கி, ''நீ எலலைக்குள் இருக்கக் கூடாது'' என்றுகூறி வெளியில் இருக்க வைத்தார். அவ்வாறு தில்லைத்தலத்தில் அமைந்த அம்மன் கோயிலே, இத்தலத்தின் வடக்குப் பக்கத்தில் உள்ள தில்லைக் காளி கோயில். இக்கோயில் 'தில்லையம்மன் கோயில்' என்றும் சொல்லப்படுகின்றது.

அவ்வாறு காளியுடன் ஒரு காலைத் தூக்கி ஆடிய மூர்த்தியே, தில்லைத் திருக்கோயிலில் நடராஜரின் கொடி மரத்திற்குத் தெற்குப் பக்கத்தில் உள்ள நிருத்தசபையில் எழுந்தருளியிருக்கும் ஊர்த்துவத் தாண்டவர்.

இவ்வூர்த்துவத் தாண்டவருக்கு, வேதங்களை நன்கு அறிந்தவராகிய பிரணதார்த்திக் கனபாடிகள் என்பவர், தாம் இறக்குந்தருவாயில் செய்து வைத்த ஏற்பாட்டின் படி, வெள்ளிக்கவசம் செய்து சாத்தப்பட்டுள்ளது.

இளமையாக்கினார் கோயில்

நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு மேற்கே அமைந்துள்ளது இளமையாக்கினார் கோயில். இதன் எதிரில் உள்ள திருக்குளமே வியாக்கிரபாத தீர்த்தம் என்னும் விசேட தீர்த்தம்.

இவ்விளமையாக்கினார் கோயிலில்தான் வியாக்கிர பாதர் பூசை செய்து வந்தார். இங்குதான் திருநீலகண்ட நாயனார் முதுமை நீங்கி இளமைப் பருவம் அடைந்தார். இப்பொழுது உள்ள இளமையாக்கினார் கோயில் நாட்டுக் கோட்டை நகரத்தாரின் திருப்பணியால் சிறப்புற்று விளங்குகின்றது. பல சிறப்புப் பணிகளை நகரத்தார் செய்துள்ளனர். வெள்ளி வாகனங்கள் விலை உயர்ந்த நகைகள் செய்து வைத்துள்ளனர். பொன்னும் மணியும் பொருளும் நிவந்தமாக நிரம்ப வழங்கியுள்ளனர் நல்லறம் நாளும் வளர நக்ர்த்தார் செய்த திருப்பணிகள் பல.

பிறகோயில்கள்

தில்லைத் தலத்தில் மற்றுஞ்சில திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் கொற்றங்குடி உமாபதி சிவத்தின் கோயில், திருக்களாஞ் செடியில்—திருக்களாஞ்சேரியில்—உள்ள மறைஞான சம்பந்தர் சமாதி ஆகியவை குறிப்பிடத் தக்கவை. பக்தர்கள் இவ்விடங்களையும் கண்டு வழிபடுதல் முறை.

19. தலத்துக்குரிய நூல்கள்

தமிழகத் திருத்தலங்களிலேயே அதிகமான நூல்களாலும், பாடல்களாலும் போற்றப் பெற்ற சிவத்தலம் தில்லைத் தலமே. இத்தலத்தைப் போற்றி எழுந்த வடமொழி நூல்களும், தென்மொழி நூல்களும் பல. அவற்றை இங்கு வரிசைப்படுத்திக் காணலாம்.

தமிழ் நூல்கள்

1. தேவாரம்—11 திருப்பதிகங்கள்
2. திருவாசகம்—25 திருப்பதிகங்கள்
3. திருக்கோவையார்
4. திருமுறைகண்ட புராணம்
5. திருவிசைப்பா
6. திருப்பல்லாண்டு
7. திருமந்திரம்—சில மந்திரங்கள்
8. கோயில் நான்மணிமாலை
9. கோயில் திருப்பண்ணியர் விருத்தங்கள்
10. பெரிய புராணம்
11. சிதம்பர மும்மணிக்கோவை
12. சிதம்பரச் செய்யுட்கோவை
13. சிவகாமி அம்மை இரட்டைமணிமாலை
14. தில்லைக் கலம்பகம்
15. தில்லையுலா
16. மூவருலா.
17. தில்லை யமகவந்தாதி

18. சிதம்பர வெண்பா
19. சிதம்பர சபாநாத புராணம்
20. கோயிற் புராணம்
21. பாண்டியநாயக முருகன்பிள்ளைத் தமிழ்
22. புலியூர் வெண்பா
23. நடேசர் திருவருட்பா
24. நடராச சதகம்
25. நடராஜர் திருப்புகழ்
26. சிவகாமியம்மைப் பிள்ளைத் தமிழ்
27. சேக்கிழார் புராணம்
28. சிவகாமியம்மைப் பதிகம்
29. தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி
30. தில்லை நவமணிமாலை
31. சிதம்பர விலாசம்
32. பரமரகசிய மாலை
33. திருவருட்பா
34. தில்லைத் திருவாயிரம்
35. புலியூர்ப் புராணம்
36. சிதம்பர புராணம்
37. நடராஜர் காவடிச்சிந்து
38. நடராஜப் பத்து
39. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை
40. சிதம்பரப் பாட்டியல்
41 முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்

வடமொழி நூல்கள்

1 கைவல்லிய உபநிஷத்து
2. சாந்தோக்கிய உபநிஷத்து
3. தைத்திரீய உபநிஷத்து
4. சுவேதாசுவதரோபநிஷத்து
5. பிருகதாரண்யக உபநிஷத்து
6. தில்லைவன மான்மியம்
7. புலியூர் மான்மியம்
8. வியாக்கிரபுர மான்மியம்
9. புண்டரிகபுர மான்மியம்
10. ஹேமசபாநாத மான்மியம்
11. சிதம்பர மான்மியம்
12. சித்சபா பிரதிஷ்டா மான்மியம்
13. சிதம்பர ரகஸ்யம்
14. சிதம்பர ரகசிய மந்திர உபாசனாகற்பம்
15. சம்மேளனப் பிரஸ்தாரம்
16. ரகசியப் பிரணவப்ரகார லட்சணம்
17. மகா ரகசியஸ்தான லட்சணம்
18. ஆகாச பைரவ கற்பம்
19. சிதம்பர பஞ்சாட்சர கற்பம்
20. சிதம்பர கற்பம்
21. சிந்தாமணி மந்திரம்
22. சித்சபா கைங்கர்யஸ்வ தந்திரசக்தி
23. சித்சபா சம்புரோட்சண கற்பம்

24. சித்சபா சம்புரோட்சண சூத்திரம்
25. சித்சபா சம்புரோட்சண கவிதை
26. சித்சபா சம்புரோட்சண பாஷ்யம்
27. நடராஜ சகஸ்ரநாம தோத்திரம்
28. சிதம்பர கவசம்
29, சிதம்பர தீட்சித தோத்திரம்
30. சிதம்பராஷ்டகம்
31. நடேசாஷ்டகம்
32. நடேச தோத்திரம்
33. நடேச சிந்தாமணி
34. நடராஜ திக்பந்தனம்
35. சிதானந்தாஷ்டக தோத்திரம்
36. சிதம்பரேஸ்வர அஷ்டகம்
37. சிதம்பரேஸ்வர புஜங்காஷ்டகம்
38. சிதானந்த சாரம்
39. நடேச விஜயம்
40. பதஞ்சலி சரித்திரம்
41. சபாபதி விலாச நாடகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து நேர்கிழக்கில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது அண்ணா மலைநகர், தென்னிந்தியாவின் அறிவு ஊற்று, ஆற்றல் பண்ணை, நான்காம் தமிழ்ச் சங்கம் என அறிஞரால் பாராட்டப் பெற்றது, கற்றோர் உறையும் இவ்விடம் கவின்மிகு கலைகளின் இருப்பிடம்.

திருவேட்களம்:

அண்ணாமலை நகரின் பழமையான பெயர் திருவேட் களம். திருவேட்களம் தேவார ஆசிரியர் இருவரால் பாடப்பெற்ற பழம்பதி. இந்நகர் அண்மையில் அமைந் துள்ள தில்லையம்பதியுடன் நெருங்கிய வரலாற்றுத் தொடர்புடையது. செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் (கி. பி. 1881-1948) இங்குக் கல்வி நிலையங்களை நிறுவிய காரணத்தால் இது அவர்தம் பெயரால் அண்ணாமலை நகர் எனப் பெயர் பெற்றுத் திகழ்கிறது.

பாசுபதத்தலம்:

திருவேட்களத்தில் எழுந்தருளியுள்ள இறைவர் பாசு பதேசுவரர். இறைவி நல்ல நாயகி. மூவர் பதிகம் பெற்ற சிவத் திருப்பதிகள் இருநூற்று எழுபத்து நான்கு. அவற்றுள் திருவேட்களத் தலமும் ஒன்று. இது தொடக்கத் தில் சிதம்பரம் எல்லையிலிருந்து கிழக்கில் சித்தர்பாடி எல்லைவரை அமைந்திருந்த தில்லைவனத்தின் நடுவில் சிவன் எழுந்தருளிய தலமாக இருந்தது. இதன் தலமரம் மூங்கில். திருவேட்களம் கடற்கரைத் தலங்கள் இருபத் தெட்டில் ஒன்று. திரு வேள்களம் எனக் கொண்டு திருமகள் விரும்பி உறையும் இடம் எனவும், வேளிர் குலத்தவர் ஆண்ட இடம் எனவும், சிறந்த வேள்வி நடைபெற்ற இடமெனவும் பலவாறு பொருள் கூறுகின்றனர். அருச்சுன னுக்குப் பாசுபதம் அளித்த தலம் அது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோற்றம்:

அப்பராலும், சம்பந்தராலும் பாடப்பெற்ற அரிய தலம் திருவேட்களம். கல்விப் பெருநிலையம் ஒன்றை அமைக்க எண்ணிய அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பல இடங்களையும் பார்வையிட்டு வந்தபோது ஓரிடத்தில் கருடன் வட்டமிட்டது. அதனைக் கண்டதும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மீனாட்சி கல்லூரியை முதன்முதலாக நிறுவினார்.

1920 ஆம் ஆண்டு தொடங்கிக் கல்லூரிக் கட்டிடங்கள் கட்டப்பெற்றன. முதலில் கட்டிய கட்டிடம் மீனாட்சி கல்லூரி. அதற்குப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் முதல்வராக நியமனம் பெற்றார். முதலில் தமிழ், பொருளாதாரம் ஆகிய வகுப்புகள் நடந்து வந்தன. மேலும் பல கல்லூரிகள் தொடங்கப் பெற்றன. மணல் வெளியாகவும், தோப்பும், பனைமரங்களும் அடர்ந்த காடாகவும் இருந்த இடங்களில் அழகு மிக்க கட்டிடங்கள் பல எழுந்தன. உடனடியாக பி. ஏ. வகுப்புக்கள் தொடங்கின. 1931 இல் ஆனர்ஸ் வகுப்புகள் தொடங்கப் பெற்றன. சென்னை, ஆந்திரா பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் எம்.ஏ வகுப்பு தொடங்குவதற்கு முன்னமே இங்கு அது தொடங்கப் பெற்றது. இன்று 750 ஏக்கர் பரப்பில் விரிந்து பரந்திருக்கும் இந்நிறுவனம் கல்வி நிலையம் எனப் போற்றப் பெறும் பெருமை உடையது, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வித் தரம் விரும்பி வருவோருக்குக் கவின் மிகு கலைக்கூடம். தென்னிந்தியக் கல்வி வரலாற்றில் இதற்கொரு சிறப்பிடம் என்றும் உண்டு.

இணை வேந்தர்

தமிழிசைக் காவலர் டாக்டர் முத்தையவேள் இணை வேந்தராக அமைந்து இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக

நின்றார்கள். கண்ணினைக் காக்கும் இமைபோல் இதைக் காத்தார்கள்; நாற்பதாண்டுகள் இதற்கு வலிவும் பொலிவும் சேர்த்தார்கள்; புவியில் முதன்மை அடையச் செய்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவர்கள் மகனார் உயர்திரு டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் இணை வேந்தராகத் திகழ்கிறார்கள். திட்டமிடுதல், முடிவெடுத்தல், வினை முடித்தல் மூன்றிலும் இவர்கள் வல்லவர்கள்'; எடுத்த காரியம் யாவினும் வெற்றி குவிப்பவர்கள்.

துணை வேந்தர்:

பொறியியலறிஞரும், திட்டமிடுவதில் வல்லவரும், செயல்திறமிக்கவருமான இராம. சேது நாராயணன் அவர்கள் துணைவேந்தராகத் திகழ்கிறார்கள். அறுபதாண்டு வரலாற்றில் இப்பொழுதுதான் இப்பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் துணைவேந்தராகிறார். இப் பல்கலைக்கழகத்தில் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த முதல் துணைவேந்தரும் இவரேயாவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு:

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்று இந்தியாவிலேயே புகழ்பெற்ற மாபெரும் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளது. உயர்திரு. எஸ். ஈ. அரங்கநாதன், ஆர். கே. சண்முகம் செட்டியார், வி. எஸ். சீநிவாச சாஸ்திரியார், சர் சி. பி. இராமசாமி ஐயர், டாக்டர் மணவாள இராமானுசம், டாக்டர் சந்திரசேகர் போன்ற அறிஞர் பெருமக்கள் துணைவேந்தர்களாக இதன் பெருமையை உயர்த்தியுள்ளனர்.

தமிழ்க்கல்லூரி, இசைக்கல்லூரி, வடமொழிக் கல்லூரி, கலைக்கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி செவிலியர் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, ஆசிரியப்

பயிற்சிக் கல்லூரி, கதிர் வெப்ப ஆய்வகம் போன்ற பல துறைகள் இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அளவிலாப் பெருமையைச் சேர்க்கின்றன. சிறப்பாகத் தமிழ்ப்பணி புரிந்து வந்தமையால் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்றே அறிஞர்கள் அழைத்து வருகின்றனர். தமிழ் உணர்வுக்கு வித்திட்டது இக்கழகம்.

யாழ்நூல் வகுத்த இசைஅறிஞர் விபுலானந்தர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், நாவலர் சோம சுந்தர பாரதியார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, அ. சிதம்பரநாதச் செட்டியார், தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை வ. சுப. மாணிக்கனார் போன்ற தமிழ் அறிஞர்கள் தம் சீரிய பணியால் சிறப்புப் பெற்றது தமிழ் இயல் துறை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கெனக் குறிப் பிடத்தக்க சில தனிச்சிறப்புக்கள் உள. இப்பல்கலைக் கழகத்தைச் சுற்றியுள்ள 50 கி.மீ. தொலைவு வரை உள்ள பல ஊர்களிலிருந்து ஆயிரக் கணக்கான மாணவர்கள் நாள் தோறும் இரயில் மூலம் வந்து கல்வி பயில வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இக்கழகம் ஏழை எளியவர்கட்கும் கிராம மக்களுக்கும் கல்வி ஊட்டும் அமுதசுரபி. பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கட்கு உரிய அரணாகவும், தன் மான உணர்வை ஊட்டும் பண்ணையாகவும் இப்பல் கலைக் கழகம் வரலாற்றில் நிலைபெற்றுள்ளது.

இயற்கைச் சூழல்

சிதம்பரம் நகரை அடுத்துள்ள இப்பல்கலைக்கழகம் கிராமியச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. புகைத்துகள், செம்மண் புழுதி, கொசுக்கடி போன்ற தொல்லைகள் அற்ற

குளிர் பூஞ்சோலையாக இவ்விடம் திகழ்கின்றது. எங்கும் பசிய புல்வெளிகள், மலர்கள், சோலைகள் சூழ்ந்தது இந்தக் கல்விச் சூழல்!

உடனுறை பல்கலைக்கழகம்

ஆசிரியர், பேராசிரியர், அலுவலர்கள் போன்ற அனைவரும் தங்க இல்லங்கள் வழங்கப் பெற்றுள்ளன. மாணவர்கள் தங்கிப் பயில வசதியான விடுதிகள் கட்டப் பெற்றுள்ளன. இவற்றில் 4,000 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். 3000-க்கு மேற்பட்ட மாணவர்கள் வெளியூர்களிலிருந்து வந்து கற்கின்றனர். விடுதிகளுக்கு மல்லிகை, தென்றல், முல்லை, திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், திரு. வி. க போன்ற தமிழ்ப் பெயர்கள் வைக்கப் பட்டுள்ளமை தனிச் சிறப்பாகும்.

இசைக் கல்லூரி

இங்குள்ள இசைக் கல்லூரி பெரும் புகழ் பெற்றது. மறைந்த மாமேதை சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை, இசையரசு தண்டபாணி தேசிகர் போன்றவர்கள் இங்கு தமிழிசைக்கும் கர்நாடக இசைக்கும் புத்துயிரளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழிசைக்குத் தனி இயக்கம் கண்ட அண்ணாமலை அரசரின் உயிர் மூச்சாகத் திகழ்வது இவ்விசைக் கல்லூரி. இது சாதனை பல புரிந்த மேதை களைப் பேராசிரியர்களாகக் கொண்டது. இது தமிழ் இசையின் வளர்ப்புப் பண்ணை.

விருந்தினர் விடுதி

இங்கு விருந்தினர் விடுதி ஒன்று சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நாட்டின் எப்பகுதியிலிருந்து வரும் பெரு மக்களும் இங்கு வசதியாகத் தங்கி மகிழ்வர். உணவு வசதியும் சிறந்த உறையுளும் கனிந்த வரவேற்பும் இதன் தனிச் சிறப்பு.

கடல்வாழ் உயிரின ஆய்வகம்

இப்பல்கலைக் கழகத்தின் சார்பில் பரங்கிப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள "மரீன் பயாலஜி" உலக அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இங்குக் கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு நாட்டிற்கு நற்பயன் நல்கி வருகின்றன. மத்திய அரசு இதனை முதன்மை ஆய்வகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மொழியியல் உயராய்வுத்துறை

வெள்ளி விழாவின்போது தொடங்கப் பெற்ற இத்துறை, பொன்விழா நேரத்தில் உலகிலே மிகச்சிறந்த மொழியியல் ஆராய்ச்சி மையமாகத் திகழ்கின்றது. இத்துறையில் வெளி வந்த நூல்கள் அறிஞர் பெருமக்களால் பாராட்டுப் பெற்றவை. இந்தியாவிலுள்ள ஒரே உயராய்வுத் துறை இஃது ஒன்றுதான்.

மருத்துவக் கல்லூரி

அண்மைக் காலத்தில் பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர்பள்ளி நாளும் வளர்ந்து வருகின்றன. மிகச் சிறந்த மருத்துவக் கல்லூரியும் அண்மையில் தொடங்கப் பெற்றது. அது செவ்விய முறையில் நடைபெற்று வருகின்றது. ஐரோப்பியநாடுகளைப் போல மிகப் பெரிய அளவில் வனப்புமிகு மாளிகைகள் கட்டப் பெற்றுள்ளன. கண்கவர் தோற்றத்துடன் சிறந்த வேலைப் பாடுடன் அமைந்தது. அரண்மனை அமைப்பில மாபெரும் மாளிகை செங்கோட்டை போல் செம்மாந்து ஒளிர்கிறது, மருத்துவ உலகிற்கோர் புதுமை. தமிழகத்திற்கோர் பெருமை.

அஞ்சல் வழிக் கல்வி

அஞ்சல் வழிக்கல்வி ஆற்றல்மிகு நிறுவனமாக வளர்ந்து வருகிறது. தனக்கென அமைந்த தனிக்கட்டிடத்தில்

சிறப்புடன் விளங்குகிறது. இதன் ஆசிரியர்கள் கங்கையைப் போல் காவிரியைப்போல் கருத்தூற்றெடுக்கும் ஆசிரியப் பெருமக்கள் ஆவர்.

பட்டமளிப்பு விழா மண்டபம்

இங்குள்ள பட்டமளிப்புவிழா மண்டபம் மிக அழகான மா மன்றம். இடைத்தடுப்பு இல்லாமல் பேரழகுடனும், 2000 பேர் உட்காரும் இடவசதியுடனும் அமைந்துள்ள எழிலான மன்றம். பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு இங்குதான் பட்டங்கள் வழங்கப் பெறுகின்றன. இதன் முதல் மாடியில் பல்கலைக்கழகத் தலைமைச் செயலகம் இயங்கி வருகின்றது. இதன் உச்சியில் அமைந்த மணிக்கூண்டு பல்கலைக்கழகக் கலங்கரை விளக்கம் போல் அழகுடன் இயங்குகிறது.

மிகப்பெரிய நூலகம்

தமிழ் நாட்டில் உள்ள பெரியநூல் நிலையங்களுள் அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல்நிலையம் தனிச்சிறப்புடையது. மிகப்பெரிய கட்டிடத்துள் அமைந்துள்ளது. இதில் பல்வேறு துறைகளையும் சார்ந்த 3,00,000 [மூன்று நூறாயிரம் நூல்கள்] இடம் பெற்றுள்ளன. மிகப்பழைய நூல்கள், அரிய நூல்களின் புத்தம் புதிய பதிப்புகள் ஆகியன பேணிக்காக்கப்பெறும் அறிவாலயமாய்த் திகழ்கிறது.

பாசுபதேசுவரர் கோயில்

அண்ணாமலை நகரில் கலை எழிலோடு ஒளிர்வது பாசுபதேசுவரர் கோயில். இந்நகருக்கு வருகை புரிவோர் இக் கோயிலை வழிபட்டு அருள்பெறுவர். சுற்றிலும் பூங்காவும், எதிரில் தென்னை மரங்களும் சூழ்ந்த திருக்குளம் அமைந்த கற்றளி இது. இதன்முன் உள்ள அரசமர நிழலில்—மேடையில்—அமர்ந்து விட்டால் எழுவதற்கே

மனம் வராது! அருச்சுனனுக்கு வேடவடிவாக வந்து பாசுபதம் வழங்கிய இறைவன் வேட உருவுடன் நல்ல நாயகியோடு இங்குக் காட்சி தருகின்றார். பாரதத்தில் இடம் பெற்றுள்ள இவ்விழா ஆண்டிற்கொரு முறை இங்கு நடைபெற்று வருகின்றது.

அறிவாலயம், ஞானபூமி என நாடுபோற்றும் கல்வி நிறுவனம் நம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்! அரசர் முத்தையவேள் அவர்கள் கண்ணை இமை காப்பது போல இதனைக்காத்து வந்தார்கள். வளர்க அவர்புகழ்!

> "தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்
> அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—எல்லைக்கண்
> அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
> கண்ணாரக் கண்டு களித்து."

என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை எண்ணி எண்ணி மகிழ்ந்தது போல் நாமும் உளம் மகிழ்வோம். அறிவு நலம் பெறுவோம்!!

அண்மையில் உள்ள புண்ணியத்தலங்கள்

சீர்காழி

'காழி' என்று கூறியவுடனே' நம் நினைவில் தோன்றுபவர் காழிப் பிள்ளையாரான சம்பந்தர். ஆம், சம்பந்தர் அவதாரம் செய்த திருத்தலமே சீர்காழி!

சிதம்பரத்திற்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள — பாடல் பெற்ற—பழம்பதி சீர்காழி. இங்குள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள நாதர் தோணியப்பர். நடைபெறும் திருவிழாக்களுள் சிறப்பு வாய்ந்தது திருமுலைப்பால் உற்சவம்.

சீர்காழியில் சிவபாத இருதயரது புதல்வராகப் பகவதி அம்மையார் வயிற்றில் பிறந்தார் திருஞானசம்பந்தர். மூன்றுவயது பாலகனாக இருந்தபோது ஒரு நாள் நீராடச் சென்ற தந்தையுடன் தாமும் சென்றார். தந்தை குளத்தில் நீராடிக் கொண்டிருக்கும்போது கரையில் இருந்த சம்பந்தர் பசியினால் அழுதார். அவ்வழுகுரலைக் கேட்ட இறைவனாகிய தோணியப்பரும், அன்னை பெரிய நாயகியும் அங்குத் தோன்றினர். அன்னை தம் திருமுலைப் பாலைக் கறந்து அதில் சிவஞானத்தையும் கலந்து குழந்தைக்கு ஊட்டிவிட்டு மறைந்தருளினார்.

கரையேறி வந்த தந்தை, குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டு 'யார் கொடுத்த பாலைக் குடித்தாய்?' என அதட்டிக் கேட்டபோது அருள்ஞானம் பெற்ற அக் குழந்தை 'அதோ'! என வான வெளியைச் சுட்டிக்காட்டி,

"தோடுடைய செவியன் விடை ஏறிஓர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசிஎன்
உள்ளங் கவர்கள்வன்;
ஏடுடைய மலரான் முனை நாள்பணிந்
தேத்த வருள் செய்த
பீடுடைய பிர மாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே."

எனப் பாடியது. தன் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டியவள் இறைவி என்பதுணர்ந்த சிவபாத இருதயர் மகிழ்ந்து பலவாறு போற்றி வணங்கித் துதித்தார். இந்நிகழ்ச்சியே திருமுலைப்பால் உற்சவமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சீர்காழிக்குத் தோணிபுரம், பிரமபுரம், வேணிபுரம், புகலி, வெங்குரு, கழுமலம் முதலான பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

சீர்காழி கோயில் மதில்களையும், கோபுரங்களையும் கொண்டதொரு பெரிய கோயில். அக்கோயில் சட்டநாத சுவாமி தேவஸ்தானம் என வழங்கப்படுகின்றது. இறைவனுக்குப் பூசை வேளையில் புனுகுச் சட்டம் சார்த்தப்படுவதால் 'சட்டநாதர்' என அவரை வழங்கிவருகின்றனர்.

இக் கோயில் தருமபுர ஆதீனத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. 1400 ஏக்கர் நன்செய் நிலங்களும், 300 ஏக்கர் புன்செய் நிலங்களும், ஆண்டொன்றுக்கு அரசினர் தரும் தஸ்திக் ரூ 2479-ம் இத் தேவஸ்தானத்திற்குரிய சொத்துக்கள். எனவே இங்கு ஆறுகால பூசையும், திரு விழாக்களும் குறைவின்றி நடந்து வருகின்றன.

கோவில்கள் அமைப்பு

ஆதீன மேற்பார்வையில் உள்ள கோயிலாதலால் இது மிகவும் தூய்மையாகத் திகழ்கின்றது. இக் கோயிலில் மூன்று பகுதிகள் உண்டு. பெரிய பகுதியில் தோணியப்பர், சட்டநாதர் சந்நிதிகள் உள்ளன. வடக்குப் பகுதியில் திருநிலைநாயகி கோயிலும், அதன்முன் பிரம தீர்த்தமும் அமைந்துள்ளன. இத்தீர்த்தக் கரையில்தான் சம்பந்தர் ஞானப்பால் உண்டது. இரண்டு கோயில்களுக்கும் இடையில் மேல்கோடியில் திருஞான சம்பந்தருக்குத் தனிக்கோயில் உண்டு.

கோயிலில் நுழைந்து ஆஸ்தான மண்டபத்தைக் கடந்து கருவறையை அடைந்தால் இலிங்க வடிவில் எழுந்தருளியிருக்கும் பிரும்மபுரீசுவரரைக் கண்டு தொழலாம். இவருக்கு வலப்பக்கத்தில் மகாமண்டபத்தில்

ஞானசம்பந்தர் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். இவர் சிறு பாலகன் ஆதலால் பட்டாடை உடுத்தி, வயிர அணிகலன்கள் பூண்டு அலங்காரத்துடன் காட்சியளிப்பார். ஆடை அணிகலன்களை எடுத்துவிட்டால் பால்வடியும் முகத்துடன் கூடிய சிறு பிள்ளையின் உருவைக் காணலாம். பிள்ளையின் கையில் வழக்கமாக இருக்க வேண்டிய பொற்றாளம் இராது. இடது கையில் ஞானப் பால் உண்ட சிறு கிண்ணம் இருக்கும். வலது கை தோடுடைய செவியனாகிய தோணிபுரத்தானைச் சுட்டிக் காட்டும்.

கோயிலின் மேற்புறம் கட்டுமலை ஒன்று உள்ளது. அதில் ஏறிச் சென்றால் மலைமீது குருமூர்த்தமான தோணியப்பர் பெரியநாயகி சமேதராகக் காட்சி தருவார். அவருக்கும் மேல் தளத்தில் மலை உச்சியில் தென்திசையை நோக்கிய வண்ணம் சட்டநாதர் நிற்கின்றார். தோணியப்பர், சட்டநாதர் இருவர் திருமேனிகளும் சுதையாலானவை.

உலகைச் சுற்றிக் கிடக்கும் பெருங்கடல் ஊழிக் காலத்தில் பொங்கி எழுந்து அண்டத்தையே அழித்த போது உமாமகேசுவரர் பிரணவத்தையே தோணியாகக் கொண்டு கடலில் மிதந்து வந்தார். வந்தவர் இத்தலத்தில் தங்கி 'தோணியப்பர்' என வழங்கப்பட்டார்.

இரணியன் உயிரைக் குடித்த நரசிங்கம் தன் முனைப் பால் அகங்கரித்துத் திரிந்தபோது அதனை அடர்த்து அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் தரித்த வடுகநாதரே 'சட்டைநாதர்' என்ற பெயருடன் விளங்குகின்றார் எனத் தலவரலாறு கூறுகின்றது. இதே சட்டைநாதர் 'முத்துச் சட்டைநாதர்' என்ற பெயரோடும், வலம்புரி மண்டபத்தில் அட்டபைரவர் உருவத்தோடும் விளங்குகின்றார்.

இத்தலத்திற்கு அப்பர் வந்திருக்கின்றார். சுந்தரர் வந்த போதிலும் இத்தலத்தின் புனிதத் தன்மையை உணர்ந்து இதை மிதிக்க அஞ்சி எட்டநின்றே பார்த்துவிட்டுத் திரும்பி விட்டார்.

இக் கோயிலில் 47 கல்வெட்டுகள் உள்ளன. சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள், வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டுக்கள், கிருஷ்ண தேவராயர் கல்வெட்டுக்கள் ஆகியவை உள்ளன. இவற்றில் ''இராசராச வள நாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேசம் திருக்கழுமலம்'' என இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. அக்காலப் பழக்க வழக்கங்கள், நில அளவை முறைகள், தலம், மூர்த்தி ஆகியவற்றின் அமைப்புகள், கோயிலுக்கு மன்னர்கள் அளித்துள்ள நிவந்தங்கள் முதலியன பற்றிய செய்திகள் இக்கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன.

திருஞான சம்பந்தரின் திருமணக் கோல உருவம் இக் கோயிலில் உள்ளது.

வைத்தீஸ்வரன் கோயில்

"...மந்திரமும் தந்திரமும் மருந்து மாகி
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீஎழத்திண் சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே."

என அப்பரடிகளால் உருகிப் பாடப்பெற்ற உன்னதத் திருத்தலம் புள்ளிருக்கு வேளூர்.

''புள்ளிருக்கு வேளூர்' என்றால் இன்று எவருக்கும் புரிவதில்லை. 'வைத்தீசுவரன் கோயில், என்று கூறினால் சிறுவர்கள்கூட அறிந்து கொள்வார்கள்.

'வைத்தீசுவரன் கோயில்' எனப்படும் புள்ளிருக்கு வேளூர் சிதம்பரத்திற்குத் தெற்கே 22 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தேவார ஆசிரியர்களாலும், குமர குருபரர் போன்ற அருட்கவிஞர்களாலும் பாடப் பெற்ற அழகிய தலம் இது.

வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவர் வைத்தியநாதர். மக்களது பிறவிப் பிணியை நீக்கி மனநோய் தீர்க்கும் மருத்துவராக விளங்குவதால் இவர் 'வைத்தியநாதர்' எனப் பெயர் பெற்றார். தீரா நோய் தீர்த்தருளும் பிறவிப் பிணி மருத்துவர் இவர்.

தென்னக இரயில்வேயில் மயிலாடுதுறைக்கும் சீர்காழிக்கும் இடையில் அமைந்துள்ள இத்தலக் கோயில் தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. ஆதீனக் கோயில்கள் அனைத்திலும் பெரியது; பொருள் வளம் உடையது; பண்டைச் சிறப்பும் இலக்கியப் புகழும் படைத்தது; 6105 ஏக்கர் நன்செய் நிலமும், 1176 ஏக்கர் புன்செய் நிலமும், பலநூறாயிரம் ரூபாய் மதிப்புள்ள அணிகலன்களும் பெற்றுள்ளது.

பெயர்க் காரணம்

'புள்ளிருக்கு வேளூர்' என்பது காரணப்பெயர். 'புள்' ஆகிய சடாயுவும், 'இருக்கு' எனப்படும் ருக் வேதமும், வேள் எனப்படும் முருகனும், ஊர் எனப்படும் சூரியனும் பூசித்த தலமாதலின் இது புள்ளிருக்கு வேளூர் எனப் பட்டது. இதற்கேற்ற வகையில் இக் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் சடாயு குண்டம் இருக்கிறது.

திருச்சாத் துருண்டை

கோயிலின் வெளிப் பிராகாரத்தில் வேப்பமரத்தடியில் ஆதி வைத்தியநாதர் அமர்ந்திருக்கிறார். ஆனால், திருச்

சாத்துருண்டை நல்கி மக்களின் தீரா நோய்களைத் தீர்த்தருளும் வைத்தியநாதர் கோயிலின் உள்ளே கர்ப்பக் கிரகத்தில் வீற்றிருக்கின்றார். நோய்தீர்க்கும் மருந்தாகிய திருச்சாத்துருண்டை பெற விரும்புகின்றவர்கள் சுக்கில பட்சத்து நல்லோரையில் அங்குள்ள சந்தான தீர்த்தத்தில் நீராடி அதிலுள்ள மண்ணில் சிறிது எடுத்து புதுப் பாத் திரத்தில் வைத்துக் கோயிலினுள் நுழைந்து விபூதி குண்ட லத்திலுள்ள விபூதியையும், சித்தாமிர்தத் தீர்த்தத்தின் நீரையும் கலந்து பிசைந்து முத்துக்குமரப் பெருமான் சந் நிதிக்கு முன்புள்ள குழி அம்மியில் இட்டு அரைத்து மிளகு அளவுள்ள உருண்டைகளாக உருட்டித் தையல்நாயகி அம்மன் திருமுன் வைத்து அர்ச்சனை செய்து எடுத்துப் போய் உண்ண வேண்டும். உண்டால் தீராத பிணிகள் தீருமென்பது இன்று வரை நிலவி வரும் நம்பிக்கை!

'வைத்தீசுவரன் கோயில்' இரயில் நிலையத்தில் இறங் கிக் கிழக்கு நோக்கி 1. கி. மீட்டர் நடந்தால் தெற்கு ரத வீதியை அடையலாம். அங்கே கோயில் காட்சி தரு கின்றது. கோயிலின் கிழக்கிலும் மேற்கிலும் பெரிய கோபுரங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. இரண்டின் வழியாக வும் கோயிலினுள் நுழையலாம் எனினும் கீழைக் கோபுர வழியாகப் புகுவதே முறைமை.

உள்புகுந்ததும் அங்குள்ள வெளியை அடைத்துக் கொண்டு தழைத்து நிற்கும் வேம்படியில் அமர்ந்திருக்கும் ஆதி வைத்திய நாதரைக் காணலாம். அம்மரமே இங்குத் தல விருட்சம். இவ்விடம் 'வேம்படி மால்' என வழங்கப் படுகிறது.

உள்ளே புகுந்து சடாயு குண்டத்தின் வழியாகச் செல் லும் போது அங்காரகன் என்னும் செவ்வாய்க் கிரகத்தின் உற்சவ மூர்த்தத்தைக் காணலாம். செவ்வாய்க் கிழமை

யன்று இங்குச் சிறப்பான அலங்காரமும் பூசைகளும் உண்டு. சூரியனுக்கும் அங்காரகனுக்கும் தனித்தனி சந்நிதி உண்டு. மற்ற ஏழு கிரகங்களும் கைகட்டி வாய் பொத்தி வரிசையாகக் கீழைத் திருமாளிகைப் பகுதியில் நின்று கொண்டிருக்கின்றனர்.

இவர்களைத் தரிசித்துக் கொண்டே நடந்தால் அருள் பாலிக்கும் அம்மை தையல்நாயகியின் சந்நிதியை அடையலாம். கரும்புருவச்சிலை, கயல் வடிவ விழி, வள்ளைவார் காது, முல்லை இளநகை, செங்கனி வாய், ஆரண நூபுரம் ஒலிக்கும் மலரடி இவற்றுடன் கூடிய அழகிய வடிவம் கொண்டவளே தையல்நாயகி.

இவ்வம்பிகையை வணங்கிவிட்டு வடக்கு நோக்கிச் சென்றால் சண்முகர் சந்நிதியை ஆடையலாம். சண்முகன் உற்சவமூர்த்தமே செல்வ முத்துக் குமாரர். இக்காலத்தில் இச்சந்நிதி பெரும்புகழ் பெற்றுள்ளது. வைத்திய நாதரை விட முத்துக் குமாரர்தான் கண்கண்ட கலியுக வரதர்! ஒவ்வொரு திங்களிலும் கார்த்திகை நாளன்று நடைபெறும் சந்தனக் காப்பு அலங்காரத்தைக் காண இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து மக்கள் திரண்டு வருகின்றனர். முத்துக் குமரனுக் கென்றே பிள்ளைத்தமிழ் ஒன்றைப் பாடிப் பரவினார் குமரகுருபர அடிகள்.

கல்வெட்டுக்கள்

இக்கோயில் பெருங் கோயில் ஆனதால் சுற்றுப்பிராகாரங்களில் எண்ணற்ற மூர்த்திகள் கோயில் கொண்டுள்ளனர். இவற்றில் எட்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில சிதைந்துள்ளன.

இக்கல் வெட்டுக்களுள் குறிப்பிடத்தக்கது கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆட்சி செய்த விக்கிரம சோழன் காலத்தது. முதற்குலோத்துங்க சோழன் மகன்

இவன். இவனைப் பற்றிய மெய்க்கீர்த்தி ஒன்று சிறப்பாக வடிக்கப் பெற்றுள்ளது.

வீரராசேந்திர பாண்டியன் காலத்திய கல்வெட்டொன்றில் திரு அம்பல முடையானான தொண்டைமானால் திருப்புள்ளிருக்கு வேளூர் நாயகனுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும் அச்சுதப்ப நாயக்கர் துளஜாமகாராசா முதலியவர்கள் இக்கோயிலுக்கு அளித்த நிபந்தங்களைக் குறிக்கும் கல்வெட்டுகளும் இங்குண்டு.

சித்தாமிர்தத் தீர்த்தம்

கோயிலின் தெற்கு வெளிப் பிராகாரத்தை அடுத்துச் 'சித்தாமிர்தத் தீர்த்தம்' என்ற குளம் உள்ளது. இதில் நீராடுவோர் உடற்பிணியும் உள்ளப் பிணியும் நீங்கி நல்வாழ்வு பெறுவர். காமதேனு பொழிந்த பால் இத்தடாகத்தில் நிரம்பியதெனவும், சித்தர் கணத்தர் இறைவன் திருமுடியில் கொட்டிய தேவாமிர்தமே இதில் நிறைந்துள்ளதெனவும் கூறுவர். இத்தடாகத்தில ஒரு தனிச் சிறப்பு உண்டு. பாம்பும் தவளையும் இதில் வசிப்பதில்லை. உடலில் தோன்றிய பருக்கள் கட்டிகள் கரைவதற்காக வேண்டுதல் செய்து கொண்டவர்கள் இக்குளத்தில் வெல்லம், உப்பு முதலியவற்றைக் கரைக்கின்றனர். இதில் நீராடிய பின்னரே கர்ப்பக் கிரகத்தை அடைந்து வைத்தியநாதனை வணங்க வேண்டுமென்பது முறைமை.

வடலூர்

'வருவார் அழைத்துவாடி-வடலூர் வடதிசைக்கே' என வள்ளலாரால் பாடப்பெற்ற சிறந்த தலம் வடலூர். சிதம்பரத்திற்கு வடமேற்கில் 25 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வடலூர் 'உத்தர ஞான சிதம்பரம்' எனப் பெயர் பெற்று வழங்குகின்றது.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய தவத்திரு இராமலிங்க வள்ளலார் வடலூரில் சத்தியஞான சபை ஒன்றை நிறுவிச் சைவ சமரச சன்மார்க்கக் கொள்கையைப் பரப்பினார்; சமயத்துறையில் பொதுமை நெறி காணும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுப் பல அரிய பணிகளை ஆற்றினார். அது முதற்கொண்டு மிகச்சிறிய பட்டியாக இருந்த வடலூர் புகழ் பெற்றுப் பாரத நாடு முழுமையும் அறியத்தக்க தலமாகச் செல்வாக்குப் பெறலாயிற்று.

கி.பி. 1823 ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாளில் வடலூரை அடுத்துள்ள மருதூரில் பிறந்தார் இராமலிங்க வள்ளலார். 443 நூற்பிரிவுகளுள் அடக்கப்பட்ட 8135 அரும் பாடல்களும், தமது சமரச சன்மார்க்கக் கொள்கைகளை விளக்கிச் சில உரை நூல்களும் இவரால் எழுதப் பட்டன.

''அருட் பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை' என்பது இவரது முழக்கம்.

''உள்ளத்தில் பொங்கி வழியும் ஆசைகள் குறைந்து உலகம் சீர்திருந்த வேண்டும்; படைகொண்டு உயிர்க் கொலை புரியும் போர்கள் ஒழிய வேண்டுப்; கருணை நெறி பரவ வேண்டும்; ஒருமைப்பாடு உலகமெங்கும் தழைக்க வேண்டும்; மத நெறிகள் ஒன்றாக இணைய வேண்டும்; வட்டிமேல் வட்டி கொள்ளும் மார்க்கம் மறைய வேண்டும்: ஆண்-பெண் ஆகியோரிடத்துச் சாதி, சமயம், வருணாச்சிரமம், கோத்திரம், குலம், உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமைகள் முற்றிலும் மறைந்து, எல்லோரும் சமம் என்ற பொதுமைநெறி ஓங்கவேண்டும்.'' என்பன இராமலிங்கர் கொள்கைகள்.

'தன்னையறிந்தால் இன்பமுறலாம்' என்பது வள்ளலார் கருத்து. அன்பு நெறியே இவரது சமயநெறி. மன்னுயிர்க்குப் பணி செய்வதே மகேசன் பணி என்பது இவர் நம்பிக்கை. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியது வள்ளலாரின் கருணை உள்ளம்.

"அப்பாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்:
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிஇடல் வேண்டும்."

என்பது இறைவனிடம் இவர் செய்துகொண்ட வேண்டுகோள். தமிழ் மறுமலர்ச்சியின் ஆரம்பகாலம் எனக் கருதப் பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டில் எளிய இலக்கியப் பாடலுக்கு வித்திட்டவர் இராமலிங்கர். பாமரரும் படித் தறியத் தக்க பாரதியாரின் எளிய பாடல்கள் தோன்று வதற்கு இப்பாடல்கள் வழிகாட்டியுதவின.

அறச்சாலையும் ஞானசபையும்

இறைவழி பாட்டிலும், பொதுமை நெறியிலும் ஆழ்ந்த பற்றுடையவரான வள்ளலார் வடலூரில் 'சத்திய தரும சாலை' என்னும் அறநிலையம் ஒன்றை நிறுவினார். இவரது பொதுமை நெறியை ஏற்றுக்கொண்டு மாணாக் கராக விளங்கிய செல்வர்கள் பலரது உதவியால் இச்சாலை சிறப்புற அமைந்தது. இவ்வறச் சாலையில் நாள்தோறும் எண்ணற்ற எளிய மக்களுக்கு இலவச உணவு அளிக்கப் பட்டு வந்தது. இன்றும் அளிக்கப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் அடிகளார் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற ஞானசபை ஒன்றை அமைத்து அதன் வாயிலாக நல்ல அறக் கருத்துக்களை மக்களிடையே பரப் பினார். இவரது அருள் உள்ளத்தையும், செயற்கரிய

செயல் வன்மையையும், சித்தாற்றலையும் உணர்ந்த பலர் இவரைப் பின்பற்றி மாணவராயினர். இவர்களது உதவியால் இராமலிங்கர் மறைந்த பின்பும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஒளி வழிபாடு:

வடலூரில் அன்று முதல் இன்று வரை நடைபெற்று வருவது உருவ வழிபாடு அன்று; ஒளிவழிபாடுதான். தைத் திங்கள் பூச நாளன்று வடலூரில் நடைபெறும் ஒளிக் காட்சி விழாவைக் காண மக்கள் திரள் திரளாகக் கூடு கின்றனர். ஏழு திரைகளால் மறைக்கப்பட்டிருக்கும் அருள் ஒளி, ஒவ்வொன்றாகத் திரைகள் நீங்கிய நிலையில் காட்சி யளிப்பதைக்காணக் கண்கள் கோடி வேண்டும். ஒவ்வொரு பூசநாள் அன்றும் இவ்விழா சிறப்பாக நடந்து வருகின்றது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்விழாவிற்கு வந்து அருள் ஒளியைக் கண்டு மகிழ்கின்றனர். வண்டி வண்டி யாக உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்று அங்கேயே சமையல் செய்து எளியவர்களுக்கு உணவு அளித்து உள்ளம் நிறைகின்றனர்.

இச் சத்திய ஞானசபை அண்மையில் திருமுருக கிருபா னந்த வாரியார் சுவாமிகளின் பெருமுயற்சியால் திருப் பணி செய்யப்பட்டுப் புதுமைப் பொலிவுடன் திகழ் கின்றது. வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட மேட்டுக் குப்பம், கருங்குழி, மருதூர் ஆகியவை காணத்தக்க இடங்கள்.

வள்ளலார் வரிசை நூல்கள்

வள்ளலார்

சீவகாருணிய ஒழுக்கம்
மனுமுறை கண்ட வாசகம்
அருட்பெருஞ்சோதி அகவல்
விண்ணப்பங்கள்
வடிவுடை மாணிக்க மாலை

க. வெள்ளைவாரணனார்

திருவருட்பாச் சிந்தனை

குன்றியம் பழ. சண்முகனார்


வள்ளலார்
அருட்பிரகாச வள்ளலார்
திருவருட்பா (கற்பதிப்புப் பாடல்கள்)

புலவர் செந்துறைமுத்து

வள்ளலாரும் திருவள்ளுவரும்
வள்ளலாரும் திருமூலரும்
வள்ளலாரும் திருஞானசம்பந்தரும்
வள்ளலாரும் தாயுமானவரும்

கோயில் வரிசை நூல்கள்

திருக்கோயில் வழிபாடு
தில்லைத் திருக்கோயில்
திருக்காளத்தி
திருவண்ணாமலை
திருவையாறு
திருப்பதி வெங்கடாசலபதி
திருநள்ளாறு சனீஸ்வரர்
திருச்சிக் கோயில்கள்
சோழநாட்டுக் கோயில்கள்
பாண்டிய நாட்டுக் கோயில்கள்
தொண்டை நாட்டுக் கோயில்கள்
கொங்கு நாட்டுக் கோயில்கள்
நடு நாட்டுக் கோயில்கள்
சென்னைக் கோயில்கள்
குடந்தைக் கோயில்கள்
சிறப்புமிக்க கோயில்கள்
தமிழ் நாட்டுப் பெரிய கோயில்கள்
அட்ட வீரட்டத் தலங்கள்
பஞ்ச பூதத் தலங்கள்
சக்தி தலங்கள்
முருகன் தலங்கள் 33
மதுரை மீனாட்சி
காஞ்சி காமாட்சி
பழநி
காசி
ஆறுபடை வீடுகள்
முருகன் புகழ் மாலை
திருமுறைப் பெருமை
வயிரவன் கோயில்
பிள்ளையார்பட்டி
இலுப்பைக்குடிக் கோயில்
இரணியூர்க் கோயில்
நேமம் கோயில்
மாத்தூர் கோயில்



பதிப்பாசிரியர்

தமிழவேள் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறைஇயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக் கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர். தமிழகப் புலவர் குழுவின் துணைத்தலைவர். பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார். பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய "தாகூர்" நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறை தோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக் கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், "தமிழவேள்" என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, "தமிழ் நெறிக் காவலர்" என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.